தேவன் அழைத்த போது ...



சகோ. R.D. வில்லியம்ஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பவுல் நற்செய்தி இயக்கம் - இந்தியா
த.பெ.எண். 19 - தென்காசி.

தேவன் அழைத்தபோது...

சகோ. R.D. வில்லியம்ஸ்

வெளியீடு

PGM
இலக்கிய ஊழியம்
தென்காசி - 627 811
போன்: 91-4633-325436

First Edition October 2002
1000 Copies

© Copy Right Reserved

Printed at : Bright Printers
Tenkasi . Ph : 04633- 322049

விலை : ரூ. 20/-

THE CHURCH OF SOUTH INDIA
The Rt Rev Jason S Dharmaraj
Bishop in Tirunelveli - Retired

Telephone (+91) 0462 - 572930
E-mail : jdharma@pronet.net.in

"Immanuel"
4, Vasantham Colony,
Maharajanagar,
Tirunelveli - 627 011.
India.

Date: 27 - 09 - 2002

திரு. **R.D. வில்லியம்ஸ்** அவர்கள் எழுதியுள்ள **"தேவன் அழைத்தபோது"** என்ற புத்தகத்திற்கு முன்னுரை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். கடவுளின் திருப்பணிக்கென்று அவர்கள் அழைக்கப்படுகையில் அவர்கள் வாழ்க்கையில் நேரிட்ட பல அனுபவங்களை இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். இறைவன் பற்பல விதங்களில் தமது பிள்ளைகளை தெரிந்தெடுத்து, அவரது பணிக்கென்று அழைக்கிறார். இந்த அனுபவங்களில், கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் அவரின் மகிமையையும், அற்புதமான வழிநடத்தலையும் தங்கள் வாழ்க்கையில் உணர்கிறார்கள். அவைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கையில்,மற்றவர்களும் இந்த அனுபவங்கள் மூலமாக பயன்பெறுவார்கள். இதன் அடிப்படையிலேயே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தை ஆக்கியோனை நான் நன்கு அறிவேன். அவரது மனைவி திருமதி. **ரெஜினாள் வில்லியம்ஸ்** அவர்களை நான் உயர்நிலைப்பள்ளி மாணவியாக அறிவேன். சகோதரி ஆசிரியை பயிற்சி பெறவும், பின் ஆசிரியையாக பணியாற்றவும் கடவுள் ஆச்சரியமாக வழிநடத்தியுள்ளார். அன்பு சகோதரன் திரு. வில்லியம்ஸ் ரெஜினாவை மணந்து ஒரு மகன், ஒரு பெண் குழந்தையினால் இவர்களின் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது கடவுளின் மேலான கிருபையே.

தொடர்ந்து திரு. வில்லியம்ஸ் அவர்களின் இறைப்பணி ஆசீர்வதிக்கப்பட, அவர்களின் குடும்பவாழ்க்கை செழிக்க, இயேசுவின் திருநாமம் இவர்களின் மூலமாக மகிமைப்பட இறைவனை வேண்டுகிறேன். இப்புத்தகம் இந்த ஆசீர்வாதங்களுக்கு வழி வகுக்கும் என்று கிறிஸ்துவுக்குள் உறுதியாக நம்புகிறேன்.

இயேசுவின் திருப்பணியில்

Jason S. Dharmaraj
27.9.02

CSI - TIRUNELVELI DIOCESE
TENKASI PASTORATE
The Rev. [illegible], B.Sc.,B.D.,
Chairman & Correspondent
[illegible] CMS Primary & Middle Schools

☎ : 91-4633-[illegible]
Christ Church Compound,
417, Kannimaramman Kovil Street,
TENKASI - 627 811.

Date: 26-09-2002

Life is louder than words. Moreover experiences of a believer's life is the powerful sermon that ever preached in this world. This book exposes a man's life before and after accepting Jesus Christ. When you flip through pages you can read the feelings of the author in various situations. And I am sure that this experiences of Bro. **R.D. Williams** will console many readers of this book and bring hope in all their despondency, desperations and failures.

Bro. **R.D. Williams** is personally known to me since he began his ministry. He is very simple and wants to communicate the people what the Lord Almighty has done in his life. God Bless the Author and every one who are going to read this book.

முன்னுரை

அன்பு சகோதர சகோதரிகளே !

கர்த்தரும் இரட்சகருமான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சில ஆண்டுகளாக என் உள்ளத்தின் ஆழத்தில் அமிழ்ந்து கிடந்த எண்ண வெளிப்பாட்டை இப்புத்தகத்தின் வாயிலாக உங்கள் இதயத்தில் கொண்டு வரும் வாய்ப்பிற்காக தேவனைத் துதிக்கிறேன் . தேவன் என்னை அவருடைய இராஜ்ஜியத்தை கட்டும் படி ஏற்கனவே முன்குறித்திருக்கிறார் ஆனால் அதை அறியாத நான் இவ்வுலகத்தை நோக்கி ஓட ஆரம்பித்த பொழுது என் ஓட்டத்தை தடுத்து நிறுத்தி நான் வகுத்த பாதையில் இருந்து அவர் வகுத்த பாதையை நோக்கி ஓடச் செய்தார் அவர் அழைத்த அழைப்பை உணர்ந்து கொள்ள ஏறக்குறைய நான்கு ஆண்டுகாலம் பிடித்தது இந்த நான்கு ஆண்டு காலமும் தேவன் என்னோடு இடைபட்ட விதத்தையும் அதன் பின்பு அவருடைய ஊழியனாகி 5 ஆண்டு காலமாக அவர் நடத்தின பாதையை யும் இந்நூல் வாயிலாக உங்களுக்கு விளக்கிக் காட்ட விரும்புகிறேன். அவருடைய அழைப்பை நான் ஏற்றுக்கொண்ட போது தான் தெரிந்தது அவரே என்னை அழைத்தாரென்று ஏனெனில் அவரே என்னை முன்குறித்திருக்கிறார் (ஏரே 1: 5)

தேவன் என்னை அழைத்தபோது என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும் அனுபவத்தையும் அதன்மூலம் நான் பெற்றுக்கொண்ட ஞானத்தையும் உங்களுக்கு விளக்கிக் காட்டவே தேவன் என்னை அழைத்த போது என்ற நூல் இன்று அநேகர் ஆண்டவருடைய அழைப்பை அறிந்து கொள்ளாமல் இருக்கலாம். இந்நூலை வாசிக்கும் அவர்கள் அதை அறிந்து கொள்ளலாம் அது மட்டுமல்ல வாழ்க்கையின் ஒவ்வொரு நேரத்திலேயும் நாம் எப்படி செயல்பட வேண்டும் ஆண்டவர் நாம் எப்படி இருக்க விரும்புகிறார் என்பதையும் பல சம்பவங்கள் மூலமாக இந்நூல் அறிவுறுத்திக் காட்டும் உண்மையான தேவனுடைய பிள்ளைகள் நாம் இப்போது எப்படி இருக்கிறோம், ஆனால் நாம் எப்படி இருக்க வேண்டும் . (வச:1யோவான் 2:6) என்பதையும் இந்நூல் வாயிலாக அறிந்து கொள்வார்கள் இது என்னுடைய சாட்சி மட்டுமல்ல நாம் எப்படி இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த

முன் உதாரணமாகும் இதை வாசிக்கும் போது உங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் வரும் என்பதில சந்தேகம் இல்லை.

இந்நூலை வெளியிட வேண்டுமென்று பல நாட்கள் நான் நினைத்ததுண்டு பல்வேறு சமயங்களில் பல திருச்சபைகளில் எனது சாட்சியை நான் அறிவித்தபொழுது அநேகர் வியப்படைந்து புதிய மாற்றம் பெற்றுள்ளார்கள். அநேகர் எந்த ஒரு மாற்றமும் பெறாமல் பழைய வாழ்க்கையிலேயே இருப்பதைக் காண முடிந்தது என்னுடைய விருப்பம் எல்லோரும் தேவன் விரும்பும் பிள்ளைகளாக 'என் இருதயத்திற்கு ஏற்றவன்' என்று சொல்லும் அளவிற்கு மாற வேண்டும் என்பதே . ஆகவே அதன் பின்பு சபைகளில் சாட்சி சொல்லுவதை நிறுத்தி விட்டேன் சில காலம் கழித்து தேவன் என்னோடு சொப்பனத்தில் இக்காரியத்தைக் குறித்துப் பேசினார் சீக்கிரமாக நான் உன்னை அழைத்த காரியத்தை குறித்து சாட்சி புத்தகமாக வெளியிடு என்றார். அதன் பின்பும் சில காலம் கழித்தே இப்புத்தகத்தை வெளியிடும் சிலாக்கியத்தை எனக்கு கொடுத்துள்ளார் இந்த 9 வருட அனுபவத்தை உங்களுக்கு நான் தொகுத்து வழங்யிருக்கிறேன்.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே நீங்களும் தேவனுடைய சித்தத்தை உணர்ந்து உங்கள் வாழ்க்கையில் செயல்படவும் அவருடைய ஆசீர்வாதத்தை நிறைவாய்ப் பெற்ற பாத்திரமாக விளங்கவும் ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வாராக ஒரே ஒரு வாழ்க்கை அது தேவனுக்காக இருக்கட்டும் தேவன் கொடுத்த வாழ்க்கை தேவனுக்கே கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! இதை வாசிக்கின்ற உங்களுக்காக நான் விசேஷமாக ஜெபிக்கின்றேன். தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

உங்கள் சகோதரன்

R.D. Williams

அர்ப்பணம்

என்னை வாழ்விக்க வந்தவரும் நான் அறியாமல் இருக்கும் போது அதை அறியச் செய்தவரும் எனக்காக தமது உயிரை கொடுத்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்த கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுக்கே.

அர்ப்பணம்.

பொருளடக்கம்

1. இளமைக் கல்வியும் தொழிலும்
2. தோல்விகளை சந்தித்தல்
3. பாடசாலை தோற்றுவித்தல்
4. ஊழிய அழைப்பும், தேவனின் இடைபடுதலும்
5. மாயை மாயை எல்லாம் மாயை
6. திருமணமும் குடும்ப வாழ்வும்
7. அழைப்பின் தீவிரம்
8. PGM ஊழியம் தோன்றிய வரலாறு
9. ஊழியப் பாதையில் அற்புதங்கள்
10. தற்போதைய ஊழியம் மற்றும் எதிர்கால திட்டங்கள்

1. இளமைக் கல்வியும் தொழிலும்

தென்பொதிகைத் தென்றலும் திருக்குற்றால மலைச்சாரலும் ஒருங்கே இசைந்து வரும் இனிய சூழலின் அழகிய கிராமம் அது உலகம் முழுவதும் புகழ் வாய்ந்த குற்றால அருவியின் அருகில் உள்ள கிராமமது. திரும்பும் இடமெல்லாம் பச்சைப் பசேல் என செழிப்பாய் காட்சி தரும் வளமிக்க கிராமம் சிறந்த தண்ணீர் வசதியும் ஆரம்ப கல்வி சாலையும் போக்கு வரத்து வசதியும் உள்ள கிராமம் முன் காலத்தில் பராக்கிரம பாண்டிய மன்னன் ஆண்டதாகக் கூறப்படும் தென்காசியின் அருகே உள்ளது சாதாரண மக்களின் தொழிலாக விவசாயம் உண்டு. இதன் பெயர் தான் மத்தளம்பாறை. பெயருக்குக் காரணம் ஏதேதோ சொல்லுவார்கள். இக்கிராமத்தில்தான் நான் பிறந்தேன் தொடக்ககல்வியை அதே கிராமத்தில் உள்ள பள்ளியில் பயின்று பின் அதன் அருகில் உள்ள கிராமத்தில் உயர்நிலைக் கல்வியை முடித்து பின் மேல்நிலைக்கல்வியும் படித்தேன்.

பெற்றோர் : முன் நாட்களில் சுவிசேஷம் எட்டியிராத கிராமம் அது எனது தாத்தாவினுடைய (அம்மா வழி) அப்பா முதல் தலைமுறையாக அக்கிராமத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர் இவர் கிறிஸ்துவின் மீது தீவிர விசுவாசம் கொண்டவர். முற்றிலும் ஆண்டவரை அறியாத மக்கள் நிறைந்த அக்கிராமத்தில் இவர் ஒரு தீவிர கிறிஸ்தவர் ஒரு முறை புற மார்க்கத்தாராகிய ஜனங்கள் அக்கால வழகத்தின் படி இவரை ஊரைவிட்டு விலக்கி வைத்தார்கள் வெளியில் எங்கும் யாரிடமும் பேச முடியாது கடைகளில் பொருட்கள் வாங்க முடியாது என்று தடைவிதித்தனர். முகச்சவரம் செய்து கொள்ளவோ தலை முடி அலங்காரம் செய்து கொள்ளவும் கூட கடைகளில் அனுமதி கிடையாது. இந்த சூழ்நிலை ஏற்பட்ட போது இவர் கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக இருந்தார் தன் வாழ்நாள் முழுவதும் சவரம் செய்து கொள்ளாமலே கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக தாடியுடன் வாழ்ந்தார். அன்று முதல் மக்கள் அவரை சந்நியாசி என்று

அழைக்கத்தொடங்கினர் அவரது மகனாக எனது தாயாரின் தந்தையார் (தாத்தா) பிறந்தார் அவரும் தந்தையைப் போலவே கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக வாழ்ந்தார். அவருடைய மகளாக எனது தாயார் திருமதி. சரோஜினி அவரக்ள் அதே கிராமத்தில் வாழ்ந்து வாழ்ந்தார்கள் எனது தந்தையார் பின்பு எனது தாயார் மூலமாக ஆண்டவரின் பிள்ளையாக மாற்றப்பட்டார்கள்.

குழந்தைப்பருவம் :

இங்கிருந்து தான் தேவன் என்னை ஊழியனாக தெரிந்து கொள்ளும் காரணம் தோன்றுகிறது. எனது தந்தையார் பெயர் வெள்ளப்பாண்டி ஞானஸ்நானத்திற்கு பிறகு டேனியல் என்று பெயர் பெற்றார்கள் இவர்களின் நான்காவது மகனாக நான் பிறந்தேன் எனக்கு நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உண்டு. குழந்தைப் பருவம் முதல் மிகவும் பக்தியாக நான் வளர்க்கப்பட்டேன். நாங்கள் குடும்பமாக ஆலயத்திற்குச் செல்லுவதும் திரும்பி வருவதும மற்வர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இன்னும் சில ஆண்டுகள் கழித்து முழு குடும்பமாக 9 பேரும் ஆலயத்திற்குச் செல்வதை பார்க்கும் பொழுது மக்களுக்கு ஒருவித எரிச்சலையும் பொறாமையையும் ஏற்படுத்தியது எனது தந்தையின் குடும்பத்தை சார்ந்த நபர்கள் அவர்களது குல தெய்வத்திற்கு வழிபட செல்ல வேண்டிய நாங்கள் தேவனுடைய ஆலயத்திற்கு செல்வதை பார்க்கும் பொழுது இயல்பாகவே எங்களை விரோதித்தனர். மேலும் அக்கிராமத்தில் உள்ள மற்ற மக்களும் உள்ளுர எதிர்மனப்பாங்கு கொண்டார்கள். பல்வேறு சூழ்நிலைகளில் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

சிறு வயது முதல் இவையெல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் நான் வளர்ந்தேன். எனது பெற்றோர் என்னை மிகவும் நேர்த்தியாக கவனித்து வளர்த்தனர். நானும் ஆரம்பம் முதலே கல்வியில் சிறந்து

விளங்கினேன். எனது அனைத்து வகுப்புகளிலும் நானே முதல் மாணவனாக விளங்கினேன். எனது ஆசிரியர்கள் என்னை மிகவும் பாராட்டுவது உண்டு எங்களது சொந்த ஊரிலேயே எட்டாவது வகுப்பு வரை நான் கல்வி பயின்றேன். எங்களது குடும்பம் நடுத்தரமான குடும்பம். எனது தாயார் தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தில் வேலை செய்து வந்தார்கள். எனது தந்தையார் மத்திய அரசின் LICயில் முகவராக வேலைசெய்து கொண்டு மேலும் சொந்த மாக மரம் விற்பனை செய்யும் டிம்பர்ஸ் ஷாப் ஒன்றையும் நடத்தி வந்தார்கள். அந்நாட்களில் நான் கல்வியில் மிகவும் அதிகமாக நாட்டம் செலுத்தினேன். 5 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது சரக அளவில் திறனாய்வுத்தேர்வில் வெற்றி பெற்றேன். அதேநேரம் நான் ஆவிக்குரிய காரியங்களிலேயும் சிறப்பாக கற்பிக்கப்பட்டேன். ஆலயத்தின் பணிகளில் மிகவும் கரிசனை கொண்டேன். அப்போது எனது கிராமத்தின் ஆலயத்தின் சாவி எங்கள் வீட்டில் இருக்கும் உபதேசியார், குருவானவர், யாவரும் எங்களது வீட்டிற்கு வந்து போவது வழக்கம். மற்றும் பல ஊழியர்கள் வந்து செல்வதுண்டு.

முன்குறித்தல்:

எங்கள் குடும்பத்தில் எனது அண்ணன் அப்பொழுது ஆலய பராமரிப்பு வேலையை செய்து வந்தார்கள். எனது பெற்றோர் தங்களது மூத்த மகனை தேவனுடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்திருந்தனர். நானும் ஆலய காரியங்களில் நேரம் செலவழிப்பதுண்டு. அப்போது நான் ஆறாவது படித்துக் கொண்டிருந்தேன். எனது மூத்த சகோதரி 10வது வகுப்பு அரசுத் தேர்வு எழுதும் நேரம். ஒரு நாள் நானும் இரண்டு சகோதரிகளும் ஆலயத்தில் தேர்வின் பொருட்டு ஜெபிப்பதற்காக ஆலயத்திற்கு சென்றோம். ஆலயத்தில் கதவை நான் திறந்தேன். மிகவும் இருளாக இருந்தது. அதே சமயம் என் கண்களுக்கு முன்பாக ஒரு பேரொளியைக் கண்டேன். இமைப்பொழுதில் அப்பேரொளி மறைந்து போவதையும் அதே

வேளையில் ஒருவர் நடந்து செல்வதைப்போன்ற சத்தத்தையும் கேட்டேன். அதன் பின்பு நான் மின்விளக்குகளை எரியச் செய்தேன். நான் கண்ட காட்சியையும் கேட்ட சத்தத்தையும் விளக்கிக் கூறினேன். மற்றவர்கள் மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். அதன்பின்பு நாங்கள் ஜெபித்து விட்டு கடந்து வந்தோம். பின் இச்செய்தியை திருச்சபையின் மற்ற மக்கள் யாவரும் கேள்விப்பட்டனர். அப்போது ஆண்டவரே எனக்கு காட்சி கொடுத்தார் எனக்கூறினார்கள். அப்போது இச்செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டது. நான் இப்பொழுது நினைவுகூறும் போது தேவனே என்னை அவரது ஊழியத்திற்கு முன்குறித்தார் என்பதை உணர்கிறேன். (எரே 1:5)

கல்வி:

நாட்கள் சென்றது எனது மூத்த சகோதரன் மேற்படிப்பை தொடர்வதால் ஆலயத்தை பராமரிக்கும் பொறுப்பு என்னிடம் வந்தது. நான் எனது வேலைகளைச் செய்து வந்தேன். அவ்வேளையில் எங்கள் கிராமத்தில் புதிய ஆலயம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று சேகரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டு தென்காசி - அம்பை சாலையில் ஆலயம் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது நானும் ஆலயக் காரியங்களை கவனித்துக் கொண்டிருந்தேன். எனக்கு சம்பளமாக 5 ரூபாய் கொடுத்தார்கள். நான் 7,8 வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் ஆலயக் கட்டுமானப்பணி நடக்கும் போது நான் சென்று பார்த்து மகிழ்ச்சியடைவேன். ஒவ்வொரு வேலைகள் நிறைவடையும் போது நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அவருடைய ஆலயத்தின் காரியங்களில் அவ்வளவு ஈடுபாடு உண்டு. நாள்தோறும் அதைப் பார்த்துப் பார்த்து பரவசமடைவேன். ஏனெனில் ஆலயத்தின் வழியாகவே நான் எனது பள்ளிக்கு செல்லவேண்டும். அதன் பின்பு நான் எனது கிராமத்திற்கு அருகில் உள்ள கிராமத்திற்கு உயர்நிலை கல்விக்காய் சென்றேன். 9 மற்றும் 10வது வகுப்புகளை அங்கு பயின்றேன். எனது தந்தையார் வைத்திருந்த கடையில்

விண்ணப்பித்தேன். எங்கும் இடம் கிடைக்கவில்லை. அதன்பின்பு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு விண்ணப்பித்தேன். நான் எங்கும் சென்று சேர முடியவில்லை. அதன்பின்பு இராஜபாளையம் சென்று சுமார் 6 மாதங்கள் அங்கே வேலை செய்தேன். அப்போது Type Writting கற்றுக்கொண்டேன். அங்கிருந்த ஒரு சபையோடு இணைந்து பலவித நிலைமைகளில் பலவித சூழ்நிலைகளில் இருந்து வந்தபோது தேவன் என்னை அவருடைய வேலையைச் செய்வதற்கு பயிற்றுவித்துக் கொண்டே வந்தார். 6 மாதம் கழித்து சொந்த ஊர் திருப்பி வந்தேன். தொடர்ந்து அங்கு Type Writting கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது அந்த Institute -ஐ சார்ந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றில் வேலை செய்தேன். அதன் பிறகுதென்காசியில் ஒரு கடையில் கடையை நடத்தும் பொறுப்புடன் வேலை செய்தேன். அப்போது எனக்கு Electronics பொருட்களைப் பற்றியும் விற்பனையைப் பற்றியும் தெரியவந்தது. அப்போது என்னோடு கூட இன்னொரு நண்பரும் அதே கடையில் வேலை செய்தார். அவர் ஒரு இஸ்லாமிய சகோதரர். அப்போது நான் முகவராக சேர்ந்து வேலை செய்ய எனது தந்தையார் என்னை தூண்டினார்கள். அப்போது எனக்கு 18 வயது பூர்த்தி ஆகவில்லை. அதற்கு முன்பாகவே நான் அழைத்து செல்லப்பட்டு மானேஜரை சந்தித்து முகவராகும்படி தேவையான எல்லா ஒழுங்குகளையும் செய்தேன். எனது தந்தையார் LIC முகவராக இருந்தபடியினால் இதே வேலையை நானும் செய்வதற்கு எனக்கு ஊக்கம் கொடுத்தார்கள். எனவே நான் முகவராவதற்கு முன்பே சில பாலிசிகளை சேர்த்து தயாராக வைத்திருந்தேன். நான் அதிகமாக பொருள் சேர்க்க வேண்டும், பணம் ஈட்ட வேண்டும் என்ற துடிப்புள்ள வனாயிருந்தேன். எனவே மிக உற்சாகமாக அதற்காக வேலை செய்ய ஆரம்பித்தேன். பல இடங்களுக்கு சென்று நண்பர்கள், உறவினர்கள் போன்றோரை அதற்காக கேன்வாஸ் செய்ய ஆரம்பித்தேன். சில மாதங்களுக்குள் 18 வயது பூர்த்தியானபோது முகவரானேன். இந்த

கடையில் வேலை செய்து கொண்டே பணியையும் செய்தேன். என்னோடிந்த நண்பரையும் அதில் சேர்த்தேன். அந்த கடையில் எனக்கு குறைவான சம்பளமே கிடைத்தது (ரூ 300) இப்படியே சில மாதங்கள் கழிந்தது.

அநீதி இழைக்கப்பட்டது:

1994-ம் வருடம் மார்ச் மாதம் 14 ஆம் நாள் எங்கள் வீட்டின் அருகிலுள்ள இந்துக் கோவிலைச் சேர்ந்த மக்கள் எங்களுக்கு விரோதமாக ஒரு பெரிய சுவர் ஒன்றை கட்டினார்கள். முழு கிராமமும் திரண்டு வந்து எங்கள் இடத்தில் இருந்த மரக்கடையின் கம்புகள் கூரைகள் இவற்றை பிய்த்து எறிந்து விட்டார்கள். எங்கள் இடத்தில் இருந்த மரத்தினை வெட்டி சாய்த்தார்கள். எங்கள் இடத்திலேயே அவர்கள் பெரிய காம்பொண்ட் சுவர் ஒன்றை கட்ட ஆரம்பித்தார்கள். இது எனது மனதை வெகுவாக பாதித்தது. நாங்கள் நெடுஞ்சாலைத் துறை உள்ளாட்சித் துறையைச் சார்ந்த பஞ்சாயத்து போன்ற அதிகாரிகளுக்கெல்லாம் மனுக்களைக் கொடுத்தோம். காவல் நிலையத்திலும் புகார் செய்தோம். எந்த ஒரு பலனும் இல்லை. நாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்காகவே எங்களை விரோதித்தனர். இதையெல்லாம் பார்த்த நான் கொதிப்படைந்தேன். அவர்களுக்கு எப்படியாவது பாடம் புகட்ட வேண்டும் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என நினைக்க ஆரம்பித்தேன். அப்போது முதலாவது பணபலம் வேண்டும் என்று கருதினேன். எனவே வெகு வேகமாக பணம் சம்பாத்தியம் செய்ய வேண்டும் என செயல்பட ஆரம்பித்தேன். நான் வாங்கிய சம்பளம் எனக்கு போதாது.LIC யின் வருமானமும் எனக்கு காணாது. எனவே அடுத்து என்ன செய்வது என்ற யோசிக்க ஆரம்பித்தேன். Electronics வியாபாரத்தைக் குறித்து அறிந்திருந்தபடியினால் அதைச் செய்யலாம் என தீர்மானித்தேன். ஆகவே அந்த கடையில் இருந்து நின்றுவிட முடிவு செய்தேன். கடை

முதலாளியிடம் எனது விருப்பத்தை தெரிவித்தேன். அவர் நீ நிற்க வேண்டாம். உனது தந்தையைப் பார்த்துப் பேசுகிறேன் என்றார். ஆனால் நானோ அவரிடம் நிலைமையைச் சொல்லி எனது அந்த மாத சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். அப்போது எனது மூத்த சகோதரி CMS பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்தார்கள். திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு எங்கள் வீட்டிலும் சூழ்நிலை சற்று கடினமாக இருந்தது.

தொழில் தொடங்குதல் :

நான் எனது கையில் இருந்த கடைசி மாத சம்பளத்தை வைத்து தொழில் தொடங்க முடிவு செய்தேன். தவணை முறையில் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றை ஆரம்பிக்கும்படி தீர்மானித்தேன். எனவே அச்சகம் ஒன்றிற்கு சென்று பணம் வசூல் செய்யும் அட்டைகளை பிரிண்ட் செய்து கிராமம் கிராமமாக சென்று கேன்வாஸ் செய்ய ஆரம்பித்தேன். சில வாலிபர்கள் என்னிடத்தில் வேலக்கு வந்தார்கள். அவர்கள் மூலம் தொழிலை மேலும் விரிவுபடுத்தினேன். பணம் வசூல் ஆனது. வேண்டிய பொருட்களை கொடுக்க ஆரம்பித்தேன். நல்ல லாபம் கிடைத்தது. எனவே இன்னும் வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தேன். நாம் கடினமாக உழைத்தால் இன்னும் அதிகமாக பொருள் ஈட்ட முடியும் என நினைத்தேன். நாம் முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை என்று கருதினேன். மத்தளம்பாறையில் ஒரு கடையை வாடகைக்கு அமர்த்தி ராஜ் ஏஜென்ஸிஸ் என்ற பெயரில் கடையை நடத்தினேன். அப்போது எனது மூத்த சகோதரனிற்கும் திருமணம் முடிந்தது. தென்காசியில் எனது தந்தையார் மரக்கடை ஒன்றை தென்காசியில் ஆரம்பித்து நடத்தினார்கள். அதை நாங்கள் கவனித்து வந்தோம். நான் மத்தளம்பாறையில் ஏஜென்ஸியை இன்னும் வேகமாக நடத்தினேன். சுமார் 50 கிராமங்களுக்கு வியாபார விஷயமாக செல்வதுண்டு. அப்போது எங்களிடத்தில் அவந்தி மொபெட் ஒன்று உண்டு. அதில் பிரயாணம் செய்து அனைத்து கிராமங்களுக்கும் செல்வேன். சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் மிக

அதிகமான வசூல் இருக்கும். ஒரு வருடமாக மொபெட்டில் சென்று வியாபாரத்தை கவனித்தேன். அதிகமான கிராமங்களுக்கு செல்ல வேண்டும் என்னும் தீவிர ஆசை எனக்குள் உருவானது. வியாபாரமும் மிக நன்றாக நடந்தது. எப்போதும் எனது வசம் பொருளாதாரம் இருந்து கொண்டேஇருக்கும். மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதுபோல காணப்படும் எனது கடைக்கு எப்போதும் ஆட்கள் வந்து செல்வார்கள். என்னிடத்தில் வேலைபார்த்த வாலிபர்கள் வந்து வேலைகளை செய்து கொண்டிருப்பார்கள். அப்போது அதிக வியாபாரம் நடைபெற்றபடியால் தொழிலுக்கு தேவையான முதலீடு அதிகம் தேவைப்பட்டது. எனவே முதலீடுகளை உருவாக்குவதற்காக சிட்பண்ட் (சீட்டு நடத்துதல்) ஒன்றை ஆரம்பித்தேன். 5000, 3000 போன்ற சீட்டு குரூப் இவைகளை நடத்துவதின் மூலம் இன்னும் முதலீடு கிடைக்கும் என்று கருதினேன். எனவே 5 ஆயிரம் குரூப்பில் இரண்டும், 3000 குரூப்பில் ஒன்றுமாக 3 குரூப் சீட்டுகளை நடத்தி வந்தேன். தேவன் அப்போதே என்னை தம்முடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கும் வேலையில் இறங்கிவிட்டார். என்றே தோன்றுகிறது. எனவே என்னிடம் ஒவ்வொரு குரூப்பிலும் 15,16 நபர்களே இருந்தார்கள். ஆரம்பத்தில் எனக்கு பெரிய சுமையாக தெரியவில்லை. தவணை முறை வியாபாரமும் நன்றாய் நடந்தது. அதில் இருந்து சீட்டு நடத்துவதற்கு ஏற்ற பணம் கிடைத்தது. ஆனால் சீட்டில் இருந்து ஏற்ற முதலீடு வியாபாரத்திற்கு கிடைக்கவில்லை. இரண்டு தொழில்களும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவை. ஆனால் எப்படியோ பணம் புரண்டு கொண்டிருந்தது. இப்போது இரண்டு தொழில்களானபடியால் வரவு செலவு இன்னும் அதிகம் ஆனது. எனவே நான் இன்னும் சுறுசுறுப்பானேன். இன்னும் பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணம உருவானது. தொழில் மேலும் விரிவடைந்தது. நான் ஏற்கனவே தென்காசியில் வியாபாரிகளுடன் நன்றாக பழகியிருந்தபடியால் எனக்கு வியாபாரத்திற்கு தேவையான பொருட்களை எளிதாக பெற்றுக் கொண்டேன். மேலும் சுமார் 20,000

வரையுள்ள பொருட்களை என்னிடம் கடனாக கொடுக்கும் அளவிற்கு வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. எலக்ட்ரானிக் பொருட்கள் விற்பனையில் நல்ல லாபம் கிடைத்தது. அதே போல் பர்னிச்சர் வியாபாரத்திலும் சரியான லாபம் கிடைத்தது. ஒரு புறம் வியாபாரம், மறுபுறம் சீட்டு, இன்னொரு பக்கம் LIC முகவாண்மை இவை எல்லாவற்றின் மூலமாக வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தது. எப்படியாவது ஏதாவது ஒரு விதத்தில் என்னிடம் பணம் இருந்து கொண்டே இருக்கும். இப்படியே ஓராண்டு காலம் உருண்டோடியது. 94ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி ஓராண்டு நிறைவு பெறும் நிலையில் இருந்தது. அதற்கு முன்பாக நான் ஏற்கனவே பரிசுத்திட்டம் ஒன்றை நடத்தி வந்தேன். வாரம் தோறும் பத்து ரூபாய், 15 ரூபாய்,20 ரூபாய் என்று மக்கள் பணம் செலுத்த வேண்டும். அதற்கான பரிசுப்பொருள் குலுக்கல் முறையில் நடைபெறும். பரிசு பெறுபவர் மீண்டும் பணம் செலுத்தவேண்டாம். இறுதியில் பரிசு பெறுவோர்க்கு சிறப்புப் பரிசாக போர்டபிள் டெலிவிஷன் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மோதிரம் ஒன்றும் பரிசாக வைக்கப்பட்டது. எனவே அவற்றை வழங்குவதற்காகவும், தொழில் இன்னும் விருத்தியடைவதற்காகவும் LIC தொழில் வளர்ச்சிக்காவும் ஓராண்டு நிறைவு விழாவை சிறப்பாக நடத்தவேண்டுமென்று திட்டமிட்டு LIC அதிகாரிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்களை அழைத்து விழா நடைபெற்றது. அனைவரும் மிகவும் ஆச்சரியமாகவும், வியப்பாகவும், இருந்தார்கள். LIC யில் அப்போது இருந்த உதவி மேனேஜர் திரு. சரசு சங்கரகிருஷ்ணன் இதில் கலந்துகொண்டார்கள். அதன்பிறகு மீண்டும் பரிசுத்திட்டங்கள், சீட்டு, மற்றும் தவணை முறை வியாபாரம் எல்லாம் நடந்தது.

இரு சக்கர வாகனம் வாங்குதல் :

பண வசூலுக்காக செல்வதற்கு 100 CC வாகனம் வேண்டுமென்று நினைத்தேன். எனவே என்னிடம் இருந்த கொஞ்சம் பணத்தை எடுத்து ஒரு பழைய K.பஜாஜ் வாகனம் ஒன்றை ஒரு நண்பர்

மூலம் வாங்கிக் கொண்டேன். ஆனால் அதில் நான் ஏமாற்றப்பட்டேன். அந்த வாகனம் நல்ல வாகனம் அன்று எனவே அதை பார்த்த ஆட்டோ கன்சல்டிங் ஏஜென்ட் ஒருவர் அதை விற்றுவிட்டு வேறு வாகனம் வாங்கித்தருகிறேன் என்று சொல்லி அவரும்என்னை ஏமாற்றிவிட்டார் கடைசியாக ஹீரோ ஹோண்டா Hero Honda CD 100 என்ற வாகனம் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அந்த வாகனத்தில் கிக் ஸ்டாட்டர் உடைந்து போய் வெல்டிங் செய்யப்பட்டிருந்தது. மற்றபடி மிகவும் நன்றாக இருந்தது. எனவே அந்த வாகனத்தை பயன்படுத்தி வந்தேன். அந்த வாகனத்தை வாங்கின பின்பு சில காரணங்களால் தொழிலில் மிகவும் சரிவு ஏற்பட்டது. சீட்டு நடத்தவதற்கேற்ற பொருளாதாரம் சரியாக கிடைக்க வில்லை. வாகனத்திற்கான மாத தவனைகளை செலுத்தவும் சிரமம் ஏற்பட்டது. எனவே அப்போது நான் இப்படியாக யோசிக்க ஆரம்பித்தேன். இந்த நிலையில் இருக்கும் போதுவேறு ஒரு நல்ல நமக்கு ஏற்ற ஒரு தொழிலை செய்யவேண்டுமென்று நினைத்தேன். எனவே என் எல்க்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனையில் ஏற்படும் ரிப்பேர்களுக்கு நாங்கள் பொறுப்பு இல்லை என்ற நிலையிலும், மக்கள் தவனை முறையில் பணம் செலுத்துவதாலும், பாதிப்பணம் அவர்களுடையதாகவும், மீதிப்பணம் கம்பெனியுடையதாகவும் இருக்கும் போது ஒன்றும் செய்ய முடிவதில்லை. அந்த நாட்களில் நான் அடைந்த சிரமத்திற்கு அளவே இல்லை. எல்லாவற்றையும் விலாவாரியாக என்னால் எழுதவும் முடியாது. எழுதினால் பக்கங்கள் போதாது. ஒவ்வொரு நாளிலும் அநேகர் என்னை ஏசுவதும், பேசுவதுமாக இருந்ததுண்டு. ஏனெனில் அவருடைய ஊழியத்தை நான் செய்யும் போது அவருக்காக சகலத்தையும் தாங்குவதற்காக மற்றவர்களின் ஏளனத்தையும், நிந்தையையும் அவமானத்தையும் தாங்குவதற்கு அவர் பயிற்றுவித்தார். நான் அடையாத நிந்தை அவமானம், கிடையாது, என்னும் அளவிற்கு படாதபாடு பட்டேன். என் நண்பர்கள் என் உற்றார் உறவினர்களால் சொந்த ஊர் மக்களால் வெறுக்கப்பட்டேன். அநேகர்

என்னை நிந்தித்தார்கள். வேறு ஒரு காரியத்தையும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். தவணை முறை வியாபாரத்திற்கென்று, நாங்கள் நபர்களை சேர்ப்பதற்காக செல்லும்போது கம்பெனியின் நோட்டீஸ்கள், ஆர்டர் படிவம் இவற்றோடு வீடு வீடாகச்சென்று தெருத்தெருவாக கிராமம் கிராமமாக வேலை செய்திருக்கிறோம். இதில் பல்வேறு அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டதுண்டு. பலதரப்பட்ட மக்கள் பல இனம் , பல கிராம சூழ்நிலைகளில் சந்திருக்கின்றேன். ஆனால் நான் இரட்சிக்கபட்ட பிறகு தேவனே என்னை அவருடைய சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு இதன்மூலம் தேவனே என்னை பயிற்றுவித்தார் என்று அறிந்து கொண்டேன். எனவே தான் இப்போது PGM ஊழியங்களில் மூலமாக நான்காவது சனிக்கிழமையில் நாங்கள் கிராமம் கிராமமாக ஜீப்மூலம் ஊழியத்திற்காக கடந்து செல்லும் போது தேவன் என்னை நடத்தினவிதத்தை குறித்து வியப்படைவதுண்டு. எபே. 3:7 ன்படி தேனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்த சுவிஷேத்திற்கு ஊழியக்காரனானேன். சுவிஷேம் அறிவிப்பதென்பது தேவனே எனக்கு கொடுத்த வரமாகும். அவருடைய கிருபையுமாகும். எனவே நான் சுவிசேஷத்தை பிரசங்கியாதிருந்தால் எனக்கு .....(1 கொரி 9:16)

இவ்வளவு பாடுகளையும் சுமந்து கொண்டு தொடர்ந்து நான் என்னுடைய சுய திறமையினால் எல்லாவற்றையும் செய்துவிடமுடியும் என்று ஓடிக்கொண்டிருந்தேன். 1994 ஆம் ஆண்டு டிசம்பர் வரை அப்படியும் இப்படியுமாக வியாபாரம் ஓடிக்கொண்டிருந்தது. 95 ஜனவரி முதல் மிகவும் நலிவடைந்தது. அப்பபோது ஒன்று மாத்திரம் எனக்கு தெளிவாகத் தெரிந்தது. இனி இந்தத் தொழிலில் நாம் முன்னேற முடியாது என்று அறிந்து கொண்டேன். எனவே, நான் எனக்கு ஆங்கில புலமை உண்டு என்று நினைத்து ஒரு ஆங்கில பள்ளி ஒன்றை தொடங்கவேண்டும என்று

தீர்மானித்தேன். ஆகவே அதைக்குறித்து வேகமாக சிந்திக்க ஆரம்பித்தேன். அப்போது நான் தொழிலில் மிகவும் நலிவடைந்து கொண்டேவந்தேன். அதே நேரம் பள்ளியை ஆரம்பித்து அந்த வருமானத்தின் மூலம் நஷ்டத்தை சரிகட்டிவிட்டு மேலும் அதிகமாக நான் நினைக்கிறபடி காரியங்களைச் செய்யலாம் என நினைத்தேன். எனவே அப்போது என்னிடம் இருந்த சில வாய்ப்புகளை பயன்படுத்தி பள்ளிக்கு இடம் ஒன்றைத்தேடினேன். நானும் எனது நண்பர் ஒருவருமாக அதற்காக மிகவும் அலைந்து திரிந்துஇடம் பார்த்தோம். கடைசியாக தென்காசியில் இஸ்லாமிய சமூக மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் இடம் கிடைத்தது. ஒரு பெரியவர் எனது ஆர்வத்தைப் பார்த்து என்னை மிகவும் உற்சாகப்படுத்தி இடம் தருவதாக உறுதி கூறினார். 1.6.1995ம் ஆண்டு மில்டன் ஆங்கிலப்பள்ளி திறக்கப்பட்டது. மிகவும் எளிய முறையில் அதைத்திறந்தோம். அற்பமான ஆம்பரத்தை யார் அசட்டை பண்ணக்கூடும் (சக 4:10) அதன்பின் நடந்த பல்வேறு சம்பவங்களை நான் மற்ற தலைப்பின் கீழ் விளக்கிக் கூறுகிறேன். அந்த நாட்கள் சுமார் மூன்றரை வருடம் எனது வாழ்க்கையில் நான் மறக்க இயலாத நாட்கள் என்னை ஒரு தேவ ஊழியனாக மாறும்படி பயிற்றுவித்த நாட்கள். 1995 -ம் ஆண்டு ஜனவரி முதல் நான் ரட்சிக்கப்பட்ட 1997-ம் ஜுலை 25ம் தேதி வரை மிக மிக கடினமான நாட்கள் இந்த காலக்கட்டம் எனது வாழ்க்கையில் என்றும் அழியாத வடுவாய் மனக்காயமாய் மாறிவிட்டது. அதுவே என்னை உயர்ந்த அனுபவத்திற்கு கொண்டு சென்றது. அதைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து வாசியுங்கள்.

எனது வாழ்க்கையில் நடந்த இந்த சம்பவங்களைப் போல அநேகருடைய வாழ்க்கையில் நடக்கலாம். இழப்புகளும் நஷ்டங்களும் ஏற்படலாம். ஆனால் அவர்கள் எல்லாம் தேவ ஊழியர்களாய் மாறுவதில்லை. என்னுடைய வாழ்க்கையில் நான் சந்தித்த தோல்வி இழப்பு இவையெல்லாம் என்னை வெற்றியை

நோக்கி கொண்டு சென்றன. இவையெல்லாம் உங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் போது உங்களைக் குறித்த தேவனுடைய சித்தம் என்ன என்பதை கண்டு பிடியுங்கள். அப்பொழுது நீங்களும் தேவனுடைய சித்தத்திற்கு நேராக வழிநடத்தப்பட முடியும். தேவசித்தம் செய்வதே நம் வாழ்க்கையில் குறிக்கோளாக இருக்கட்டும். எல்லோரையும் போல உலக வாழ்க்கையில் திருமணம் செய்வதும் வேலை தேடுவதும், பிள்ளைகளை வளர்ப்பதும் படிக்க வைப்பதும், அவர்களுக்காக வாழ்வதும் மட்டும் கிறிஸ்துவ வாழ்க்கை இல்லை. இவையெல்லாம் தேவைதான். ஆனால் வேதம் சொல்லுகிற எல்லாவற்றிற்கும் மேலாக மேலானவைகளை நாடுங்கள். நமது சிந்தை எப்போதும் மேல நோக்கியே இருக்கட்டும் (கொலோ 3 :2) கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

2. ராஜூ ஏஜென்ஸீஸ் - தோல்விகளை சந்ததித்தல்

வியாபாரம் நன்றாக நடக்கும் போதுநான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். கற்பனையில் இன்னும் அதிகமான மிகப்பெரிய தொழில்களை செய்வதைப் போலவும், அதிக எண்ணிக்கையில் ஆட்கள் வேலை செய்வது போலவும், வருமானம் கிடைப்பது போலவும் நினைத்து என்னை அறியாமல் மிதந்து கொண்டிருந்தேன். ஆனால் தேவசித்தம் வித்தியாசமாக இருந்தது. ஓராண்டு முடிந்த பின்னர் தேவன் படிப்படியாக எனது தொழில்களை முடக்க ஆரம்பித்தார். பல்வேறு பிரச்சனைகளை நான் சந்திக்க நேர்ந்தது. நான் சந்தித்த பிரச்சனைகள் ஒவ்வொன்றும் இன்றும் என் மனக் கண்களை விட்டு அகலவில்லை. இவைகளை எல்லாம் நினைக்கும்போது இப்போதும் நான் கண்ணீர் வடிப்பதுண்டு. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் என்னை மீட்டுக் கொண்டார் என நினைக்கும் போது நான் மகிழ்ச்சியடையவதுண்டு. பொருளாதார இழப்பு எவ்வளவு அதிகமானாலும் ஆத்தும இழப்பு அதைவிட மிகவும் அதிகமன்றோ ?

மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (வச.மாற்.8:16) எனவே நான்பட்ட பாடுகளும் இழப்புகளும் கிறிஸ்துவுக்குள் எனக்கு லாபமாக மாறியது. இன்றைக்கு அநேகர் பொன்னும் பொருளும் ஆஸ்தியும் அதிகாரமும் பெற்றிந்தாலும் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை என்றே கருதுவேன். அப்படிப்பட்டவர்கள் தங்களிடத்தில் எல்லாம் இருக்கிறது என்று ஒருபோதும் நினையாதிருப்பார்களாக நான் எனது உழைப்பின் மூலமாக எல்லாவற்றையும் சேர்க்க வேண்டும் என்று நினைத்தேன் உழைப்பிற்கு மிஞ்சியது ஒன்றுமில்லை என்று இருமாப்பாய் வாழ்ந்தேன். Hard Work Never Fails என நினைத்தேன். God's Work Never Fails என்பதை மறந்து போனேன். நான் LIC யில் முகவராய் இருந்தபடியினால் பல்வேறு வளர்ச்சி கருத்தரங்குகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்குரிய Training Centre ல் இப்படியாய் பயிற்றுவித்தார்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. நிமிர்ந்து நில் நிலவும் நெற்றிப் பொட்டாகும். இப்படிப்பட்ட வாசககங்கள் மூலமாக இன்னும் கடினமாக உழைத்து தூண்டப்பட்டேன். கடுமையான முயற்சி செய்தேன். விளைவு தோல்வியே.

கிறிஸ்து இல்லையென்றால் ஒன்றுமில்லை ஒரு மனிதனோடு கிறிஸ்து இருக்கும் போது கிறிஸ்துவின் சிந்தை இருக்கும்போது அவன் Hero ஆகிறான். கிறிஸ்து இல்லை என்றால் Zero ஆகிறான். Without Jesus I am a Zero என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். என் வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவங்கள் இதை மெய்யென 100 சதவீதம் நிருபித்துக் காட்டியது. இன்றைக்கு மனிதர்கள் தங்கள் சுய முயற்சியால் செய்கிற ஒவ்வொரு காரியமும் தோல்வி அடையும் போது வருந்துகிறார்கள். ஆனால் தேவன் கற்றுத்தரும் பாடத்தை கற்க மறந்து விடுகிறார்கள். தோல்விகள் நம் வாழ்க்கையில் வரும்போது அதை கிறிஸ்துவிற்காக லாபம் என்று நினைக்க வேண்டும். அப்பவுல்

அவையாவையும் எடுத்து செலவு செய்தேன். நான் நடத்தி வந்த சீட்டுகளில் சரியான எண்ணிக்கை இல்லாதபடியினால் அதுவும் நஷ்டக் கணக்கில் ஓடிக்கொண்டிருந்தது. எனவே அநேகருக்கு நான் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. நான் கொடுக்க வேண்டிய நபர்கள் ஒரு புறம் என்னிடத்தில் கேட்க, நான் எனக்கு தரவேண்டியவர்களிடத்தில் அதிகமாக நெருக்கி கேட்கும் போது சில சமயங்களில் வாய் தகராறு ஏற்படுவதுண்டு. இவ்வாறு அடிக்கடி ஏற்பட்டபடியினால் எனது தொழிலை நேர்மையாக நடத்தி வரமுடியவில்லை. தவணை முறையில் பொருட்கள் வேண்டி பணம் கட்டியவர்கள் என்னிடம் உடனடியாக பொருட்களை கேட்டனர். என்னால் கொடுக்க முடியவில்லை. ஏனெனில் அவர்களிடத்தில் வாங்கிய பணம் மற்றவர்களிடத்தில் பொருளாக இருக்கும். பொருள் வாங்கியவர்கள் ஒழுங்காக பணம் செலுத்தாத பட்சத்தில் பணம் கட்டிக் கொண்டு பொருளுக்காக காத்திருப்பவர்கள். கேட்கும்போது உரிய நேரத்தில் கொடுப்பது இயலாத காரியமாகிவிடும். இன்னும் சிலர் என்னிடம் உடனடியாக பாதிப்பணத்தைக் கொடுத்து பொருளை பெற்றுக் கொள்வார்கள். ஆனால் தொடர்ந்து ஒழுங்காக பணம் செலுத்த மாட்டார்கள். நான் மற்றவர்களுக்கு நேர்மையாக பொருள் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஏனென்றால் அந்த தொழிலின் தன்மை அப்படிப்பட்டது. என்னிடம் ஏமாற்ற வேண்டுமென்றே அநேகர் தேடி வந்திருக்கிறார்கள் என்பது பின்னர்தான்தெரிந்தது. தவணை முறையில் பொருட்கள் விற்கும் போது ஒருவருக்கு சரியான நேரத்தில் கொடுக்கவில்லை என்றால் அவர் தொடர்ந்து பணமும் செலுத்தமாட்டார். என்னிடம் பொருட்களை வாங்கியவர்களையும் தொடர்ந்து பணம் செலுத்தவிடமாட்டார். இந்நிலையில் நான் என்ன செய்ய முடியும்? எனக்கு கொடுக்க வேண்டிய நபர்கள் கொடுத்தால் தான் நான் மற்றவர்களுக்கு கொடுக்க முடியும். நான் பக்தியாக வளர்க்கப்பட்ட படியால் நான் நேர்மையாக நடக்கவேண்டுமென்று விரும்பியும்

அதை என்னால் செய்யமுடியாமல் போயிற்று. இப்படியாக நாளுக்கு நாள் பிரச்சனை அதிகரித்துக் கொண்டே வந்தது.

சீட்டுகளில் பிரச்சனை

நான் நடத்தி வந்த சீட்டுகளில் பணம் எடுத்தவர்கள் சிலர் ஒழுங்காக பணம் கட்டவில்லை. ஏற்கனவே என்னிடத்தில் குறைந்த நபர்கள்.மேலும் ஒரு சகோதரன் சீட்டு பணத்தின் தொகையை பெற்றுக் கொண்டு பாம்பே சென்று விட்டார். இவர் ஆரம்பத்திலேயே பணம் பெற்றுக்கொண்டவர். ஆனால் திரும்ப செலுத்தியது ஒன்றுமில்லை. இவ்வாறாக சீட்டுத் தொழிலிலேயும் பல நெருக்கடிகள் ஏற்பட்டது. மேலும் LIC யில் பணம் செலுத்துவதற்காக என்னிடம் பிரிமியம் தருவார்கள். அப்பொழுதெல்லாம் நான் ஒழுங்காக செலுத்தி வந்தேன். நாளடைவில் அந்த பணங்களும் நஷ்டத்தோடு நஷ்டமாக சேர்ந்து விடும். என்னால் ஒழுங்காக செலுத்தமுடியாது. உரிய நபர்கள் கேட்கும்போது பொய் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை.

சில வேளைகளில் என்னிடம் பணம் பெற்றவர்கள் சீட்டுத் தொகையை ஒழுங்காக செலுத்தாமல் சென்று கேட்கும் போது ஏதாவது பிரச்சனைகளை சொல்லுவார்கள். இறுதியாக ஒரு குறிப்பிட்டத் தேதியை சொல்லி அன்றைக்கு வரச்சொல்லுவார்கள். கடைசியில் நானும் சரியென்று சென்றுவிடுவேன். அந்த தேதி வருவதற்குள்ளாகவே பல காரியங்களுக்கு பணத்தேவை இருக்கும். ஆனால் குறிப்பிட்ட தேதி வரை அவர்களிடத்தில் கேட்கமுடியாமல் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அந்த தேதி வரும்போது கையில் இருக்கிற காசை பெட்ரோலுக்கு செலவு செய்து அங்கு சென்று கேட்பேன். அப்பொழுது மிகவும் சாதாரணமாக பணம் இல்லையென்று சொல்லுவார்கள். சிலர்வேண்டுமென்றே இப்படிச்

சொல்லுவார்கள். சிலர் உண்மையாகவே பணம் இல்லாமல் சொல்லுவார்கள். சிலர் தாங்களும் செலுத்தாமல் செலுத்துகிறவர்களையும் செலுத்த வேண்டாம் என்று பல கதைகளைக் கூறி கெடுத்துவிடுவார்கள். அவர்கள் இல்லையென்று சொல்லும்போது நான் என்ன செய்வதென்றே தெரியாமல் அப்படியே ஸ்தம்பித்து விடுவேன். பயங்கர கோபம் ஏற்படும். பின் வாய்த்தகராறு ஏற்படும். இப்படியாக பல நாட்கள் கழிந்து விடும் அதற்குள்ளாக அவர்கள் செலுத்த வேண்டிய தொகையும் இரண்டு மூன்று மடங்கு சேர்ந்து விடும். எனக்கும் அது மிகவும் சிரமத்தை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட அனுபவங்கள் நான் இரட்சிக்கப்பட்ட பின்பு பண விஷயத்தில் கிறிஸ்தவ மக்கள் எப்படி இருக்க வேண்டுமென்று தெளிவாக கற்றுக் கொடுத்தது. கொடுக்கல் வாங்கலில் கிறிஸ்தவர்கள் மிக மிக சரியாக இருக்க வேண்டும் என்ற காரியத்தை கற்றுக்கொடுத்தது. எனக்கு வரவேண்டிய தொகை வராதிருக்கும் போது நான் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுப்பதற்காக மற்றவர்களிடத்தில் சென்று பலவித முறைகளில் கடன் பெற்று அதாவது தினசரி திரும்பச் செலுத்தக்கூடிய கடன், வாரம் தோறும் செலுத்தக்கூடிய கடன், மாதம் தோறும் செலுத்தும் வட்டி இவற்றிற்கு மேலாக நகைகள் மற்றும் பொருட்கள் அடமானம் போன்ற எல்லா வழிகளிலும் ஈடுபட்டு கம்பெனியை தொடர்ந்து நடத்த முயற்சித்தேன். நிலைமை எனது கட்டுப்பாட்டை மீறி சென்று கொண்டிருந்தது. என்னால் சமாளிக்க முடியவில்லை. பைக்கில் செல்லுவதற்கு காசு இல்லாத போது சைக்கிளில் செல்லுவேன். அப்போதெல்லாம் அழுதுகொண்டு ஜெபிப்பேன். ஏன் ஆண்டவரே இந்த பிரச்சனையென்று இவ்வளவு சிரமப்பட்டு வேலை செய்யும் போது அதற்குரிய பலன் கிடைக்காது. சில சமயங்களில் சைக்கிளில் செல்லுவதற்காக சைக்கிளை எடுப்பேன் சைக்கிள் பஞ்சராக இருக்கும் பஞ்சர் ஒட்டுவதற்கு கடைக்குச் சென்றால் கடை பூட்டப்பட்டிருக்கும். கடைக்காரரைத் தேடி வீட்டிற்குச் சென்றால் வீட்டில் அவர்

இருக்கமாட்டார். சென்ற இடம் தேடிச் சென்றால் அப்போதுதான் வேறு எங்காவது சென்றிருப்பார். நான் கடினமாக முயற்சி செய்பவன். என் சுய திறமை மீது அதிக நம்பிக்கை உடையவன். ஆனால் அவை எல்லாம் ஒன்றுமில்லாமற் போனது. தேவ கிருபை இல்லை என்றால் பூமியில் நாம் வாழவே முடியாது என்பதை உணர்த்தி காட்டியது.

இவ்வளவு பிரச்சனைகளுக்கும் பின்பு அதேஇடத்தில் தொழில் செய்ய முடியாது என்று அறிந்து புதிய ஒரு இடத்தில் புதிய பெயரில் தொழில் நடத்தி புதிய வாடிக்கையாளர்களை சந்தித்து அவர்கள் மூலமாக வருவாயை பெருக்கிக்கொள்ளலாம் என்று நினைத்தேன். எனவே தென்காசியில் நான் எனது தந்தையார் நடத்தி வந்த டிம்பர்ஸ் ஷாப் முகவரியில் புதியதாக கடை இருப்பதாக விளம்பரம் செய்து நடத்த ஆரம்பித்தேன். அதுவும் சரிவர இயங்கவில்லை. சுற்றிலும் திரும்பிய இடமெல்லாம் எனக்கு பிரச்சனைகள் ஏற்பட்டது. எனவே தென்காசியில் பழைய பேருந்து நிலையம் அருகில் ஒரு சிறிய கடையை குறைந்த வாடகைக்கு எடுத்து வேறு ஒரு புதிய பெயரில் வியாபாரம் செய்தேன். அங்கு அருகில் இருந்த மற்றவர்களும் எனக்கு விரோதமாக செயல்பட்ட்டார்கள். அப்போது எனது நண்பன் ஒருவன் எனக்கு உதவி செய்தான். அவர்கள் இடம் கொடுத்த கடை உரிமையாளரிடம் என்னைப் பற்றி தவறான தகவல்களைக் கொடுத்தார்கள். இறுதியில் அவருக்கும் எனக்கும் மனவருத்தம் ஏற்பட்டது. எனவே அந்த இடத்தையும் காலி செய்தேன். இது ஒருபுறம் இருக்க எனது பைக்கினால் ஏற்பட்ட பிரச்சனை பல. திடீரென்று ரிப்பேர் ஆகிவிடும். என்னவென்று பார்த்தால் இஞ்சினை பிரிக்கச் சொல்லுவார்கள். 5000, 6000 என்று பில் வரும். அப்போது அந்த பைக்கில் கிட் ஸ்டார்டர் வெல்டிங் செய்யப்பட்டதை மாற்றினேன். ஆனால் திரும்பவும் அது உடைந்து வெல்டிங் செய்யப்பட்டது. எனவே எங்காவது சென்று கொண்டிருக்கும். போது அடிக்கடி உடைந்து

விடும். மீண்டும் மீண்டும் வெல்டிங் செய்வேன். அது பழைய பைக் ஆனதால் ஒரு வேலை முடிப்பதற்குள் அடுத்தவேலை வந்து விடும். இப்படியாக வருடம் முழுவதும் அதில் நான் செலவு செய்து கொண்டே இருந்தேன். இதற்குள் டிராபிக் போலீஸ் மூலமாக சார்ஜ்செய்யப்பட்டு விடுவேன். சில வேளைகளில் பெட்ரோலுக்கு பாதி அளவிற்கு தான் அந்த வாகனம் ஓடும். என்ன காரணம் என்பது தெரியாது. ஏதோ பெரிய பிரச்சனை இருப்பதாக நினைத்து நானும் சரிசெய்யாமல் விட்டுவிடுவேன். இப்படியாக சில மாதங்கள் கடந்து விடும். கடைசியாக ஒருநாள் பார்க்கும் போது பெட்ரோல் Opening Mouth வழியாக ஆவியாகி கொண்டிருந்தது. இதனிமித்தமாக சில ஆயிரம் பணம் பெட்ரோலுக்கும், வட்டிக்கும் ரிப்பேர் செலவுகளுக்கும் மேலும் பைன் போன்ற செலவுகளுக்கும் சரியாய் போனது. பின் எங்கே உரியவர்களுக்கு கடன் கொடுப்பது? இந்நிலையில் தென்காசியில் உள்ள இலஞ்சியை சேர்ந்த ஒரு அரசியல் பிரமுகரிடம் இன்னொரு அரசியல் பிரமுகர் பணம் வாங்கிக் கொடுத்தார். அவர் பாதியை என்னிடம் ஏமாற்றி விட்டார். ஆனால் அந்த நபர்களோ என்னிடத்தில் முழு பணத்தையும் கேட்டார்கள். இறுதியில் என்னை கடத்திச் சென்று விடுவதற்கும் புறப்பட்டார்கள். அந்த நாட்களில் நான் அடைந்த மன வேதனையில் வாழ்க்கையே எனக்கு வெறுத்து விட்டது. நாம் ஏன் இனி வாழவேண்டுமென்று எண்ணம் ஏற்பட்டது. தற்கொலை செய்து கொள்ளலாமா என்ற கேள்வி எழுந்தது. ஆனால் நான் கிறிஸ்தவனாய் இருப்பதால் அது ஒரு பெரிய பாவம் என்பதை அறிந்திருந்தேன். ஆகவே ஒரு போதும் அதை செய்வது கூடாது என்று தீர்மானித்தேன். இன்று உலகில் மனிதர்கள் பிரச்சனைகள் வரும் போது தற்கொலைக்கு கடந்து செல்லுகிறார்கள். அப்பேற்பட்டவர்களுக்கு எனது வாழ்க்கை ஒரு பாடமாய் இருக்கும். எனவேதான் தற்கொலைக்கு விரோதமான செய்திகளை வல்லமையாய் பிரசங்கிக்கிறேன். அந்த எண்ணம் உடையவர்களுக்காக நான் விசேஷமாக பாரத்தோடு ஜெபிக்கிறேன்.

ஏனெனில் நான் அடைந்த பாடுகள் அவ்வளவாய் இருந்தது. தற்கொலை எண்ணம் என்பது பிசாசு நம்மை ஏமாற்றும் வழியாகும். எனவே அதை மேற்கொள்ள தேவனையே நாம் சார்ந்து கொள்ள வேண்டும். தேவனால் கூடாதது ஒன்றுமில்லையே. எவ்வள்வு பெரிய பிரச்சனையானாலும் அதில் இருந்து மீள்வதற்கு தேவனே பல திட்டங்களையும் வழிவாசல்களையும் திறந்து வைத்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க நான் வேறு விதமாக சிந்தித்தேன். என்னுடைய கடன்களை தீர்ப்பது யார்? ஒருவேளை நான் இல்லையென்றால் தொடர்ந்து வரும் பிரச்சனைகளை எவ்வாறு சந்திப்பது. யார் எனக்கு உதவி செய்யக்கூடும் என்ற நிலையில் இருந்தேன். இந்நிலையில் நான் எனது கடன்களை நானே தீர்த்துக் கொண்டிருந்தேன். நாளைக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக இன்று நான் புதிதாக உழைத்து வருமானத்தை பெற்றுக்கொள்ள நிர்பந்தத்தில் இருந்தேன். அதாவது 100 ரூபாய் எனக்கு தேவை என்றால் 2 டியூப் லைட்டுகளை வாங்கிச் சென்று விற்று அதன் மூலம் லாபம் பெற்று அதைக் கொண்டு வந்து செலுத்துவேன். இப்படியாக நானே உழைத்து உழைத்து எனது கடன்களை சிறிது சிறிதாக அடைத்துக்கொண்டு இருந்தேன். எனக்கு பண உதவி செய்தவர்கள் எல்லாரும் உதவி செய்வதை நிறுத்தினர். எனக்கு வேண்டாத நபர்கள் நான் வியாபாரம் செய்தவர்களோடு தவறான தகவல்களை பேசி கெடுத்துவிட்டார்கள். எனவே அவர்களும் பொருள்கள் தருவதை நிறுத்தினார்கள். ஆனால் எனக்கு அதிகமாக பணம் மக்களிடத்தில் இருந்து வரவேண்டியது இருந்தது. நான் ஒழுங்காக திரும்பக் கொடுக்க வேண்டுமென்று எல்லோரும் கேட்டனர்.

சண்டை வழக்கு:

மேலும் இதன் மத்தியில் ஒரு குடும்பப் பிரச்சனை காரணமாக வேறொரு நபரோடு சண்டை ஏற்பட்டு போலீஸ் கேஸானது பணம் செலவானது. அதன் பின்பு 1996 ஆகஸ்ட் 26 அன்று எங்களது உறவினர் ஒருவர் மூலம் ஏற்பட்ட சண்டை ஒன்றினால் கோர்ட் கேஸாகி 5 வருடம் அந்த வழக்கிற்காக அலைந்து கொண்டிருந்தேன். இப்போது அது முடிந்து விட்டது. அந்த சண்டையில் பெரும்பணசெலவு ஏற்பட்டது. அதுமட்டுமல்ல எனது நெற்றியில் இடது பக்கம் காயத்தினால் ஒரு தழும்பு ஏற்பட்டது. என்னோடு சேர்ந்த மற்ற யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதன் மூலம் தேவன் என்னை வேறுபிரித்தார் என அறிந்து கொண்டேன். ஒரு ரவுடியைப்போல சண்டையிடுகிறவனாக இருந்த என்னை தேவன் மாற்றினார். கிறிஸ்தவ மக்கள் சண்டை செய்வது பெரிய பாவம், என்பதை உணர்த்தினார். பதவிக்காகவோ, பட்டதிற்காகவோ, அல்லது சுயநலத்திற்காகவோ ஒரு போதும் சண்டையிடுவதை தேவன் விரும்பவில்லை. எனவே என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்று யோவான் 14:27ல் அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இன்று கிறிஸ்தவ மக்களிடையே சண்டைக்கு பஞ்சமேயில்லை. ஒரு நாள் இதைக் குறித்து தேவன் என்னோடு பேசும் போது இப்படியாகச் சொன்னார் சமாதானத்திற்காக நாம் எதையும் இழக்கலாம். ஆனால் எதற்காகவும் சமாதானத்தை இழக்க கூடாது. இதுவே தேவன் விரும்பும் காரியம் ஆகும். ஆனால் இன்று கிறிஸ்தவக் குடும்பங்களிலும், திருச்சபைகளிலும் நிகழ்கின்ற காரியங்கள், என்ன என்பதை நாம் நன்கு அறிவோம். கிறிஸ்தவர்கள் சிந்திப்பார்களா?

அந்த வழக்கு கற்றுத்தந்த பாடத்தின் மூலம் சண்டையிடுவதற்கு பதிலாக தேவன் சொல்லும் காரியங்களை நான் அறிந்து கொண்டேன். எனவே இப்போது எந்த ஒரு காரியத்திற்காகவும் யாரிடமும் சண்டையிடுவது கிடையாது.

LIC யில் பிரச்சனை

LIC யிலும் நான் முகவராக பணியாற்றின படியினால் LIC பிரிமியப் பணம் என்னிடத்தில் வரும். புதிய நபர்களை நான் சேர்க்க வேண்டும். பழைய பாலிசிதாரர்களுக்கு முறையாக சேவை செய்ய வேண்டும். பல்வேறு பிரச்சனைகளோடு நான் இருந்தபடியினால் இவைகளை ஒழுங்காக செய்யமுடியவில்லை. பணம் கொடுத்த நபர்களுக்கு ஒழுங்காக ரசீது கொடுக்கமுடியவில்லை. அலுவலகக் காரியங்களில் உண்மையாய் இருக்க முடியவில்லை. எனவே ஒழுங்காக புதிய நபர்களை சேர்க்க முடியாதபடியினால் எனது LIC முகவாண்மை ரத்தானது. ஆனால் நான் தொடர்ந்து பணியில் இருக்க விரும்பினேன். எனவே அவ்வளவு பண கஷ்டங்கள் மத்தியிலும் எனது வேலையை விட்டுவிடக்கூடாது என்று 12 நபர்களை தயார் செய்து அவர்களுக்காக நானே பிரிமியம் செலுத்தி எனது ஏஜென்ஸியை தக்க வைத்துக்கொண்டேன். விளைவு எனக்கு வேலையிருந்தது. ஆனால் வருமானம் ஒன்றுமில்லை. பிரிமியம் செலுத்துவதற்கு கூட எனக்கு பணம் இல்லை. எவர்கள் பெயரில் பணம் செலுத்தினேனோ அவர்கள் யாரும் எனக்கு பணம் திரும்பத் தரவில்லை. இப்படியாக இழப்பின் மேல் இழப்பு ஏற்பட்டது. என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அடுத்தடுத்து எல்லாவற்றிலேயும் தோல்விகளையே நான் சந்தித்தேன். என் வாழ்க்கையில் எனக்கு தெரிந்ததெல்லாம் தோல்வி ஒன்றே. தோல்வியே எனது வாழ்க்கையானது.

3. பாடசாலை தோற்றுவித்தல்

பல்வேறு பிரச்சனைகளின் மத்தியில் நான் ஏற்கனவே கூறியதைப் போல மில்டன் மெட்ரிக்குலேசன் ஸ்கூல் என்னும் ஆங்கிலப் பள்ளி ஒன்றை ஆரம்பித்தேன். இவ்வளவு பிரச்சனைகளும் என்னை சூழ்ந்து நிற்க எனது தன்னம்பிக்கையை நான் இழக்கவில்லை. இப்பொழுதெல்லாம் மக்கள் சாதாரணமாக ஒரு பிரச்சனை வந்த உடனே விசுவாசத்தை எங்கே வந்தாய்? என கேள்வி கேட்கின்றனர். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம் எபி 11:6 ஆனால் நானோ அந்நாட்களில் தேவனுக்காக விசுவாசமாக இருந்தேனோ இல்லையோ என்னுடைய எதிர்கால நம்பிக்கையைக் குறித்து விசுவாசமாயிருந்தேன். எனவே நான் மனந்தளர்ந்த நிலையில் இருந்தாலும் இதில் இருந்து கொண்டே இன்னொரு நல்ல சூழ்நிலைக்குள் சென்று விட வேண்டுமென்று திட்ட மிட்டு, பள்ளிக்கூடம் ஆரம்பித்தால் நல்ல வருமானம் கிடைக்கும் என்று நினைத்து இழந்தவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என நினைத்தேன். ஆங்கிலத்தில் நல்ல அறிவும், ஆர்வமும் இருந்த படியினால் அது நமக்கு பொருத்தமாக இருக்குமென்று அத்தொழிலை தொடங்கினேன். தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை கல்விச்சேவையில் நான் எப்படிப் பெற முடியும் கல்வி என்பதே சேவையாயிற்றே! அநேகர் தொழிலாக செய்தாலும் நான் அப்படி செய்யவில்லை. இப்பள்ளி ஆரம்பிக்கும் போது நானும் எனது சகோதரியும் தெருத்தெருவாக வீடு வீடாக சென்று மாணவர்களைச் சேர்த்தோம் முதலாவது 8 மாணவர்கள் இருந்தார்கள் முதல் ஆண்டு இறுதியில் 40 மாணவர்கள் இருந்தார்கள் திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளியில் சென்று பாடங்களை நடத்துவேன் அப்போது L.K.G, U.K.G. தான் வகுப்பு. இரண்டு ஆசிரியர்கள், நானே பாடங்களை நன்றாக சொல்லிக் கொடுப்பேன். மறுபுறம் சனி ஞாயிறு தினங்களில் வியாபாரத்தைக் கவனித்தேன் பணம் வசூல் செய்ய சென்று விடுவேன். பள்ளிக்கு தேவையான ஒவ்வொன்றையும் வாங்க வேண்டிய அவசியம் இருந்தது. பர்னிச்சர்கள், டேபிள், சேர் முதலானவை அனைத்தும் தேவையிருந்தது. அப்போது வியாபாரத்தில் வசூல் பணத்திலிருந்து இவை ஒவ்வொன்றையும் பள்ளிக்கென்று செய்து வந்தேன். பள்ளியில் மிகவும்

குறைவான கட்டணமே வைத்திருந்தேன். ஒவ்வொரு தேவைகளாக கொஞ்சம் கொஞ்சமாக சந்திக்கப்பட்டது. இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது . ஒருபுறம் பள்ளி வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருந்தது மறுபக்கம் தொழில் நலிந்து வீழ்ச்சியடைந்தது பள்ளியில் அந்த ஆண்டு இறுதியில் ஆண்டுவிழா நடத்தினோம். மிகவும் பிரயாசப்பட்டு . விழாவிற்கு வக்கில் ஜோன்ஸ் LIC மேனேஜர் முத்தையா அவர்களும் வளர்ச்சி அதிகாரி பொன்னையா அவர்களும் வந்தார்கள். பள்ளி இருந்த இடத்திற்கு முன்பாக மேடையமைத்து மிகவும் சிறப்பாக விழா நடைபெற்றது பெற்றோர்க்கு இருக்கை வசதிகள் செய்யப்பட்டிருந்தன. விருந்தினர்களுக்கு பொன்னாடை உட்பட சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. விழா ஆரம்பிப்பதற்கு முன்பாக நான் மிகவும் சோர்வுற்று இருந்தேன். ஏனெனில் என்னிடம் கையில் எந்த பணமும் கிடையாது ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டேனோ என்று நினைத்தேன். ஆனால் எல்லாம் சிறப்பாக முடிந்தது அப்போது நான் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது ஒழுங்கு செய்யப்பட்ட ஸ்டீல் சேர்களில் 2 சேர்களை காணவில்லை. யாரோ திருடிச் சென்று விட்டனர். இது ஏன் என்று எனக்கு தெரியவில்லை. அந்த நிலையில் அந்த இழப்பு எனக்கு தாங்க முடியாத இழப்பாக இருந்தது ஒருவழியாக அவர்களுக்கு இரண்டு புதிய சேர்கள் வாங்கிக் கொடுத்து விட்டேன் . அந்த வருட ஆண்டுத்தேர்வு முடிந்து விடுமுறை ஆரம்பித்தது மீண்டும் அடுத்த 96-97 ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்காக போஸ்டர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மே மாதம் முழுவதும் சேர்க்கைக்காக காத்துக் கொண்டிருந்தோம். மாதக் கடைசியில் கொஞ்ச அட்மிஷன்கள் கிடைத்தது கையில் கொஞ்சம் காசும் கிடைத்தது அப்போது எனக்கு இருந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்காக ஒரு காரியம் செய்தேன் என்னிடம் தினம் வரக்கூடிய வருமானம் இருந்தால் பிரச்சனை களை முற்றிலுமாக தீர்த்து விட முடியும் என்று சில சைக்கிள்களை வாங்கி வாடகை சைக்கிள்கடை ஒன்றை ஆரம்பித்தேன். அப்போது பைக்கிற்காக பணம் கட்ட வேண்டியிருந்தது மற்றும் வியாபாரம் இவற்றிற்காக பணம் அதிகம் தேவைப்பட்டது. ஆனால் கையில் இருந்ததோ கொஞ்சம். எனவே இப்படி செய்தேன். மேலும் பள்ளி நடந்து கொண்டிருக்கும்போதே பணத் தேவைக்காக நான் மிகவும் சிரமம்பட்டேன். ஊரில் இன்னும்

ஏஜென்ஸில் கடை இருந்தது சைக்கிள் கடை இருந்தது ஆனால் என்னால் சமாளிக்க முடிய வில்லை ஒரு வழியாக நாட்கள் நகர்ந்து சென்று எனக்கு பணம் தேவைப்படும்போது புதிய புதிய வழிகள் மூலமாக பணம் கிடைத்தது. ஆனால் அவை ஒன்றும் நான் நினைத்த விதத்தில் எனக்கு பிரயோஜனமாக அமையவில்லை தேவைகள் மாத்திரமே சந்திக்கப்பட்டது . ஏனெனில் தேவனே என்னை கரம்பிடித்து நடத்தி வந்திருக்கிறார் நான் ஏற்கனவே சொன்னது போல 96 ஆகஸ்டில் அந்த பிரச்சனை ஏற்பட்டது விதத்தில் பின்பு எனக்கு இன்னும் சிக்கல்கள் நீடித்தது பள்ளியிலும் சில பிரச்சனைகள் ஏற்பட்டது சில சமயம் ஆசிரியர்களுகிடையில் உள்ள பிரச்சனைகள். சில சமயம் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் பிரச்சனை கள் அந்த ஆண்டு கடைசியில் பள்ளி ஆண்டுவிழா நடைபெற்றது விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தென்காசி தொகுதி M.L.A திரு. ரவிஅருணன் அழைக்கப்பட்டிருந்தார். அவரோடு கூட அரசியல் கட்சிபிரமுகர்களும் மற்றும் சமுதாயப் பெரியோர்களும் அழைக்கப் பட்டிருந்தார்கள் இந்த ஆண்டும் விழா சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்து பள்ளியின் முன் அமைக்கப்பட்ட மேடையில் விழா நடைபெற்றது . இருக்கை வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த ஆண்டும் 2 சேர்கள் காணாமல் போய்விட்டது இப்போது நான் திகைப்படையவில்லை. ஆனால் சிந்திக்க ஆரம்பித்தேன் ஏன் இவ்வாறாக நடந்தது என்று சிந்தித்தேன். என்னைக் குறித்து ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று நினைத்தேன் அப்போதும் நான் ஒரு சுயநினைவு அற்றவனைப் போல எனது பாதையிலேயே ஓடிக்கொண்டிருந்தேன் சுய நம்பிக்கை, சுய திறமை, சுய கௌரவம் இவற்றிலேயே காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தேன். இப்போது தொழில் முற்றிலுமாக நலிந்து விட்டது. பள்ளி நன்றாக வளர்ந்திருக்கிறது. எனவே வரும் மூன்றாவது ஆண்டு முதல் பள்ளி சிறப்பாக இயங்கும் என்று நினைத்தேன். பெரியவர்களை வைத்து விழாக்களை நடத்தியிருக்கிறேன் எனப் பெருமையில் இருந்தேன். எனவே சிறப்பான நல்ல அட்மிஷன் எதிர் பார்த்தேன் அப்போது தான் பூகம்பம் போன்ற ஒரு சம்பவம் நடந்தது.

எனது பள்ளிக்கருகில் இருக்கின்ற ஒரு செல்வந்தர் அவரிடம் நிறைந்த பணபலமும் ஆள்பலமும் வாகன வசதிகளும் உண்டு நல்ல இடவசதியும் இருந்தது அவர் ஒரு ஆங்கிலப்பள்ளி ஒன்றைத் திறந்தார்.

97ஆம் வருடம் ஜுன் மாதம் பள்ளி திறக்கும் போது தான்தெரிந்தது என் கனவுகள் சுக்கு நூறாய் உடைந்துவிட்டது இரண்டு ஆண்டுகளாக பட்ட பிரயாசத்தின் பலனை பெற்றுக் கொள்ளும் வேளையில் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக என் கதை நடந்தது பள்ளியில் மாணவர்கள் இல்லை பள்ளியை நடத்துவதற்கு சிரமப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. வருகின்ற வரவிற்கு மேலாக செலவு இருந்தது. அப்போது கூட நான் தேவனை நோக்கி பார்க்க வில்லை . எனக்கும் மேல் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நான் நினைக்கவில்லை. என் சுயபெலனையே சார்ந்திருந்தேன் இன்னும் முயற்சி செய்தால் சமாளித்து விடலாம் என்று நினைத்தேன் ஒரு நபர் ஒருவரிடம் சீட்டுப்பணம் எனக்கு வரவேண்டியதுயிருந்தது அதை அவரிடம் சென்று கேட்ட போது ஜாமீன் தர வேண்டும் என்றார். அப்போது நான் எனக்கும் அவருக்கும் தெரிந்த ஒரு நபரிடம் சென்று சொன்னேன். அவரும் ஒரு கிறிஸ்தவர் தான் ஆனால் நடந்தது வேறு. அவர் அந்த நபரைப் பார்த்து எனக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி விட்டார். எனக்கு இருந்தது அந்த ஒரே ஒரு வழிதான். எனவே நான் எனது பைக்கை விற்று விடவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானேன். அதற்கான முயற்சியில் இறங்கினேன் அப்போது பைனான்ஸ் முழுவதும் செலுத்தி முடிக்காத படியினால் அந்தவழியிலும் செல்ல முடியவில்லை.

இப்போது எனக்கு உலகமே இருண்டது போன்று இருந்தது. எனக்கு முன் இருந்த அத்தனை வழிகளும் அடைக்கப்பட்டது இனி எனக்கு உதவி செய்வார் ஒருவரும் இல்லை. நான் மிகுந்த மனசோர்வுக்குள்ளானேன். ஆனாலும் வேறு வழியின்றி மற்ற காரியங்களில் கவனம் செலுத்தினேன். பள்ளியிலும் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. வாகனம் வாங்கி விற்பனை செய்யும் ஆட்டோ கன்சல்டிங் ஏஜென்டுகளை பார்த்தேன். ஒரு நபர் அதை விற்றுத்தருவதாக கூறினார். நான் வாங்கிய விலையில் இருந்து அதற்கு செலவு செய்த தொகையையும் பார்த்தால் ஒரு புதிய பைக் வாங்கிய விலையில் இருந்து அதற்கு செலவு செய்த தொகையையும் பார்த்தால் ஒரு புதிய பைக் வாங்கிவிடலாம் ஆனால் அந்த பைக் விற்கும் போது மிக மிக குறைவான தொகைக்கே விற்க முடியும் எனவே எப்படியாவது அந்த பைக்கை விற்றுவிட்டால் போதும் என்ற நிலைமையில்

இருந்தேன் அதில் இருந்து கிடைக்கும் பணம் கொடுக்க வேண்டிய நபருக்கே சரியாக இருக்கம் 1997ம் ஆண்டு ஜீலை 25ம் நாள் அதை விற்றுவிட்டேன் அடவான்ஸ் தொகை பெற்று தென்காசி வடக்கு மாசி வீதியில் நான் நடக்க ஆரம்பித்தேன் இப்போது என் உள்ளத்தில் ஒரு பெரிய தெய்வீக சமாதானம் வந்து எட்டினது எனது ஆன்மீகக் கண்கள் திறக்கப்பட்டது ஆவிக்குரிய உணர்வு எனக்குள்ளாக வந்தது அது வரையில் நடைபிணம் போன்ற நிலைமையில் போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த நான் அன்றுதான் சந்திக்கப்பட்டேன். அதுதான் என் இரட்சிப்பின் நாளாகும் என் உள்ளத்தில் ஏற்பட்ட மாபெரும் தெய்வீக அசைக்கமுடியாத சமாதானம் வந்து எட்டியது அப்போது தான் தேவன் என்னோடு பேச ஆரம்பித்தார் ஆண்டவரின் சத்தத்தை நான் கேட்க ஆரம்பித்தார் என் உள்ளத்தில் மெல்லிய குரலில் அமர்ந்த நீரோடை யில் ஏற்படும் சிறு சலனத்தைப்போல ஆவியானவர் தெளிவாகப் பேசினார் என் மகனே இப்போது உனக்குக் கொடுத்த ஞானத்தை நீ பெற்றுக்கொண்டாய் இந்த உலகம் மாயை என்பதை உணர்ந்து கொண்டாய் அப்போது உன் உள்ளத்தில் பெரிய வெற்றிடம் ஏற்பட்டது. அதே வேளையில் நான் உனக்குள் புகுந்த போது தெய்வீக சமாதானத்தைக் கண்டாய் உன்னைப் போலவே இந்த பூமியில் கோடிக் கணக்கான மக்கள் சமாதானமற்று அலைகிறார்கள் அவர்களுக்கு நீ சென்று நான் கொடுக்கும் சமாதானத்தை கொடுக்க வேண்டும். உன்னை வல்லமையாய் பயன்படுத்தப் போகிறேன் என்றார் இந்த வார்த்தைகள் என் உள்ளத்தில் ஒலித்த உடன் அன்றைக்கே நான் என்னை ஒரு முழு நேர ஊழியனாக ஒப்புக்கொடுத்தேன் ஒரு 50 வருடம் உண்மையான கிறிஸ்தவவாழ்க்கை வாழ்ந்த பரிசுத்தவானையை போல மாறினேன் அதுவரையில் உலகத்தை க் குறித்தும் ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்தும் உணர்வுப் பூர்வமாக அறிந்து கொள்ளாத நான் அன்றைக்கு உலகம் என்றால் என்ன? மக்கள் எப்படி இருப்பார்கள் ? ஆவிக்குரிய வாழ்க்கை என்றால் என்ன? அது அப்படியிருக்கும் என்பதை வேறு பிரித்து உணர்ந்து கொள்ள தேவனே உதவி செய்தார்.

4 .தேவனின் இடைபடுதலும் ஊழிய அழைப்பும்

என்வாழ்க்கையில் இவ்வளவு சம்பவங்கள் நடக்கும் போது அதன்மூலமாக தேவனே என்னோடு பேசினார். அவருடைய தெளிவான வழிநடத்து தலை நான் உணர்ந்து கொள்ள முடிந்தது இத்தனை சோக சம்பவங்களும் என் வாழ்க்கையில் என்னை ஒரு ஊழியக்காரனாக மாற்றுவதற்கு தேவை என்பதை தேவன் அறிந்திருப்பார் இவ்வளவு பாடுகளை கஷ்டங்களை நான் அனுபவிக்காவிட்டால் நான் ஒரு ஊழியனாகியிருக்க முடியாது ஒரு வேளை என்னுடைய வியாபாரம் முயற்சிகள் எல்லாம் வெற்றிப்பெற்றிருந்தால் நானும் அநேகரைப்போல செழிப்பாக வாழ்ந்திருக்கலாம் ஆனால் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது இன்று அநேகர் இதே விதமான பாடுகளின் வழியே கடந்து சென்றாலும் கூட பாடுகளை தாங்கிக் கொண்டு தேவனை அறியாமல் இருந்து வருகின்றனர் தேவன் அவர்களைக் குறித்து வைத்திருக்கிற நோக்கத்தை அறியாமல் உணர்வில்லாதவர்களாய் இருக்கிறார்கள் தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் இடைபடும் போது அந்த மனிதனின் வாழ்க்கை மாறுகிறது தேவசித்தம் அவர்களுடைய வாழ்க்கையில் நிறைவேற்றப் படுகிறது. ஒருவன் கிறிஸ்துவிற்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின (I.கொரி 5: 17) என்ற வார்த்தையின்படி அவர்களுடைய வாழ்க்கை புதுவாழ்க்கையாக மாறுகிறது புதியது என்றால் முற்றிலும் புதியது எனது வாழ்க்கையில் தேவன் என்னை அப்படி முற்றிலும் புதிய மனதனாக மாற்றினார் .

நான் இரட்சிக்கப்பட்ட அந்த நிமிடத்திற்கு முந்தின நிமிடம் வரை நானும் பாவவாழ்க்கை யில் இருந்தேன் . உலகத்தில் பின்னே ஓடிக்கொண்டிருந்தேன் பணம் பணம் என்று பணத்தின் பின்னே ஓடினேன் ஆனால் இவையெல்லாம் ஒன்று மில்லையென்று தேவன் உணர்த்தினார் பணத்தைவெறுக்க ஆரம்பித்தேன் என்னிடத்தில் உள்ளதை மற்ற வர்களுக்கு கொடுக்க ஆரம்பித்தேன் பெயர் புகழ் மரியாதை கௌரவம் அந்தஸ்த்து வேலை வருமானம் இவையெல்லாம் ஒன்று மில்லை யென்று உணர்ந்து கொண்டேன் வேலையினாலோ வருமானத்தினாலோ பதவியினாலோ பரலோகத்திற்கு செல்ல முடியாது என உணர்ந்து கொண்டேன் என்னையே முற்றிலும் வெறுத்தவிட

ஆரம்பித்தேன். வேத வசனமும் அதைத்தான் தெளிவாகச் சொல்லுகிறது லூக் 9:23ன் படி ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன் இந்த வசனமே என் வாழ்க்கையை மாற்றினது. நான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் இந்த வசனத்தை அப்படியே பிரதிபலித்தது நாம் தேவனை பின்பற்ற விரும்பினால் தன்னைத் தான் வெறுக்க வேண்டும் இரண்டாவதாக கிறிஸ்துவின் சிலுவையை அனுதினமும் எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது அது மட்டுமல்லாமல் இன்னும் சில கேள்விகள் என் உள்ளத்திலே ஏற்பட்டது அவை யெல்லாவற்றிக்கும் வேத புத்தகமே பதில் கொடுத்தது மத் 6:24ன் படி இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது ஒருவரை பகைத்து மற்றவனை சிநேகிப்பான் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது நான் உலகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள கடினமாக உழைத்தேன். அதே வேளையில்தேவனைப் பிரியப்படுத்த பகுதிநேரமாக அவ்வப்போது ஊழியத்தையும் செய்து வந்தேன். எங்கள் கிராமத்திற்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளாக பகுதி நேரமாக ஊழியத்தைச் செய்தேன். காரணம் உலக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தேவன் என்னை அவருடைய ஊழியத்தை முழுமையாகச் செய்யவேண்டு மென்று விரும்பியுள்ளார் நாம் ஊழியம் செய்வது தேவ னுக்காகவே தவிர நமக்காக இருக்கக் கூடாது எனவே தான் இவ்வசனத்தின்படி தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது எனப் பார்க்கிறோம்.

இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது தேவன் என்னை முன்குறித்ததையும் அநேகர் மூலமாய் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதையும் கண்கூடாக காண முடிந்தது அவர் என்னை அழைத்தும் இருக்கிறார். உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார் (தெச 5:24) மேலும் இரண்டாவதாக என் மனதில் எழுந்த கேள்விகளுக்கு தேவனே எனக்கு பதில் கொடுத்தார். போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (தீமோ 6: 6-12) இவையெல்லாம் என்னை ஆண்டவருக்கு நேராக வழிநடத்தின வேதசத்தியங்கள் இன்றைக்கு இவற்றை உணர்ந்து கொள்ளுகிறவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப் படுவார்கள் இதை

பின்பற்றாதவர்கள் உலக ஆசை இச்சையில் இழுப்புண்டு சிக்கி தவிக்கிறார்கள் நான் பெற்ற எல்லா அனுபவங்கள் மூலமாக தேவன் எனக்கு பல காரியங்களை மிகத் தெளிவாய் கற்றுக் கொடுத்தார் மிகத் தெளிவாய் கற்றுக் கொடுத்தார் எவை எவை பாவம் என்பதை உணர்த்தினார் பெருமைபடுவது பாவம். கோபப்படுவது, பிறரை மதிக்காமல் இகழ்ச்சியாய் எண்ணுதல், தாழ்வாக எண்ணுதல், பாரபட்சம் காட்டுதல் தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளாத தன்மை, உலக ஆசை இச்சைகள், மாம்சீக சிந்தனைகள், இவையெல்லா வற்றையும் விட்டு ஓடும்படி செய்தார் . அவற்றின் மூலமாக ஒரு மறுபடி பிறந்த அனுபவத்தை எனக்குள் உருவாக்கினார். ஆவியினால் பிறந்த அனுபவம் ஏற்பட்டது. இப்போது தேவனே என்னை தனது ஞானத்தினால் நிறைத்து தமது ஆவியினால் வழிநடத்துகிறார்.

என்னை உணர்த்து விப்பதற்காக எனது வாழ்க்கையில் எல்லா காரியங்களையும் இரண்டு இரண்டு முறை நிகழும்படி செய்தார் அதன் மூலம் அவருடைய அழைப்பை நான் உணர்ந்து கொள்வதற்காக தேவன் என்னோடு அழுத்தமாக பேசினார் ரோமர் 8: 30 ன் படி அவரே என்னை முன் குறித்தார். அழைத்தார் நீதிமானாக்கினார். வாழ்ந்திருக்கவும் தெரியும் தாழ்ந்திருக்கவும் தெரியும் என்ற பவுல் அப்போஸ்தலன் அனுபவத்தின்படி என்னை நடத்தினார். ரோமர் 11: 21ன் படி அவருடைய அழைப்பு மாறாத அழைப்பாய் இருக்கின்றது. இவ்வளவு சம்பவங்கள் நடைபெற்ற பின்பும் நான் இன்னும் வேதத்தை அலசி ஆராய்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன். அப்போதெல்லாம் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் என்னோடு இடைபட்டார் . ஆண்டவரே என்னுடைய வாழ்க்கையில் மட்டும் ஏன் இவ்வாறு நடந்தது என்று கேட்கும் போது யோபு 5: 17 ன் படி **“இதோ தேவன் தண்டிக்கிற மனிதன் பாக்கியவான்”** என்று சொல்லுவார் சில லட்சங்களை இழந்தாலும் மானம் மரியாதையை இழந்தாலும் உன் ஆத்துமாவை மீட்டுக் கொண்டே னே என்று சொல்லுவார் மேலும் எபி 12: 6 ன்படி கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைஅவர் சிட்சித்து தான் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் தகப்பன் சிட்சியாத புத்திரன் உண் டோ என்று பதில் கொடுப்பார் . இவ்விதமாக தேவன் என்னோடு இடைப்பட்டு என்னை வழிநடத்தினார்.

தேவன் என்னை அழைத்த போது என் வாழ்க்கையில் நண்பர்கள் மூலமாக பாதிக்கப்பட்டேன் உறவினர் ஊரார் வாடிக்கையாளர் மூலமாக பாதிக்கப்பட்டேன் வியாபாரிகள் மூலமாக பாதிக்கப்பட்டேன் இவையெல்லாம் நடந்த பிறகு தான் தேவன் என்னோடு இடைபட்டார் என அறிந்து கொண்டேன் அவர்களெல்லாம் இப்படி செய்யவில்லை. நான் ஒரு ஊழியனாய் மாறுவதற்கும் அநேகருக்கு பிரயோஜனமாய் என்னை எடுத்து பயன்படுத்துவதற்கும் இவையெல்லா வற்றிற்கும் மேலாக தேவ நாம மகிமைக்கும் ஏதுவாக நடைபெற்றது என்றே நான் சொல்லுவேன் என் வாழ்க்கையில் நடந்த பல்வேறு சம்பவங்கள் கடின அனுபவங்கள் இவற்றோடு கூட உண்டு எல்லாவற்றையும் எழுத முடியாது. எழுதினால் பக்கங்கள் போதாது இன்னும் அநேக காரியங்களை சொல்ல முடியாத காரணத்தினால் நான் சொல்லவில்லை. இப்போதும் சில பழைய நண்பர்கள் என்னைப் பார்த்து கேட்பார்கள். பழைய காரியங்கள் என்ன வாயிற்று என்று அவர்களே சொல்லுவார்கள் எல்லாம் வீணாய் பொயிற்று என்று ஆனால் நான் மனதிற்குள் நினைத்துக் கொள்வேன் எல்லாம் போனாலும் பரவாயில்லை, என்னை தேவன் இரட்சித்தாரே என்று சந்தோசப் படுவேன் அவருடைய இரட்சிப்பின் சந்தோசமே எனக்குள் நிரந்தரமாய் தங்கியிருக்கிறது.

5. மாயை மாயை எல்லாம் மாயை

இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் என்னுடைய வேதனைகளும் பாடுகளும் துன்பங்களும் எனக்கு ஒரு காரியத்தை நன்றாய் உணர்த்தின நாம் வாழும் பூமி ஒரு மாயை அதில் நாம் அனுபவிக்கின்ற உலக ஆடம்பரங்களும் ஒரு மாயை ஏன் மனித உறவுகளும் நட்புகளும் மாயை என்பதை உணர்ந்து கொண்டேன் . சாதாரணமாய் நான் விரும்பின சில காரியங்கள் கூட என்னுடைய வாழ்க்கையில் என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை அவ்வளவு கடினமாக உழைத்தும முயற்சி செய்தும் பலன் ஒன்றுமில்லை ஆகாய் 1: 6 ன்படி கூலியை சம்பாதிக்கின்றவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான் 7ஆம் வசனம் சொல்லுகிறது உங்கள் வழிகளை சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் எனவே முதலாவது நமது வழி எப்படி இருக்கிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏன் கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் சம்பாதிக்கிறான் என்றும் சிந்திக்க வேண்டும் தேவனை அறியாத நிலைமையில் அவருக்கென்று அறியாத நிலைமையில் அவருக்கென்று வாழாத பட்சத்தில் எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையும் இது தான் எவ்வளவு சம்பாத்தியம் செய்தாலும் அதை அனுபவிக்க முடியவில்லை பொத்தலான பையில் போய்விடுகிறது . இன்றைக்கு நாம் சென்று கொண்டிருக்கும் திசை எங்கே? தேவனுக்கு பிரியமான நேரான திசையில் சென்று கொண்டிருக்கிறோமா? இல்லையென்றால் எதிரான திசையில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோமா? நானும் ஒரு நாளில் எதிர்த்திசையில் பயணம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் தேவனே என்னை சரியான திசையில் திருப்பி வழி நடத்தினார். அநேகர் இப்படித்தான் மாயையான வாழ்க்கையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மெய்யான வாழ்க்கையை கொடுக்கும் இயேசுவை தேடி வராமல் போலியான வாழ்க்கை அனுபவங்களைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் பிரகாரம் நாம் பெற்றுக் கொள்கின்ற எல்லா மகிழ்ச்சியும் தற்காலிகமானது தான். இயேசு

கொடுக்கிற சமாதானம் ஒன்றே (யோவான் 14:27) நிரந்தர சமாதானம் ஆகும். இதை உணராத பட்சத்தில் அவர்களுடைய வாழ்க்கையில் எல்லாம் மாயையாகத் தான் இருக்கும். சொல்லப்போனால் தாங்கள் ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையே அறியாமல் தங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அநேகருக்கு நல்ல தாலந்து திறமை இருந்தும் தேவனுக்கென்று அதை பயன்படுத்த மாட்டார்கள். பதிலாக மாயையான உலக வாழ்க்கைக்கு பயன்படுத்துவார்கள். பிர. 1:2ன் படி மாயையான வாழ்க்கையை மட்டுமே கண்டவர்களாக கடந்து சென்று விடுகிறார்கள். அநேகரிடத்தில் சொந்த வாகனங்கள் வேன், கார், போன்றவை இருக்கும். ஆனால் அவை ஒரு போதும் தேவனுக்கென்று பயன்டடாது. மாறாக மாயையான உலக வாழ்க்கைக்கு நன்றாக பயன்படும் உலகப் பொருட்களைக் குறித்து தேவனே எனக்கு கற்றுத்தந்த காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். நான் விரும்பி வைத்திருந்த சிறு கேமராவை கூட என்னால் வைத்திருக்க முடியவில்லை. தங்க ஆபரணங்கள், வெள்ளிப் பொருட்கள், ஏன் சாதாரண சைக்கிளை கூட என்னால் வைத்துக்கொள்ள முடியவில்லை. இவை எல்லாவற்றின் பின்னால் ஒரு தனித்தனி கதைகள் உண்டு. ஒவ்வொன்றையும் நான் இழக்கும் போது அப்படியாகக் கண்ணீர் வடிப்பேன். ஆனால் இவையெல்லாம் மாயை என்று அறிந்து கொண்ட பின்பு பொன், பொருள், வெள்ளி எல்லாவற்றையும் வெறுத்துவிட்டேன். எனது கம்பெனியின் ராஜ் ஏஜென்ஸிஸ் பெயரில் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கில் இருந்த குறைந்த பட்ச டெபாசிட் தொகையைக் கூட என்னால் தற்காத்துக்கொள்ளமுடியவில்லை. எனவே பணத்தை வெறுத்தேன். இப்படியாக எல்லாம் மாயை என்று தெரிந்த பின் தேவனை நான் கண்டுகொண்ட பின்பு இவற்றை மற்றவர்களுக்காக பயன்படுத்த ஆரம்பித்தேன். மற்றவர்களுக்கு பணம், பொருள் உதவி செய்தேன். என்னை ஒப்புக் கொடுத்தேன். தியாகமான வாழ்க்கையையேதேவன் விரும்புகிறார். அதுவே மெய்யான வாழ்க்கை. எனவே மாயையான வாழ்க்கையில் இருந்து எல்லோரும் வெளிவர வேண்டும் மாயையில் இருந்து விடுபட வேண்டும் என்றே விரும்புகிறேன்.

இவையெல்லாவற்றையும் அறிந்து கொண்ட நான் அதற்கு

மாறான மெய் வாழ்வாகிய இயேசுவை அறிந்து கொண்ட போது, கிறிஸ்துவுக்குள்ளாக இந்த உலகத்தில் வாழ என்னை ஆயத்தம் செய்தேன். என்னை வெறுப்பவர்களையும் நேசிக்க கற்றுக் கொண்டேன். ஏனெனில் இயேசு கிறிஸ்துவும் அதைத்தான் சொல்லுகிறார். உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காவும், ஜெபம் பண்ணுங்கள். (மத். 5:44) அதனால் இப்போது என்னை பகைக்கிறவர்களைக் கூட நேசிக்கிறேன். அன்பு செலுத்துகிறேன். கிறிஸ்து இயேசுவுக்காக இந்த உலகத்தை நேசிக்கிறேன். அவருக்காக வாழ்வதற்காகவே அநேக காரியங்களை செய்து கொண்டிருக்கிறேன். மற்றவர்களுக்கு உதவி செய்யவும், ஊழியம் செய்யவும் என்னையே அர்ப்பணித்துள்ளேன். என்னுடைய உடைமைகளையும் நேரத்தையும் பொருளையும் தேவனுக்காகவே பயன்படுத்தி வருகிறேன்.இந்த உலகத்தில் நான் எதைப்பெற்றுக் கொண்டாலும் அது மாயை என்பதை நன்கு அறிவேன். அதே வேளையில் தேவனுக்கு அது தேவை. தேவ ராஜ்யம் கட்டப்பட வேண்டுமானால் இவற்றை பயன்படுத்த வேண்டியிருக்கிறது. நான் பெற்ற அனுபவங்கள் மூலமாக உண்மையான தேவனுடைய ராஜ்யத்தை இந்த பூமியில் உருவாக்க தேவனே உதவி செய்வாராக. நாம் இணைந்து தேவராஜ்யம் கட்டுவோமாக நாம் பெற்றுக் கொள்ளுகின்ற எல்லாவற்றின் மேலும் நம்முடைய இருதயத்தை வைக்காமல் நமது இருதயத்தை தேவனுக்கு நேராகவே வைத்திருப்போம். எனவே மாயையான உலகத்திலிருந்து விடுபட்டு தேவனுக்காக வாழ்வோம். அதுவே மெய்யான வாழ்க்கையாகும். எனவேதான் நான் இப்போது எனது சொந்த கிராம மக்களையும் நேசிக்கிறேன். அவர்கள் மூலமாகவே நான் இப்படிப்பட்ட அனுபவத்தைப் பெற நேர்ந்தது. அதன் மூலம் ஒரு ஊழியக்காரனானேன். இப்போது அவர்களை நேசிக்கிறேன். அவர்களின் இரட்சிப்பிற்காகவும் நான் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்கிறேன். அவர்கள் மீது இருந்த பகை மறைந்து போயிற்று. பழிவாங்கும் எண்ணம் அற்றுப்போயிற்று. மாறாக அவர்களும் தேவனுடைய ராஜ்யத்தின் புத்திரர் ஆக வேண்டும் என ஜெபிக்கிறேன்.

6. திருமணமும் குடும்ப வாழ்வும்

திருமணத்திற்கு முன்

மாயை மாயை எல்லாம் மாயை என்று உணர்ந்த நான் அதை முற்றிலுமாக என் சரீரத்திலும் சிந்தனையிலும் உணர்ந்தது மட்டுமல்லாமல் என் வாழக்கையில் அதை செயல்படுத்த துவங்கினேன். என் கண்கள் கண்ட யாவும் ஒரு காரியத்தை திரும்பத் திரும்ப பேசுவதாக உணர்ந்தேன். அது என்னவென்றால் நான் ஒரு மாயை. நான் ஒரு நாள் அழிந்து போவேன் என்பதாகும். மட்டுமல்ல நான் அந்த பொருட்களை (அ) மனிதர்களை (அ) உறவினர்களை பார்க்கும் போது என் உள்ளம் இப்படியாகச் சொல்லும். இது ஒரு மாயை. இவர்கள் ஒரு மாயை. இவை யாவும் அழிந்து போகும். (வச: பிர. 1:2) ஆகவே நான் கண்ட யாவையும் வெறுத்தேன். தேவன் ஒருவரைத் தவிர என்னில் வேறு ஒன்றும் முக்கியமாகத் தெரியவில்லை. என் வாழ்க்கையை வெறுத்தேன். ஜீவனை வெறுத்தேன். மனிதர்களை வெறுத்தேன். பணம், புகழ், பெயர், யாவற்றையும் வெறுத்தேன். (வச: பிர: 2:17) அப்படியே தேவனோடு சென்று சேர்ந்து விட வேண்டும் என ஆசைப்பட்டேன். உலகைப் பற்றி சிந்திக்கவில்லை. மற்றவர்களுக்கு ஓடி சென்று உதவ ஆரம்பித்தேன். அதுவரை இல்லாத ஒரு தெய்வீக அன்பு எனக்குள் கடந்து வர ஆரம்பித்தது. நான் ஏற்கனவே கிறிஸ்துவின் அன்பை பற்றி நன்றாய் அறிந்தபடியினாலும் சத்தியத்திற்குள் வளர்க்கப்பட்ட படியினாலும் என் உள்ளம் ஒரு தீர்மானத்திற்குள் வந்தது. இந்த அனுபவங்கள் எல்லாம்என்னோடு மட்டும் முடிந்துவிடக் கூடாது. தேவன் என்னோடு இடைப்பட்ட காரியங்களை பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் வாழ்க்கையிலும் தெய்வீக சமாதானத்தை (யோவான் 14:27) பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ண ஆரம்பித்தேன். கர்த்தருடைய ஊழியத்தை வாழ்க்கை

முழுவதும் செய்வதற்கு என்னை ஒப்புக் கொடுத்தேன். தேவன் இந்த நான்கு ஆண்டு காலமும் என் வாழ்க்கையில் செய்த காரியங்களை என்னை அவர் அழைத்த அழைப்பை நான் எவ்வாறு மறக்க இயலும்? ஒரு பாவியாக கோபக்காரனாக பழி வாங்கும் எண்ணம் உடையவனாக இருந்த என்னை தேவன் அப்படியே தலைகீழாக மாற்றினார். இப்பொழுது ஒரு பரிசுத்தவானாக மற்றவர்களுக்கு உதவுபவனாகவும் விரோதிகளையும் நேசிப்பவனாக மாற்றினார். என் மனதில் எழுந்த கேள்விக்கு வேதாகமமே விடை தந்தது. 1 கொரி: 5:17) கிறிஸ்து என்னில் வந்தபடியினால் நான் ஒரு புதிய மனிதனாய் மாறினேன். என்னில் இந்த பழையவைகள் எல்லாம் ஒழிந்தன. இப்பொழுது பழைய நண்பர்களை காணும்போது விலகிச் செல்ல ஆரம்பித்தேன். பழைய காரியங்களையெல்லாம் விட்டுவிட்டு புதிய காரியங்களை செய்ய ஆரம்பித்தேன். தானியேல் போல மூன்று வேளையும் ஜெபிக்க ஆரம்பித்தேன். என் வேலைகளை கர்த்தருக்கு பயந்து செம்மையாக செய்ய ஆரம்பித்தேன். நான் நினைத்தவற்றையல்ல. தேவன் நினைத்தவைகளையே செய்ய ஆரம்பித்தேன். (ஏசா: 55:8) எனக்குள் ஒரு இனம்புரியாத சமாதானம் நிரந்தரமாக தங்கிற்று.

இப்போது நான் வேறுவிதமாய் சிந்திக்க ஆரம்பித்தேன். ஊழியத்தை எப்படி செய்வது? எங்கே?யாருடன் இணைந்து செய்வது? எப்படி செய்தால் தேவனுக்கு பிரியமாக உண்மையாக செய்ய முடியும் என சிந்திக்க ஆரம்பித்தேன். வல்லமையான ஒரு தேவ ஊழியனாக தேவ ஊழியத்தை செய்யும்போது நான் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நான் சிந்திக்க ஆரம்பித்தேன். எனக்குள் ஒரு கேள்வி வந்தது. இந்த அளவிற்கு வாழ்க்கையில் அடிபட்டு வாழ்க்கையை வெறுத்து ஒரு துறவியைப் போல இருக்கும் நான் அப்படியே இருந்து விடலாமா என்று யோசித்தேன். எனக்குள் இன்னொரு கேள்வி எழுந்தது. தேவனுடைய ஊழியத்தை வல்லமையாய் செய்ய வேண்டுமானால் அதற்கு வரும் தடைகளை

தகர்த்தெரிய வேண்டுமே? ஆகவே ஆண்டவரிடத்தில் ஆண்டவரே! நான் திருமணம் செய்து உமது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமா? (அ) திருமணம் செய்யாமலே உமது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமா ? என்று கேட்டேன். என் உள்ளத்தில் தெளிவான பதிலைக் கொடுத்தார்.

இதற்குப் பின்பு ஒரு வாரம் கழித்து என் நண்பருடைய கடையில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவருடைய நண்பர் ஒருவர் அவரது கடைக்கு பணம் கொடுப்பதற்காக கடந்து வந்தார். நாங்கள் மூவரும் பல காரியங்களைக் குறித்துப் பேசினோம். அரசியலைப் பற்றி, சொந்த காரியம், ஊர் நிலவரம் இப்படி இன்னும் பல காரியங்களை பற்றி பேசியதில் சில மணி நேரங்கள் கழிந்து விட்டது. இறுதியில் அந்த நண்பர் எழுந்து சென்று விட்டார். மீண்டும் நாங்கள் எங்கள் உரையாடலைத் தொடர்ந்தோம். ஒரு 5 நிமிடத்திற்கு பிறகு அந்த நண்பர் திரும்பி வந்தார். அப்போது அவர் சொன்னார். "நான் உங்களுக்கு பணம் கொடுத்தேனா என்பதை மறந்து விட்டேன். அதை தெளிவுபடுத்த மீண்டும் திரும்பி வந்தேன் என்றார். அப்போது தான் ஒரு பெரிய அற்புதம் நடைபெற்றது. அதுவரை அவரோடு மணிக்கணக்காய் பேசினோம். அப்போது எனது நண்பர் (மாமா) அவரிடத்தில் ஒரு கேள்வி கேட்டார். என்னை சுட்டிக்காட்டி இவர் எனது மாப்பிள்ளை. இவருக்கு திருமணத்திற்காக பெண் பார்க்கிறோம். உங்களுக்கு தெரிந்த நபர் இருந்தால் சொல்லுங்கள் என்றார். உடனடியாக அந்த சகோதரன் சொன்னார். எனக்கு தெரிந்த ஒரு பெண் இருக்கிறாள். என் மகளோடு கல்வி கற்றவள். ஆசிரியையாக பணியாற்றுகிறாள் என்று மேலும் எல்லா விபரங்களையும் சொன்னார். (சகோ. ரெஜினாள் வில்லியம்ஸ்). நானும் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு யோசிக்க ஆரம்பித்தேன். நான் ஏற்கனவே இதை குறித்து யோசித்தபடியால் சரி நாம் சென்று பார்க்கலாம் என்று சொன்னேன். எனது மாமாவுடன் மறுநாள்

அவர்களுடைய வீட்டிற்குச் சென்று பார்க்க புறப்பட்டு சென்றோம். அப்பொழுது அவள் ஆலயத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். எனக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது. ஒருபுறம் ஆச்சரியம். மறுபுறம் ஆழ்ந்த சிந்தனை. அப்பொழுதுதான் எனக்குள் ஒரு தெய்வீக குரல் ஒலித்தது. மகனே! உனக்கென்று நான் ஆயத்தப்படுத்தியிருக்கும் மகள் இவள்தான் என்றது. நாங்கள் பார்த்துவிட்டு திரும்பி வந்துவிட்டோம். இப்போது எனக்குள் பலவித சிந்தனைகள் பலவிதமான கோணங்களில் என் எண்ணங்களில் பறந்து சென்றன. பலரிடத்தில் இதைக் குறித்து பேசினேன். பல விஞ்ஞான கோட்பாடுகளை அலசி ஆராய்ந்தேன். பலர் என்னை பல கேள்விகள் கேட்டார்கள்.

மீண்டுமாக நான் ஒருமுறை எனது அண்ணனோடு சென்று சகோதரி வேலைபார்க்கும் பள்ளியில் சென்று மற்ற சக ஆசிரியர்களோடு அவர்களைப் பார்த்தேன். பல ஆசிரியர்கள் மிக உற்சாகப்படுத்தி பேசினார்கள். சில ஆசரியர்கள் என்னை தற்பரிசோதனை செய்யும்படியாக சில கடினமான ஆலோசனைகளை சொன்னார்கள். இறுதியாக தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் என்றனர். எனது எண்ணங்களும் சிந்தனைகளும் பலவிதமாக யோசிக்க ஆரம்பித்தன. தேவ வார்த்தையும் என்னோடு இடைபட்டது. இறுதியாக எனது பெற்றோரிடத்தில் என் விருப்பத்தை தெரிவித்தேன். அதன் பின்பு அவர்களும் என்னிடத்தில் பல கேள்விகளை கேட்டார்கள். நான் எனது அனுபவத்தை. தேவன் என்னோடு பேசின காரியங்களை அதாவது இவ்வுலகம் மாயை என்பதையும் எல்லாம் போலியானது என்பதையும் உணர்ந்து கொண்டேன். சுய கௌரவம் படிப்பு பட்டம் பதவி பெருமை வருமானம் எல்லாம் ஒன்றுமில்லை. தேவனுக்கு முன்பாக எல்லாம் மாயை என்பதையும் தெளிவாகச் சொன்னேன். மேலும் தேவனே என்னை ஊழியத்தை செய்யும்படியாக அழைத்திருக்கிறார் என்பதையும் தெளிவாகச் சொன்னேன். குடும்பத்தில் சிலர் எனது

கருத்துகளை ஆதரித்தார்கள். சிலர் எதிர்த்தார்கள். ஒரு வழியாக எனது பெற்றோர்கள் மற்ற காரியங்களை சகோதரியினுடைய வீட்டில் சென்று பேச தீர்மானித்தார்கள். அவர்களும் எங்கள் வீட்டில் வந்து பேசினார்கள். இதன் பின்பும் பல தடைகளை சத்துருவானவன் மனதிலே கொண்டு வந்தான். என்னை குறித்து அதிகமாக யாரும் புரிந்து கொள்ளாதபடியினால் நான் எனது அனுபவங்களைக் குறித்து மற்றவர்களிடம் பகிர்ந்தும் அவர்களுக்கு விளங்கவில்லை. இவ்வாறு ஒரு மாதம் கழிந்துவிட்டது.

திருமணம்

நானும் எனது குடும்பத்தாரும் அவர்களின் பதிலுக்காக காத்திருந்தோம். இதற்கிடையில் நான் எனது மாமாவின் கடையில் இருக்கும்போது வேறு ஒரு பெண்ணைக் குறித்தும் தகவல் கிடைத்தது. சரி அப்பெண்ணை சென்று பார்க்கலாம் என்று நாங்கள் புறப்படும் வேளையில் ஒரு நபர் வந்து எங்களிடத்தில் திருமணம் நிச்சயிப்பது குறித்து தகவல் சொன்னார். தேவனே அவருடைய சித்தத்தை செய்ய காரியங்களை வாய்க்கப்பண்ணி அநேகருடைய இருதயத்தை ஒருமுகப்படுத்தினார். துறவியாக வாழ்ந்து வருவதே மேல் என்று இருந்த நான் உலகத்தின் அத்தனை ஆசாபாசங்களையும் வெறுத்து தேவனை மட்டுமே மகிமைபடுத்த விரும்பிய நான் அவருடைய ஊழியத்தை வல்லமையாய் செய்வதற்குப் பல இடங்களில் பல திருச்சபைகளில் சென்று தேவனுடைய ஊழியத்தை செய்ய பல வாய்ப்புகளையும் சூழ்நிலைகளையும் தேவன் ஏற்படுத்தி தந்தார். அப்போது தொழிலில் ஏற்பட்ட பிரச்சனைகளினாலும் மற்றும் ஊழியத்தை செய்வதற்காகவும் வேலை செய்யும் பெண் வேண்டுமென்றிருந்த எனக்கு வேலை செய்யும் தேவனுக்கு பயந்த அவருக்கு கீழ்படிகிற அவர் கட்டளைகளை அப்படியே பின்பற்றுகிற மகளை தேவன் எனக்கு தந்தார். அதன் பின்பு 27–9–97 அன்று எங்களுடைய திருமண நிச்சயம் நடந்தது. அதன்

பின்புதான் பலர் பலவிதமாக பேசினர். இன்னும் சிலர் என்னுடைய தியாக மனப்பான்மையை தவறாக நினைத்தார்கள். சிலர் ஒருவேளை பொருளாதாரத்திற்காக என்றும் நினைத்தனர். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாகதேவ திட்டமே அதன் மூலம் நிறைவேறியது. அப்பொழுதெல்லாம் ஒரு சிறந்த ஊழியக்காரனாக தேவன் பயன்படுத்துவார் என்பதை யாரும் அறிந்திலர். ஆனால் எனக்கும் தேவனுக்கும் மாத்திரமே இந்த இரகசியங்கள் தெரியும். அநேகர் என்னை நேரில் பார்க்காமலேயே பாராட்டி பேசியிருக்கிறார்கள். இன்னும் சிலர் இவர்களின் எதிர்காலம் எப்படி இருக்குமோ? குழந்தைகள் எல்லாம் எப்படி இருப்பார்களோ? என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினர். குறிப்பாக பெற்றோர்கள் பயந்தனர். எங்களின் வாழ்க்கையைக் குறித்த தேவ திட்டத்தை நான் அப்போதே அறிந்திருந்தேன். என்னைப் பார்த்து கேள்வி கேட்கும் அநேகருடைய ஒரு பதிலை இப்புத்தகத்தின் வாயிலாக கொடுக்க விரும்புகிறேன். இவை எல்லாம் ஏன் நடந்தது என்று சிந்திக்கும்போது ஒன்றை மாத்திரம் கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார். தேவனுடைய நாமம் ஒன்றே மகிமைப்படும்படி இவையெல்லாம் சம்பவித்தது. (யோவான் 9:3) தேவனுடைய கிரியைகள் எங்கள் மூலமாய் வெளிப்படும்படி இவை யாவும் சம்பவித்தன. அதன் பின்பு 18.02.97 அன்று தென் இந்தியா நெல்லை மாவட்டம் அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் சி.எஸ்.ஐ. தூய பவுலின் ஆலயத்தில் வைத்து எங்கள் திருமணம் நடைபெற்றது. தொழிலினிமித்தம் பெரும் நஷ்டத்தை சந்தித்த நான் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. பல்வேறு இன்னல்களுக்கிடையில் எங்கள் ஜெபம் எங்களை வழி நடத்தி வந்தது. நானும் சகோதரியும் ஊழியத்திற்காக பாரத்தோடு ஜெபிக்கிறோம். அப்பொழுதெல்லாம் நான் ஒரு ஊழியக்காரன் என்பதே சகோதரிக்கு தெரியாது. நான் ஊழியத்திற்கான தேவ அழைப்பைக் குறித்து அவளிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தேன். நான் வேதபள்ளியை நாள்தோறும்

சென்று கவனித்து வந்தேன். மேலும் பள்ளி வேலைகளை ஒழுங்காக செய்தேன். அவளும் அவளது பள்ளிக்கு சென்று தனது பணியை செவ்வனே செய்து வந்தாள். அவளது பள்ளி இருக்குமிடம் அவளது சொந்த கிராமத்திற்கு அருகிலுள்ள மேலபட்ட முடையார்புரம் டிடிடிஏ இம்மானுவேல் நடுநிலைபள்ளியாகும். இப்பள்ளியில் தானே சகோதரி ஏறத்தாழ 13 வருடமாக வேலைசெய்து வருகிறார்கள். பின்பு நாங்கள் 10.1.98 அன்று தென்காசியில் ஒரு வீட்டில் குடியமர்ந்தோம். அங்கிருந்து எங்கள் பணியை செய்தோம். இதற்கிடையில் எனது பல்வேறு பொருளாதார காரியங்களை ஒழுங்காக கணக்கு முடித்து வந்தேன். நான் யார் யாருக்கு கொடுக்க வேண்டியிருந்ததோ அவர்களுக்கெல்லாம் நாங்கள் வேலைசெய்து பழைய கடன்களை முறையாக செலுத்தினோம். ஏனென்றால் தேவனுக்குள் வாழும் ஒவ்வொருவரும் கொடுக்கல் வாங்கல் காரியங்களில் மிக மிக ... மிக உண்மையாக வாழ வேண்டுமென்பதை மிக தெளிவாக கற்றுக் கொண்டேன். ஆகவே அதன்படி செய்து வந்தேன். கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால் அநேகத்தில் அதிகாரியாக வைப்பார். (மத். 25:21) என்கின்ற வசனத்தை பின்பற்ற ஆரம்பித்தேன். ஏனெனில் தேவனே இவை எல்லாவற்றையும் எனக்கு கற்றுக் கொடுத்தார். உண்மையான தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டது என்பதை எனக்கு உணர்த்தினார் (I கொரி. 6:9 –10) தொடர்ந்து ஏறத்தாழ ஒரு வருடமாக நாங்கள் ஜெபித்துக் கொண்டும் வேதத்தை தியானித்துக் கொண்டும் இருந்தோம். படிப்படியாக சில ஆவிக்குரிய சகோதரர்களோடு நான் தொடர்பு வைத்துக் கொள்ள ஆரம்பித்தேன். அதுவரையில் ஆவிக்குரிய நண்பர்களின் நட்பு எனக்கு கிடையாது. ஒரு சகோதரர் நீதிதாசன் என்பவர் என்னோடு ஐக்கியமானார். அவரும் நானும் காட்டிற்குள் சென்று தனியாக ஜெபிக்க ஆரம்பித்தோம். அவரோடு கூட தேவன் எனக்கு கொடுத்த தரிசனங்களை பகிர்ந்து கொண்டேன். அவர் இன்னும் சில நண்பர்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் சிறப்பாக இசை மீட்டக் கூடிய நண்பர்கள். நான் சில இடங்களுக்கு சென்று

கைப்பிரதிகளை கொடுக்க ஆரம்பித்தேன். சென்னையில் இருந்து கைப்பிரதிகளை பார்சலாக வரவழைத்தேன். கிராமங்களுக்கு சென்று தெருமுனை பிரசங்கம் செய்தேன். என்னை பார்க்கும் கிறிஸ்தவ நண்பர்களிடத்தில் எனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டேன். அப்பொழுது சென்னையில் **'CONS'** என்கின்ற ஸ்தாபனம் பாளையங்கோட்டையில் ஒரு ஊழியர் கருத்தரங்கு நடத்தினார்கள். நானும் அதில் கலந்து கொண்டேன். தேவன் எனக்கு கொடுத்த தரிசனங்களையே அவர்களும் தெளிவாக விளக்கிக் காட்டினர். அதன் பின்பு எனக்கு பல ஆவிக்குரிய நண்பர்கள் போதகர்கள் அறிமுகமாயினர். தேவன் எனக்குள்ளாக ஒரு பரந்த தரிசனத்தை கொடுத்தார். ஏற்கனவே நான் இரட்சிக்கப்பட்ட நாளில் பெற்றுக் கொண்ட தரிசனத்தை அவர் உறுதிப்படுத்தினார். அப்பொழுதுதான் அப்போ.பவுலைப் போல தீவரமாக ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்காக தேவன் பவுல் நற்செய்தி இயக்கம் என்கிற பெயரைக் கொடுத்தார். அதுவரையில் ஊழியத்திற்கென்று பெயர் கொடுக்கப் படவில்லை. என் உள்ளம் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை பிரசங்கியுங்கள் என்ற கட்டளை என் கண்முன் நிரந்தரமாக வந்து நின்றது.

இப்போது நாங்கள் தென்காசி சி.எஸ்.ஐ. கிறிஸ்துவ ஆலயத்தின் அங்கத்தினராக இருக்கிறோம். அந்த திருச்சபை மக்களோடு நல்ல ஐக்கியம் வைத்திருக்கிறோம். இந்த சபையில் அப்போது நான் பாடகர் குழுவில் அங்கமானேன். தொடர்ந்து ஆராதனைக்கு சென்று பாடகர் குழுவில் பங்கு பெற்றேன். அங்கிருந்த திருச்சபை போதகரும் சபை ஊழியரும் பாடகர் குழுவினரும் என்னை அதிகமாக உற்சாகப்படுத்தினர்.

முதல் குழந்தை:

இதற்கிடையில் எனது மனைவி முதற் குழந்தைக்கு தாயானார். தென்காசியில் உள்ள ஒரு மருத்துவமனையில்

எங்களது அன்பு மகன் Dalbut 23.9.98 அன்று பிறந்தான். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். அநேகர் அவனை பார்ப்பதற்கு கூடிவந்தார்கள். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒரு கேள்வி இருந்தது. குழந்தை யாரைப்போல இருக்கும் என்பதுதான் அந்த கேள்வி. நான் நன்றாக விசுவாசித்தேன். ஏனெனில் நான் விசுவாசிப்பவர் இன்னார் என்பதை அறிவேன். அவன் வயிற்றில் இருக்கும்போதே பல நாட்கள் அவனுக்காக ஜெபித்தோம். குறிப்பாக அவனுடைய சரீரத்திற்காகவும் தலை முடிக்காகவும் கூட நாங்கள் ஜெபித்தோம். அது மாத்திரமல்ல ஆண் குழந்தைதான் வேண்டும் என்று ஜெபித்தோம். தேவன் எங்கள் எல்லா ஜெபத்தையும் கேட்டு அப்படியே பதில் தந்தார். அற்புதம் செய்தார். தேவனுக்கே சகல துதியும் உண்டாகட்டும். கர்த்தருக்கே ஸ்தோத்திரம். நான் ஊழியத்தை செய்து கொண்டு பள்ளி நிர்வாகத்தையும் கவனித்து வந்தேன். அப்போது எங்களுடைய பள்ளி ஒரு சிறிய கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் பின்பு தேவன் எங்களை படிப்படியாக உயர்த்த ஆரம்பித்தார். எங்களுடைய பள்ளி அதன் அருகில் உள்ள ஒரு பெரிய கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு தேவன் உதவி செய்தார். இந்த வேளையில் தேவன் எங்களை ஊழியத்தில் உயர்த்தும்படிக்கு சில காரியங்களை செய்ய ஆரம்பித்தார். எங்களுடைய வீட்டிற்கும் பள்ளிக்கும் தொலைபேசி இணைப்புகளை பெற்றுக்கொள்ள உதவி செய்தார். அதுவரைக்கும் நான் முற்றிலுமாக உலகையும் பொருட்களையும் வெறுத்த நிலையில் தேவன் தன்னுடைய ஊழியத்திற்கென்று இவைகளை கொடுக்க ஆரம்பித்தார். மறுபுறத்தில் ஊழியத்திற்காக எனக்கு உதவி செய்யும்படி இசை மீட்டும் சில நண்பர்களை தேவன் அறிமுகப்படுத்தினார். நாங்கள் சில சபைகளில் சென்று ஊழியத்தை செய்ய ஆரம்பித்தோம். முதல் குழந்தை பிறப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சாந்தபுரம்சேகரம் அச்சன்புதூர் கிராமத்தில் முழு இரவு ஜெபம் 19.9.98 அன்று நடத்த கடந்து சென்றோம். ஒருபுறம் மனைவி பிரசவத்திற்காக காத்திருக்கும் நேரத்திலும் தேவனுடைய

7. அழைப்பின் தீவிரம்

நாங்கள் அப்பொழுது தென்காசியில் உள்ள வீட்டில் இருந்து எங்களது பள்ளியை கவனித்து வந்தோம். எனது மனைவி தென்காசியில் இருந்து வேலைக்கு சென்று வந்தாள். நாங்கள் ஊழியத்தை செய்வதற்காய் ஜெபித்துக் கொண்டிருந்தோம். அப்போது நான் ஊழியத்திற்குள் கடந்து வரவில்லை. தென்காசி சி.எஸ்.ஐ. சபையின் பாடகர் குழுவில் நான் அங்கமானேன். வழக்கம்போல நாட்கள் ஓட ஆரம்பித்தது. ஆனால் தேவன் அவருடைய சித்தத்தை நான் செய்ய வேண்டுமென்பதில் வைராக்கியமாகவும் தீவிரமாகவும் செயல்பட ஆரம்பித்தார். நான் அவரின் அழைப்பைப் பெற்றிருந்தேன். ஆனால் ஊழியத்தை தீவரமாய் செய்ய ஆரம்பிக்கவில்லை. அதே வேளையில் தேவன் தமது அழைப்பின் தீவிரத்தை எனக்கு உணர்த்த ஆரம்பித்தார்.

பணம் தொலைந்து போதல்:

ஒரு நாள் நான் எனது ராஜ் ஏஜென்ஸிஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் பணம் வசூலிப்பதற்காக எனது கிராமமாகிய மத்தளம்பாறைக்குச் செல்ல புறப்பட்டேன். அப்போது எனது தொழில் முற்றிலும் நலிவடைந்து முடிந்து போன நிலையில் சிலர் எனக்கு பணம் தரவேண்டியிருந்தது. நான் போகும் போது எனது கைப்பையில் கொஞ்சம் பணம் இருந்தது. ரூ.50 ரூ.100 நோட்டுகளாய் இருந்தது. எனது சட்டைப் பையில் போவதற்கு தேவையான ரூ.2 நாணயம் மட்டும் இருந்தது. நான் பேருந்து

நிற்குமிடத்திற்கு சென்றேன். அப்போது எனது நண்பர் ஒருவர் அவரது இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அவரின் பின் சீட்டில் யாரும் இல்லை. ஆகவே அவர் என்னை அழைத்துக் கொண்டு சென்றார். நானும் எனது ஊரில் சென்று எனது காரியங்களை கவனித்தேன். ஒரு வாடிக்கையாளர் எனக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.50ஐ செலுத்தினார். அதை எனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டேன். எல்லா வேலைகளையும் முடித்த பின்பு நான் மீண்டும் தென்காசிக்கு புறப்பட்டேன். அப்போது எனது சட்டைப் பையில் பேருந்துக்கு தேவையான ரூ.2 இருந்தது. இந்த 50 ரூபாயும் இருந்தது. அது தொலைந்து விடக் கூடாது என்பதற்காக அதை எடுத்து எனது கைப்பையில் வைத்தேன். அது ஒரு புதிய வடிவிலான 50 ரூபாய் நோட்டு. அப்போது ஒரு வாடகைக் கார் ஒன்று தென்காசிக்கு போகும்படி வந்தது. நான் அதில் ஏறி தென்காசி வந்து சேர்ந்தேன். நான் வேறு எங்கும் செல்லவில்லை. யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. வீட்டில் வந்து நான் பார்த்த பொழுது எனது கைப்பையில் ஏற்கனவே வைத்திருந்த பணம் இருந்தது. ஆனால் 50 ரூபாய் புதிய தாளை காணவில்லை. நான் அதை எனது மனைவியிடம் கூறினேன். அப்போது அதைப்பற்றி நாங்கள் அதிகமாக யோசிக்கவில்லை. இது ஏன் நடந்தது என்பதும் எனக்குத் தெரியாது.

மோதிரம் தொலைந்து போகுதல்:

சில நாட்கள் கழித்து எனது மனைவியின் பள்ளியில் இருந்து சேகர அளவில் ஆசிரியர் தியான கூட்டம் திருவனந்தபுரத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். நாங்களும் அதில் கலந்து கொண்டோம். அப்போது Rev. M.K. Daniel Raj ஐயா அவர்கள் குருவானவராக இருந்தார்கள். அவர்கள் எங்களை மிகவும் அதிகமாக நேசிப்பவர்கள். எனது மனைவியை தனது மகளைப்போல நினைக்கக் கூடியவர்கள். நாங்கள் கூட்டத்திற்காக அழைக்கப்பட்டு பேருந்தில் ஏறி திருவனந்தபுரம் சென்றோம். அந்நகரத்திற்கு

அதிகாலையில் சென்று சேர்ந்தோம். பேருந்தில் இருந்து இறங்கி சுற்றிப் பார்க்கும் போது எனது மனைவியின் கையில் இருந்த 3 கிராம் தங்க மோதிரம் ஒன்று தவறி புதருக்குள் விழுந்துவிட்டது. நாங்கள் மீண்டும் மீண்டும் தேடினோம். அகப்படவில்லை. சக ஆசிரியர்களும் இணைந்து தேடினார்கள். இறுதியாக குருவானவரிடம் செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர்களும் மிகவும் வருத்தத்தோடு யாவரும் சேர்ந்து தேடுங்கள் என்று கூறினார். கடைசி வரை கிடைக்கவே இல்லை. நான் மோதிரம் தொலைந்ததைப் பற்றி ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால் எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. ஏன் எங்களுக்கு மாத்திரம் இப்படி நடக்க வேண்டுமென்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் ஆறுதல்படுத்தினர். எனக்கு ஒன்றும் கவலை இல்லை. ஆனால் என் கேள்விக்கு பதில் ஒன்றும் இல்லை. தொடர்ந்து நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஏன்? தேவனே ஏன்? என்று அவரிடம் எனது கேள்வியை வைத்தேன். இப்படியாக எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. அன்றாட வேலைகளும் நடந்து கொண்டிருந்தது. ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்தோம்.

கொலுசு தொலைந்து போகுதல்:

பின்பு ஒரு நாள் வழக்கம் போல சகோதரி ரெஜினாள் அவர்கள் வேலைக்கு சென்றுவிட்டு வந்தார்கள். ஒவ்வொரு நாள் வரும்போதும் ஒவ்வொரு காரியத்தை என்னோடு பகிர்ந்து கொள்வார்கள். பள்ளியில் நடந்தவைகள், பேருந்தில் நடந்த நிகழ்ச்சிகள், மற்றும் ஆலயத்தின் காரியங்கள் இப்படி ஏதாவது ஒரு காரியம் பற்றி பேசிக் கொண்டிருப்போம். சில சமயம் பேருந்தில் பள்ளி செல்வதால் ஏற்படும் பல பிரச்சனைகளை சொல்லுவார்கள். அன்றைக்கு ஒரு காரியத்தை என்னிடம் கூறினார்கள். எனது மனைவியின் காலில் இருந்து கொலுசுகளில் ஒன்று காணாமற் போய்விட்டது. இதை கேட்டவுடன் எனது உள்உணர்விற்கு ஒன்று புரிந்தது. தேவனே என்னை ஊழியத்திற்கு

நினைக்கிறார். மற்றவர்களுக்கு ஏற்படாத பிரச்சனைகள் எனக்கு ஏன் ஏற்படுகிறது என்று அப்போது புரிவதைப் போல் இருந்தாலும் இறைவன் என்னை அழைக்கின்ற அழைப்பின் தீவிரத்தை நான் முழுமையாக உணர்ந்து கொண்டேன். இனி ஊழியத்தை செய்வதற்கு தாமதிக்கக் கூடாது என்று நான் நினைக்க ஆரம்பித்தேன். இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே வேறொரு சம்பவமும் நடந்தது.

மீண்டும் பணம் தவறுதல்,

நான் ஊழியத்தை செய்ய வேண்டுமானால் அதற்கேற்ற வருமானம் எனக்கு வேண்டும் என நினைத்தேன். அப்பொழுது எங்கள் பள்ளியின் கிளைப் பள்ளி ஒன்றை தென்காசி இரயில்வே நிலையம் அருகில் உள்ள உடையார் தெரு என்னுமிடத்தில் துவக்கினேன். அங்கும் அமார் 40 மாணவர்கள் இருந்தார்கள். அதற்கென்று நாங்கள் பார்த்த இடத்திற்கு டெபாசிட் தொகை கேட்டிருந்தார்கள். அவர்களிடத்தில் நான் கொஞ்சம் பணம் கொடுத்திருந்தேன். இன்னும் 1000 ரூபாய் அந்த இடத்தின் உரிமையாளருக்கு கொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் அதைத் தரும்படி என்னை கேட்டனர். அப்போது நான் மத்தளம்பாறையில் இருந்த எனது மாமா ஒருவரிடம் சென்று அந்த பணத்தை வாங்கிக் கொடுக்க தீர்மானித்தேன். நான் அவர்களிடம் சென்று கேட்ட போது கொடுத்தார்கள். 1000 ரூபாய் முழுவதும் 50 ரூபாய் தாள்கள் 20. நான் அதை எண்ணிப் பார்த்தேன். அவர்களும் சரியாய் இருக்கிறதா என்று கேட்டார்கள். நானும் சரியாய் இருக்கிறது என்றேன். அந்த பணத்தை எடுத்துக்கொண்டு பேருந்து நிலையம் வந்து சேர்ந்தேன். அப்போது எனது சித்தப்பா ஒருவர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். அன்றைய தினம் பாபநாசம் என்னும் இடத்தில் ஒரு விசேஷ திருவிழா நடைபெற்றது. தென்காசியில் இருந்து பல பேருந்துகள் அங்கு இயக்கப்பட்டன. தென்காசியில் இருந்து அங்கு செல்லும்போது மிகுந்த மக்கள் கூட்டம் இருக்கும். ஆனால் அங்கிருந்து திரும்பி வரும்போது பேருந்தில் மக்கள் கூட்டம்

அதிகமாக இருக்காது. அநேகமாக காலியாகத்தான் திரும்பி வரும். அந்த நிலையில் ஒரு பேருந்து ஒன்று வந்தது. நான் அதில் ஏறி தென்காசி வந்து சேர்ந்தேன். வீட்டிற்கு வந்து எனது சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். சிறிது தூரம் கழித்து அது பஞ்சர் ஆகிப் போனது. அப்போது நான் வேறு ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். போகும் போது எனது நண்பர் ஒருவரின் பாத்திரக் கடையில் சிறிது நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அவரிடத்திலும் நான் காண்பித்தேன். அதன்பின்பு அந்த இடத்தின் உரிமையாளரிடத்தில் எழுதி வாங்குவதற்கு ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்க ஒரு கடைக்குச் சென்றேன். அங்கு ஸ்டாம்பு வாங்கி விட்டு உடையார் தெருவை நோக்கிச் சென்றேன். அங்கு எங்கள் பள்ளி ஆசிரியை பபிதா வீட்டிற்குச் சென்றேன். அவர்களே அந்த இடத்தைப் பார்த்து எங்களுக்காக பேசி வாங்கிக் கொடுத்தவர்கள். அவர்கள் வீட்டில் இருந்து அந்த பள்ளி இடத்தின் உரிமையாளரை அழைத்தோம். அவர்களும் வந்தார்கள். அப்போது நான் எனது பையில் இருந்து பணத்தை எடுத்து எண்ண ஆரம்பித்தேன். அப்போது எனது கையில் வெறும் 500 ரூபாய்தான் இருந்தது. எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. மறுபுறம் வேதனையாய் இருந்தது. மீண்டும் மீண்டும் யோசித்தேன். தேடினேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 20 ஐம்பது ரூபாய் நோட்டுகள் இருந்த இடத்தில் 10 ஐம்பது ரூபாய் நோட்டுகள் மட்டுமே இருந்தது. எந்த இடத்திலேயும் தவறி விழுவதற்கு வாய்ப்பே இல்லை. என்னோடு கூட உறவினர் பேசினார். பேருந்தில் கூட்டம் இல்லை. நண்பரின் அருகில் உட்கார்ந்திருந்தேன். எந்தவொரு இடத்திலும் பணம் தவறுவதற்கு வாய்ப்பு கிடையாது. ஒரே குழப்பமாய் இருந்தது. ஒருபுறம் பயம் வந்தது. ஒரு வழியாக இருந்த பணத்தைக் கொடுத்து விட்டு வந்து விட்டேன். பத்து 50 ரூபாய் தாள்கள் காற்றில் பறந்தாலும் தெரிந்து விடும். ஆனால் எப்படித் தொலைந்தது என்பது புரியாத புதிர். அப்போது எனது மகன் Dalbut பிரசவத்தை எதிர்பார்த்த நேரமிது. ஆகவே எனது சிந்தனை

விபரீதமாக இருந்தது. இன்னும் நான் தாமதித்தால் குழந்தைக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்தேன். இப்போது முழு நிச்சயமாக நான் ஒன்றை சொல்ல முடியும். தேவன் என்னை அவருடைய ஊழியத்திற்கு அழைத்தார் என உணர்ந்து கொண்டேன். அது எனது வாழ்க்கையின் திருப்பு முனையாய் அமைந்தது. நடந்த யாவற்றையும் நான் நினைத்தும் பார்த்தேன். முதலாவது ஒரு [illegible] ரூபாய் காணாமற் போனது எப்படி என்று தெரியாது. பின் எனது மனைவியின் மோதிரம் மற்றும் கொலுசு. இப்போது 500 ரூபாய் — இவையெல்லாம் எனக்கு ஒன்றை மாத்திரம் வெளிப்படுத்தின. நான் சாதாரணமாய் ஊழியத்தை செய்வதற்காக அல்ல. தீவிரமாய் ஊழியத்தை செய்வதற்கு அழைக்கப்பட்டேன். இதற்கடுத்த ஞாயிற்றுக் கிழமையே நான் ஒரு சபையில் எனது பிரசங்கத்தை வல்லமையாய் செய்ய ஆரம்பித்தேல். அதுவரை நான் பங்குபெற்ற தென்காசி பாடகர் குழு தலைவரிடம் இனி நான் பாடகர் குழுவில் இடம் பெற முடியாது. ஆண்டவரின் ஊழியத்தை செய்ய பல இடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கிறது என்று கூறினேன். பல இடங்களுக்கு ஊழியத்திற்காக தீவிரமாக கடந்து சென்று ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்.

LIC டெர்மினேசன்

மேலும் ஒரு முக்கியமான காரியத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் LIC-யில் முகவராக இருந்தபடியினால் LIC–யின் விதிமுறைகளின்படி அதற்குரிய வளர்ச்சி அதிகாரியோடு எங்களை தொடர்பு படுத்தி விடுவார்கள். அவ்வப்போது அவர்கள் எங்களை சந்தித்து புதிய நபர்களை சேர்க்கும்படியாகவும் மற்றும் அவ்வப்போது நடக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் அழைப்பார்கள். ஆனால் நான் ஊழியத்தை செய்வதற்காகவும் மற்ற காரியங்களை கவனிப்பதற்காகவும் கடந்து சென்று விடுவேன் ஆனாலும் அவர்களுக்கு பதில் சொல்லும் பொறுப்பும் எனக்கு இருந்தது. எனவே அடிக்கடி என்னை தொலைபேசியல் தொடர்புக்

கொண்டு பேசுவார்கள். இன்னும் இத்தனை நபர்களை சேர்க்க வேண்டும். இந்த மாதத்திற்குள்ளாக இத்தனை நபர்களை புதிதாய் சேர்க்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஒவ்வொரு முகவருக்கும் Agency year என்ற ஒன்று உண்டு. ஒரு குறிப்பிட்ட தேதியில் அது முடிந்து விடும். எனக்கு மே மாதம் 31ஆம் தேதி Agency year ஆகும். இந்த மே மாதம் என்பது எனக்கு மிகவும் நெருக்கடியான மாதம் ஆகும். எப்படியென்றால் நாங்கள் பள்ளிக்கு மாணவர்களை சேர்ப்பதற்காக பல காரியங்களை செய்ய வேண்டியிருக்கும். இரண்டாவதாக எல்.ஐ.சி.க்கு அதுவே Agency year மாதமாகும். மூன்றாவதாக PGM ஊழியத்தில் வருடந்தோறும் நாங்கள் நடத்தி வரும் முகாம் நடைபெறும். அந்த வருடத்தில் முதலாவது வருடாந்திர முகாம் 2000ம் வருடம் மே மாதம் 27ம் தேதி ஒழுங்கு செய்திருந்தோம். நானோ வருடாந்தர முகாமை நடத்துவதற்காக ஓடிக் கொண்டிருந்தேன். பல இடங்களுக்கு அழைப்புகள் அனுப்புவதும் ஊழியர்களை ஒழுங்க படுத்துவதுமாக பல வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன். முதலாவது நான் தேவனுக்கே முதலிடம் கொடுக்கிறபடியால் எனக்கு அதைத் தவிர மற்றவை எல்லாம் முக்கியமாக தோன்றவில்லை. 27ஆம் தேதிக்கு முன்பதாக எல்.ஐ.சி.க்கு நான் கொடுக்க வேண்டிய அனைத்து paper களையும் கொடுக்க வேண்டி இருந்தது. அப்பொழுதுதான் அந்த Agency year-ல் நான் கொடுக்க வேண்டிய வணிகம் நிறைவு பெறும். இல்லையென்றால் தொடர்ந்து நான் முகவராக இருக்க முடியாது. LIC முகவாண்மை பெறுவதற்கு நாங்கள் எப்போது 18 வயது ஆகும் என்று காத்திருந்து பெற்றோம். எனது தந்தையார் அதில் முகவராக இருப்பதால் அதில் உள்ள பல பயன்களை எடுத்துச் சொல்லி என்னையும் அதில் சேர்த்து விட்டார்கள். நான் ஏற்கனவே சொன்னது போல குறைந்தபட்சம் வணிகம் 12 நபர் 60000 என்பது அவர்களுடைய இலக்கு ஆகும்.

நான் 12 நபர் கொடுப்பதற்கு சில paperகள் என்னிடத்தில் இருந்தன. 27.5.2000 அன்று காலையில் குற்றாலம் கிறிஸ்து குல ஆசிரமத்தில் முகாமிற்காக நின்று கொண்டிருந்தேன்.

அப்போது எனது தந்தை வந்தார்கள். மிகவும் கோபத்தோடு என்னிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்டார்கள். அப்போதுதான் எனக்கு புரிந்தது. அந்த paper-களை எனது வீட்டில் வைத்து பூட்டிவிட்டேன். எனது தந்தை வீட்டிற்கு சென்று பேப்பர்களை எடுத்து அலுவலகத்தில் சமர்ப்பித்தார்கள். அதன் பின்பு பள்ளியைத் திறக்க வேண்டிய காரியத்தில் நான் கவனம் செலுத்தினேன். June மாதத்தில் எல்.ஐ.சி. யை பார்த்தபோது எனது முகவாண்மை தானாகவே ரத்து ஆகிவிட்டது. காரணம் என்னவென்றால் 12 நபர்களுக்கு பதிலாக 11 நபர்களே எனது கணக்கில் இருந்தனர். நான் 12 நபர் கொடுத்திருந்தேன். அந்த 12வது நபர் அவருக்கு செலுத்த வேண்டிய பிரிமியம் தொகையின் அளவு குறைந்ததால் பாலிசி ஆகவில்லை. இது எனக்கும் எனது தந்தை மற்றும் வளர்ச்சி அதிகாரிக்கும் தெரியாமலே நடந்து முடிந்து விட்டது. அப்போது நான் உணர்ந்து கொண்டேன். நான் அந்த வேலையை செய்வதற்கு தேவனே விரும்பவில்லை.

கிளை பள்ளிகள்:

இப்படியாக தேவன் என்னை அழைத்த அழைப்பின் தீவிரத்தை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப நான் ஊழியம் செய்துவருகிறேன். தேவனைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதே எனது நோக்கம். தேவனுக்காக வாழ்கிறேன் என்பதே எனது ஒரே சந்தோஷம்.

வேறு ஒரு காரியத்தையும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 99ஆம் ஆண்டு நாங்கள் உடையார் தெருவில் ஒரு பள்ளியை ஆரம்பித்து நடத்தி வந்தோம். அதில் இரண்டாண்டுகள் கடினமாக உழைத்து இறுதியில் சில காரணங்களால் அதை சரியாக செய்ய முடியவில்லை. அதே போல 2000மாவது ஆண்டில் சகோதரி வேலை செய்யும் இடத்தில் ஒரு நர்சரி பள்ளியை துவக்கி நடத்தினோம். இரண்டு ஆண்டுகள் கடினமாக உழைத்து அங்கும் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

காரணம் தேவன் எங்களை அவருடைய ஊழியத்தில் மட்டுமே கவனம் செலத்தும்படியாகவும் எங்கள் நேரத்தை செலவிடும் படியாகவும் எதிர் பார்க்கிறார் என அறிந்து கொண்டோம். இரண்டு இரண்டு ஆண்டுகள் கடினமாக உழைத்தும் எங்களால் சரியாக நடத்துதற்கேற்ற சூழ்நிலை இருந்தும் தேவன் அதை அனுமதிக்கவில்லை. அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஊழியத்திற்காக செலவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் என் நேரம் முழுவதும் அதை கவனிப்பதிலே செலவழிந்துவிட்டது. இதை எல்லாம் கவனித்து பின் ஊழியம் செய்ய முடியாது. எனவே முதலாவது ஊழியத்தை செய். பின்னர் இவற்றை நான் பார்த்துக் கொள்வேன் என்றார். தேவன் என்னை அழைத்த அழைப்பின் தீவிரத்தை நீங்கள் அறிந்து கொள்ளவே இவற்றை எழுதுகிறேன்.

---

8. பவுல் நற்செய்தி இயக்கம் (PGM ஊழியம்) தோன்றிய வரலாறு

தோற்றம்:

இந்த புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிற நீங்கள் இப்போது PGM ஊழியத்தைக் குறித்து அறிந்திருப்பீர்கள். கடந்த 5 ஆண்டுகளாக PGM ஊழியங்களை கர்த்தரே சிறப்பாக நடந்தி வருகிறார். ஏனெனில் அவரே இந்த ஊழியத்தை ஆரம்பித்தவர். அவரே நடத்தியும் வருகிறார். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்ற வாக்கிற்கேற்ப உண்மையாய் ஊழியத்தை செய்ய அவரே பெலன் தருகிறார். ஆகவே இவ்வூழியம் தோன்றிய வரலாற்றையும் அதன் நோக்கங்களையும் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் உங்களுக்கு தெளிவாக கூற விரும்புகிறேன். இதுவரை நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் தொகுத்துக் கூறவும் நான் ஆசைப்படுகிறேன். ஏற்கனவே நான்

கூறியபடி தேவன் என்னை அழைத்த போது 25.7.97 அன்று அவர் கொடுத்த தரிசனத்தின்படி ஊழியத்தைச் செய்ய பவுல் நற்செய்தி (PGM) இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. தேவனுடைய அன்பையும் மனுக் குலத்திற்காக அவர் சிந்தின இரத்தத்தையும் அதன் மூலம் நாம் பெறுகிற சமாதானத்தையும் மனுமக்களுக்கு அறிவிக்க தீராத வாஞ்சையோடு செயல்படுகிறோம். சுவிசேஷமும் எழுப்புதலும் இதன் இரண்டு கண்களைப் போன்றது. அப். பவுல் எவ்வளவு தீவிரமாக ஊழியம் செய்தாரோ அவ்வளவு தீவிரமாக இக்காலத்தில் ஊழியம் செய்ய தேவன் என்னை அழைத்தார். ஆகவே அப். பவுலைப் போல வெகு தீவிரமாக ஊழியத்தை செய்து வருகிறோம். எனவே நான் அவரது பெயராலேயே இவ்வியக்கத்திற்கு பெயரிடப் பட்டுள்ளது. விசுவாசம் பரிசுத்தமும் ஊழியமும் இவ்வியக்கத்தின் மந்திர சொற்கள் ஆகும். அதுவே உயிர் மூச்சு ஆகும். பவுல் நற்செய்தி இயக்கம் அகில இந்தியாவில் தரிசனத்தைக் கொண்டுள்ளபடியினால் பவுல் நற்செய்தி இயக்கம் இந்தியா (Paul's Gospel Mission of India) என பெயரிடப்பட்டுள்ளது. நான் இரட்சிக்கப்பட்ட பொழுது தேவ தரிசனத்தைப் பெற்றேன். அதன் பின் Cons மூலமாக அந்தரிசனத்தை உறுதிப் படுத்தினார். இப்போது அந்த தரிசனத்தோடு ஊழியத்தை செய்து வருகிறோம். தரிசனத்தை விட்டு விலகாதபடி தேவனே எங்களை காத்து நடத்துகிறார். தற்போது அநேக தேவ பிள்ளைகள் இவ்வியக்கத்தில் இணைந்து செயல்படுகின்றனர்.

முதலாவது 19.9.98 அன்று சாந்தபுரத்தில் முழு இரவு ஜெபம் நடத்தி தேவனுடைய ஊழியத்தை ஆரம்பித்தோம். அதன் பின்பு படிப்படியாக ஜெபத்தில் வளர்ந்து பல இடங்களுக்கு ஊழியங்களுக்காக கடந்து சென்றோம். நானும் PGM இன்னிசைக் குழுவினரும் 24.12.98 அன்று அம்பநாடு எஸ்டேட் சென்று தேவ ஊழியத்தை நிறைவேற்றினோம். மட்டுமல்லாது ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைகளிலும் செய்தி கொடுத்து தேவனை மகிமைபடுத்தி

வருகிறோம். அதற்குப் பின்பு முதலாவது 10.4.99 அன்று முறையாக பல ஆண்டவருடைய பிள்ளைகளை வைத்து PGM ஊழியத்தின் அறிமுகக் கூட்டம் ஒன்றை மேலகரத்தில் வைத்து நடத்தி இவ்வியக்கத்தைப் பற்றி விரிவாக விளக்கமாக கூறி ஊழியம் செய்ய வாஞ்சையுள்ள தேவ பிள்ளைகள் இதில் இணைந்து பணியாற்ற நான் அழைப்பு கொடுத்தேன். அநேகர் இணைந்து பணியாற்ற முன் வந்தார்கள். அன்று முதல் இன்று வரை இயக்கம் படிப்படியாக வேகமாக வளர்ந்து பெருகி தேவபிள்ளைகளுடன் தேவ நாமத்தின் மகிமைக்காக ஊழியம் செய்து வருகிறோம். 12.10.2000 அன்று நமது இயக்கத்தை அரசாங்கத்தில் பதிவு செய்து பலவித சுவிசேஷ ஊழியங்களையும் கிராம ஊழியங்களையும் படக்காட்சி ஊழியங்களையும் தெருமுனை பிரசங்கங்களையும் மிஷனெரி பணித் தளங்களையும் ஏற்படுத்துவதற்கு அனுமதி பெற்றுள்ளோம். நற்செய்தி கூட்டங்கள் இலக்கிய ஊழியங்கள் கேசட்டுகள் மற்றும் யாவற்றையும் செய்வதற்கு நாம் வழி வகுத்துள்ளோம். 1999 அக்டோபர் மாதம் தேவ ராஜ்யம் என்னும் கேசட் வெளியிடப்பட்டு பலருக்கும் பயனள்ளதாக அமைந்தது.

நோக்கம்:

சுவிசேஷமும் எழுப்புதலுமே எமது ஊழியங்களாகும். இந்தியா முழுவதும் சுவிசேஷமயமாக்க வேண்டும் என்பதற்காக சபை பாகுபாடற்ற நிலைமையில் தேவனை அறியாத, அறிந்த மக்கள் மத்தியில் ஊழியத்தை செய்து வருகிறோம். சுவிசேஷமே பிரதான நோக்கம்.

* இந்திய தேசத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர்த்தவும்

* தீவிரமான கிறிஸ்தவர்கள் பெயர் கிறிஸ்தவர்களை சபைக்கு அழைத்து வரவும்

* 1000 பேருக்கு ஒரு சபையாவது இருக்க வேண்டும்
* அனைத்து ஊர்களிலும் சபை இல்லாத இடங்களிலும் திருச்சபைகளை உருவாக்க ஊழியத்தில் உதவி செய்தலும் (சபை ஸ்தாபித்தல் இதன் நோக்கம் அல்ல)
* கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பின்வாங்கிப் போனவர்களை உற்சாகப்படுத்தவும்
* கிறிஸ்தவ சபைகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும்
* எல்லா வழிகளிலும் கிறிஸ்துவின் நற்செய்தியை சுமந்து செல்லுதலும்
* இந்தியாவை தேவன் விரும்பும் தேவ ராஜ்யமாக மாற்றவும்
* ஒவ்வொரு கிறிஸ்தவரும் போய் சுவிசேஷத்தை அறிவிக்க தூண்டுவதும்
* இவை எல்லாலவற்றிற்கும் மேலாக இவற்றை நிறைவேற்ற ஒவ்வொருவரும் இயேசுவைப் போல மாறுவதும் எங்களின் சில குறிக்கோள்களாகும்.

இதுவரை நடைபெற்ற ஊழியங்கள்:

எனவே இவற்றை நிறைவேற்ற 20க்கும்அதிகமான பல்வேறு ஊழியங்களை செய்து வருகிறோம். தேவனே அவற்றை வளர்ச்சியடையச் செய்கிறார். இப்புத்தகத்தின் இறுதியில் எல்லா ஊழியத்தையும் குறித்து விளக்கமாக கூறியுள்ளேன். இதுவரை நாங்கள் செய்த ஊழியங்களை தொகுத்துக் கூற விரும்புகிறேன். தென்காசியை மையமாக வைத்து அனைத்து ஊழியங்களும் நடைபெறுகிறது. 1.1.99 அன்று தென்காசியிலுள்ள பழங்குடி சமுதாயத்தினரிடம் சென்று இனிப்பு வழங்கி புத்தாண்டு பரிசாக இயேசுவை அறிவித்தோம். அநேக குடும்பங்கள் தங்களை முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்து ஆர்வமாக இயேசுவை வழிபடதயாராக உள்ளனர். அவர்களுக்கு 28.4.99 அன்று இயேசு திரைப்படம் காண்பிக்கப்பட்டது. எப்படியாவது இவர்களும்

இயேசுவின் பிள்ளைகளாக மாற வேண்டும் என ஜெபிக்கிறோம். மேலும் 25/26.5.99 அன்று மாயமான்குறிச்சியில் நற்செய்திக் கூட்டம் நடத்தினோம். 18.9.99 அன்று செங்கோட்டை வாஞ்சி வித்யாலயா பள்ளியில் உபவாச ஜெபம் நடத்தப் பட்டது. அதன் பின்பு 6.5.2000 அன்று குற்றாலம் கிறிஸ்து குல ஆசிரமத்தில் PGM உபவாச ஜெபம் துவக்கப்பட்டது. அப்போதிருந்த தென்காசி சேகர குரு Rev. சாமுவேல் பால்ராஜ் ஐயா அவர்களின் அறிவுரையின் படியும் அவ்விடத்தின் தேவைக்காகவும் இந்த ஜெபம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது பெத்தேல் உபவாச ஜெபம் என்று பெயர் பெற்று கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த பெத்தேல் உபவாச ஜெபம் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை குற்றாலத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் குற்றாலத்தில் வைத்து 3 நாள் தியான முகாம் நடைபெறுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக வருடாந்திர முகாம் நடைபெற்று வருகிறது. மேலும் இலஞ்சியில் ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டம் 1/2.7.2002 ஆகிய இரண்டு நாட்களாக நடத்தப்பட்டது. 27/28.10.2001 ஆகிய இரண்டு நாட்களும் ஆசீர்வாதபுரத்தில் நடத்தப்பட்டது. 21.8.2000 முதல் ஒரு வாரம் சகோ. யூதா மூலம் இன்னிசையில் இறை செய்தி, சுவிசேஷ கூட்டங்கள் பாவூர்சத்திரம், ஆலங்குளம், ராம்நகர் பகுதிகளில் நடைபெற்றது. வேதாகம அடிப்படையில் திருமணம் என்னும் கருத்தரங்கு தென்காசி சி.எஸ்.ஐ. ஆலயத்தில் 24.11.2001 அன்று நடைபெற்றது. இதே கருத்தரங்கு கல்லூரணி சபையிலும் நடத்தப்பட்டது.

பத்திரிக்கை:

PGM ஊழியம் மூலமாக தேவராஜ்யம் என்னும் பத்திரிக்கை நடத்தப்படுகிறது. 1999 டிசம்பரில் முதல் பத்திரிக்கை வெளியிடப்பட்டது. தொடர்ந்து ஓராண்டு வரை இந்த பத்திரிக்கை ஊழியம் நடைபெற்றது. தற்போது சில காரணங்களால் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் PGM ஊழியத்திற்கென சொந்த Press

மூலமாக பத்திரிக்கை நடத்த பிரயாசப்பட்டு வருகிறோம். இவ்வித ஊழியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். மட்டுமல்லாது பல்வேறு திருச்சபைகளில் நாங்கள் குழுவாகச் சென்று தேவனுடைய ஊழியத்தையும் செய்து வருகிறோம். பல்வேறு இடங்களில் இருந்து அழைப்புகள் வருகின்றன. நாங்களும் ஆண்டவருக்காக தீவிரமாக ஊழியத்தைச் செய்ய காத்திருக்கிறோம். இதுவரை சுமார் 30 முழு இரவு ஜெபங்கள் 40 உபவாச ஜெபங்கள் நடத்தியுள்ளோம். சுமார் 20 இடங்களில் Vedio படக்காட்சிகள் காண்பிக்கப் பட்டுள்ளன. (எண்ணிக்கை தோராயமாக) சுமார் 10 முறை சுவிசேஷ ஊழியம் ஜீப் மூலமாக செய்யப்பட்டுள்ளது. 4 இடங்களில் 'WALK THRU BIBLE' வேதாகமப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளன. 2 இடங்களில் யாபேஸ் ஜெபம் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இத்தனை ஊழியங்களும் நடைபெறுவதற்கு தேவனே காரணம். ஏனெனில் என்னை அழைத்தவர் அவரே. அவரே ஊழியத்தை ஆரம்பித்தார். அவரே நடத்தி வருகிறார். ஏனெனில் உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். (1 தெச. 5:24). இந்த வசனத்தின்படியே தேவன் நடத்தி வருகிறார். ஒருவேளை அவர் நடத்தாவிடில் அவர் அழைத்தார் என்பதை நான் எப்படி புரிந்துகொள்ள முடியும். நான் ஊழியத்திற்குள் வருவதற்கு முன்பதாக நான் இப்புத்தகத்தில் எழுதின பல தொழில்களை செய்து வந்தேன். இதில் எழுதியிராத வேலைகளையும் கூட செய்திருப்பேன். இந்த உலகத்தின் பின்னே மிக வேகமாக ஓடிக் கொண்டு இருந்தேன். ஆனால் தேவனே என்னை பிடித்து கொண்டு வந்தார். தூண்டிலில் அகப்படும் ஒரு மீனைப் போல என்னை அவர் பிடித்துவிட்டார். இந்த உலகத்தில் எவ்வளவு வேகமாக ஓடினேனோ அந்த அளவிற்கு தேவன் என்னை ஊழியத்தில் பயன்படுத்தும்படி அழைத்து வந்தார். என்னுடைய உலகப் பயணம் தோல்வியில் முடிந்தது. ஒரு பைத்தியக்காரனைப் போல பலவீனமானேன். வேதம் எனக்கு இதை விளக்கிக் காட்டியது. I கொரி. 1:27ன் படி ஞானிகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பைத்தியங்களை தெரிந்த கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில்

பலவீனமுள்ளவைகளை தேவன் தெரிந்து கொண்டார். மீண்டும் நான் யோசித்தேன். தேவன் எதற்கு என்னை அழைக்க வேண்டும் என. அப்பொழுது தேவன் சொன்னார்: இந்த உலகில் பலர் நானும் ஊழியம் செய்கிறேன் என்று வருவார்கள். ஆனால் தேவன் எவர்களை அழைக்கிறாரோ அவர்களையே அவர் கனப்படுத்துகிறார். எபி. 5:4ன்படி ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டால் ஒழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்கு தானாய் ஏற்படுவதில்லை. ஆகவே தேவன் என்னை அவருடைய கனமான ஊழியத்திற்கென்று ஏற்படுத்தியிருக்கிறார்.

அழைப்பின் தீர்க்கதரிசனம்:

ஒருமுறை கேரளாவைச் சேர்ந்த 14 வயது ஊழியர் அனிஸ் (தாமஸ்) என்பவர் தேவ ஆவியால் நிரப்பப்பட்டு எனது தலையில் கரங்களை வைத்து அவர் தீர்க்கதரிசனமாகச் சொன்னார். தேவன் என் மூலம் செய்யப் போகும் பயங்கரமான ஊழியத்தைக் குறித்து அவர் எடுத்துரைத்தார். இன்னும் ஒருமுறை செங்கோட்டை அருகிலுள்ள ஒரு சகோதரி அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். மட்டுமல்ல நான் சிறுவனாக இருக்கும்பொழுதே கண்பார்வை தெரியாத ஒரு சகோதரர் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு ஊழியத்திற்காக வருவார். அவருக்கு நானே வழிகாட்டுவேன். அவரும் தீர்க்கத் தரிசனம் சொன்னார். அதாவது பிற்காலத்தில் என்னை ஒரு ஊழியக்காரனாக தேவன் வல்லமையாய் பயன்படுத்துவார் எனக் கூறினார். இப்பொழுது அந்த தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறி வருகிறது.

நான் ஊழியத்திற்கு வந்தபோது பலவித சோதனைகளை சந்திக்க நேர்ந்தது. அப்பொழுதெல்லாம் என் மனதில் ஒரு கேள்வி எழும். என்னை நானே அடிக்கடிக் கேட்டுக் கொள்வேன். தேவனே என்னை அழைத்தாரா அல்லது நான் அவர் அழைக்கிறார் என நினைத்து ஊழியத்திற்கு வந்தேனா? இதற்கும் தேவனே எனக்கு பதில் கொடுத்தார்.

ஒரு முறை நான் ஒருசொப்பனம் ஒன்றைக் கண்டேன். அதில் எனது கிராமத்தில் உள்ள தண்ணீர் பெருகும் குளத்தை பார்த்தேன். அப்பொழுது அதில் தண்ணீர் அதிகம் இல்லை. அதன் கடைசி பாகத்தில் பல சேறு சகதி நிறைந்த குழிகள் காணப்பட்டன. பின்பு அதன் அருகில் நான் நிற்பதாகக் கண்டேன். நான் அந்தக் குழிகளைப் பார்த்தேன். இன்னும் சற்று உற்று நோக்கிப் பார்த்தேன். அப்பொழுதுதான் தெரிந்தது. சேறும் சகதியும் நிறைந்த அந்த படுகுழிக்குள் நூற்றுக்கணக்கான மக்கள் ஆங்காங்கே விழுந்து இறந்து கிடப்பதைப் போல மயங்கிய நிலையில் இருப்பதைப் பார்த்தேன். அதைப் பார்த்த மாத்திரத்தில் நான் ஓடோடிச் சென்று ஒவ்வொருவராக வெளியே எடுத்துக் கொண்டு வந்தேன். அவர்களை தண்ணீரற்ற மேற்பரப்பில் கொண்டுவந்து கிடத்தினேன். எனக்குப் பின்னால் நான் திரும்பிப் பார்தேன். பலர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டார்கள். நான் எழுந்த பின்பு ஆண்டவரே இதன் பொருள் என்ன? தேவன் எனக்குச் சொன்னது இதுதான்: "என் மகனே! நீ அடிக்கடி என்னைப் பார்த்து கேள்வி கேட்கிறாய். தேவனே! என்னை அழைத்தது நீர்தானா என்று. நான் உன்னைக் கொண்டு பல ஆத்துமாக்களை அழிவின் பாதையில் இருந்து உன் மூலமாக நான் மீட்டும்படியாக உன்னை அழைத்தேன். இதுவே அச்சொப்பனத்தின் அர்த்தம் ஆகும்". அன்றிலிருந்து இன்று வரை தேவன் என்னை அழைத்தாரா என நான் ஒருபோதும் வினா எழுப்பியதில்லை.

இப்போது நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் எனக்காக மன்றாடி ஜெபியுங்கள். தேவனால் அழைக்கப்பட்ட நான் தேவனை ஆரம்பத்தில் சென்னை HBI (Hindustan Bible College) சென்று பலமுறை ஒவ்வொரு வாரம் தங்கியிருந்து வேதாகமத்தைக் குறித்து சரித்திரங்களைக் குறித்து வேத வரலாற்றைக் குறித்து கற்று வந்துள்ளேன். தவிரவும் அவர்களுடைய பல்வேறு புத்தகங்கள் வாயிலாகப் பயின்றுள்ளேன். "WORLD

TEACH' ஸ்தாபனம் மூலமாக பல வேதாகமப் பயிற்சிகளை ஊழியப் பயிற்சிகளை பெற்றுள்ளேன். அவற்றை மக்களுக்குப் பிரயோஜனமாக நடத்தியும் வருகிறேன். எனது வாழ்க்கையிலும் அந்தப் பயிற்சிகளை நான் அனுபவித்து வருகிறேன். நான் தற்போது வேதாகமத்தைக் குறித்த பயிற்சியைக் கொடுக்கும் வேத ஆசிரியராக ஊழியத்தைச் செய்து வருகிறேன். வசனங்களை அப்படியே அனுபவிப்பதுதான் மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை என்பதை தேவன் ஒரு முறை எனக்கு விளக்கிச் சொன்னார். 'Haggai Institute' மூலமாக தற்போது சிறந்த தலைமைத்துவ பயிற்சியையும் பெற்று வருகிறேன். அப்பயிற்சிகள் ஒரு சிறந்த தலைவராக இருந்து ஊழியத்தைச் செய்ய எனக்கு உதவி செய்கிறது.

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலமாக நடந்த வல்லமை ஊழியப் பயிற்சியின் 28வது அணியில் பயிற்சிபெற தேவன்எனக்குஉதவி செய்தார். 2002ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4 முதல் 10 வரை Bangalore-ல் நடந்த அந்த பயிற்சி பரிசுத்த ஆவியின் 9 வரங்களைக் குறித்து தெளிவாகக் கற்றுக் கொண்டு அந்த வரங்களைப் பெற்றுக் கொண்டு ஊழியம் செய்வதற்கு ஆண்டவர் அருள் புரிந்தார். தற்போது நமது ஊழியங்கள் இவற்றின் மூலம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. என்னோடு கூட பரிசுத்த ஆவியானவர் தீவிரமாக ஈடுபடுகிறார். ஆவியில் நிறைந்து செய்யும் ஜெபம் பிரசங்கம் யாவும் மிகவும் வல்லமையுடையதாய் இருக்கிறது.

ஊழியத்தின் பாதையில் பல்வேறு குடும்பங்களை தனி நபர்களை நான் சந்திக்க நேர்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினையில் சிக்கி செய்வதறியாது தவிக்கின்றனர். அப்போதெல்லாம் நான் அவர்களுக்கு வேத அடிப்படையில் எனது அனுபவங்களை விளக்கிக் கூறுவேன். அதோடு அதிலிருந்து அவர்கள் எவ்வாறு விடுபட முடியும் என்பதையும் எடுத்துக் கூறுவேன். கடைசியில் அவர்களுக்காக பாரத்தோடு மனதுருகி ஜெபிப்பேன். அப்போது தேவன் அற்புதம் செய்வார். மக்களின் பிரச்சனைகளை கவனமாக கேட்டறிந்து அவர்கள் பிரச்சினைகளை எனது

பிரச்சனையாகவே கருதி அதற்காக ஜெபிக்கும் பயிற்சியை தேவனே கொடுத்தர். இதை நான் எழுதிக்கொண்டு இருக்கும் போதே 'Person to Person' என்னும் கிறிஸ்தவ நல் ஆலோசனை மையம் மூலமாக நான் கவுன்சிலங் பயிற்சியில் இருப்பேன். மக்களின் துன்பத்தை உணருவதற்காக அவர்களின் தோலுக்குள் புகுந்து சென்று அவர்களாகவே நானும் மாறிவிடுவேன். எனவேதான் மன உருக்கத்தோடு அவர்களுக்காக ஜெபிக்க முடிகிறது.

---

9. ஊழியப் பாதையில் அற்புதங்கள்

ஊழியத்தின் பாதையில் நான் சந்தித்து வருகின்ற ஒவ்வொரு நாட்களும் மிகவும் அற்புதமானவை. ஒவ்வொரு நாளிலும் தேவையான அற்புதத்தை தேவனே செய்கிறார். நான் பெற்றுக் கொண்ட அற்புதங்கள் பல உண்டு. அவை எல்லாவற்றையும் எழுதுவதென்பது இயலாத காரியம். ஆனாலும் நான் சிலவற்றை எழுதுவதற்கு விரும்புகிறேன். நீங்கள் ஒரு நல்ல விசுவாசியாக இருக்கலாம். அல்லது ஊழியத்தை செய்து கொண்டு இருக்கலாம். அல்லது ஊழிய அழைப்பைப் பெற்றுக்கொண்டு நான் எப்படி ஊழியம் செய்வது என்று தயங்கி நிற்கலாம். இந்த அற்புதங்களை நீங்கள் வாசிக்கும் பொழுது உங்கள் வாழ்க்கையிலேயும் தேவன் பல அற்புதங்களைச் செய்ய முடியும். எனது வாழ்க்கையில் தேவனே ஒவ்வொரு நாளும் அற்புதம் செய்கிறார்.

நண்பர்கள் அறிமுகம்:

PGM ஊழியத்தை நாங்கள் துவக்கின பொழுது எனக்கு ஊழியத்தைக் குறித்து A, B, C கூட தெரியாது. தேவன் ஒரு ஏற்ற பக்தி நிறைந்த சகோதரனை என்னோடு பழகும்படி செய்தார். நாங்கள் இணைந்து காடுகளில் சென்று ஜெபித்தோம். அதன் பின்பு இசை மீட்டும் பல நண்பர்களைக் கொடுத்தார். பாடல் எழுதும்

நண்பர்களைக் கொடுத்தார். இணைந்து ஜெபித்தோம். தேவராஜ்யம் என்னும் ஒலி நாடா ஒன்றை முதல் முதலில் வெளியிட்டோம். அதன் மூலம் வேண்டிய பொருளாதாரத்தை தேவன் கொடுத்தார். அதை வெளியிடுவதற்கு ஏற்ற செலவீனங்களை தேவனே சந்தித்தார். எதிர்பாராத விதமாக வேண்டிய பண உதவிகளை தேவன் எனக்கு கொடுத்தார். நான் ஆரம்பத்தில் வேலை செய்யாத மனைவியையே எதிர்பார்த்தேன். ஆனால் வேலை செய்யும் மனைவியைக் கொடுத்தார். சகோதரியினுடைய வருமானம் தேவ ஊழியத்திற்கென்று வெகுவாக பயன்பட தேவன் அருள்புரிந்தார். ஊழியத்திற்கு தேவையான வாகனங்களை வாங்குவதற்கும் பள்ளியின் காரியங்களை கவனிப்பதற்கும் அது மிகவும் உதவியாய் இருக்கிறது. மேலும் பலருடைய உள்ளத்தில் கர்த்தர் பேசி இந்த ஊழியத்தை நடத்தி வருகிறார். எனது பள்ளியின் மூலமாக வருகின்ற பொருளாதார உதவி தேவ ஊழியத்திற்கு மிகவும் பயனுள்ளது.

பொருளாதாரத்தில் அற்புதம்

ஊழியத்திற்கென்று நான் செல்லுகின்ற வேளையில் எல்லாம் பலவித நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. அப்பொழுதெல்லாம் நான் தேவனையே நோக்கிப் பார்ப்பேன். அவர் ஒருவரே எனக்கு அற்புதம் செய்ய முடியும் என்று முற்றிலும் நான் விசுவாசிக்கிறேன். ஆகையால் அவரே எனது அற்புத நாயகர் என்பதை நான் மறப்பதில்லை. ஒரு சமயம் எனக்குப் பொருளாதாரத் தேவை ஒன்று இருந்தது. அப்போது என்னிடத்தில் இருந்த அளவுக்கு மேல் தேவையான பணத்தை நான் தேவனிடத்தில் இருந்து எதிர் பார்த்தேன். நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். தேவன் அற்புதம் செய்யும் நேரத்திற்காக காத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தேன். ஒரு நபர் உள்ளே வந்தார். அவர் தனது மகனை பள்ளியில் சேர்க்கும்படியாய் வந்தார். நான் வெளியில் எல்லாவற்றையும் பேசிவிட்டு அவர் சொன்னார். நான் வெளியில்

இருக்கிறேன். ஆகவே ஓராண்டு பணத்தை நான் இப்பொழுது செலுத்துகிறேன் என்று கூறினார். அதில் எனக்கு அன்றைய தேவைக்கு போதுமானதாக அமைந்தது. இவ்வாறாக தேவன் எனக்கு பலமுறை உதவி செய்துள்ளார். இந்த ஆண்டு (2002) காலாண்டர் வெளியிட வேண்டுமென்று நான் ஜெபித்த போது தேவன் ஒரு நபர் மூலமாக சிறிது தொகையை கொடுத்தார். அதை வைத்து ஒரு கம்பெனியில் நான் Order கொடுத்தேன். அந்த கம்பெனி உரிமையாளர் எனக்கு அறிமுகமான ஒரு பாஸ்டருடைய சபை அங்கத்தினராக இருந்தார். தேவனே அந்த Pastor மூலமாக பெரிய உதவியைச் செய்தார். எனக்கு தேவையான எல்லா உதவிகளையும் அந்த கம்பெனி முதலாளி செய்து கொடுத்தார்.

ஜெபத்திற்கு அற்புதமே பதில்:

ஊழியத்தில் தேவன் செய்த அற்புதங்களை நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். ஒருமுறை நான் அடைக்கலப்பட்டணம் அருகிலுள்ளள ஆலயத்தில் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தேன். ஆலய ஆராதனை முடிந்ததும் அந்த சபை ஊழியர் என்னை அழைத்துக் கொண்டு சில வீடுகளில் ஜெபிப்பதற்காக அழைத்துச் சென்றார். ஒரு வீட்டில் நாங்கள் சென்றபோது அங்கிருந்த சகோதரி என்னிடம் ஒரு ஜெப விண்ணப்பத்தைச் சொன்னார்கள். கடந்த 8 ஆண்டுகளாக எங்களுக்கு குழந்தை இல்லை. ஆகவே எங்களுக்காய் ஜெபியுங்கள் என்றார்கள். அப்பொழுது நான் மிகுந்த பாரத்தோடு 8 ஆண்டுகளாக அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை நினைத்து கண்ணீரோடு ஜெபித்தேன். அவர்களுடைய பெயரை ஒரு தாளில் எழுதி எனது வேதாகமத்தில் வைத்து தொடர்ந்து ஜெபித்தேன். சில மாதங்களுக்குப் பின் ஒரு நாள் அந்த திருச்சபை ஊழியர் தொலைபேசியில் என்னை ஊழியத்திற்காக அழைத்தார். அப்பொழுது அவர் ஒரு காரியத்தைச் சொன்னார். 8 மாதங்களுக்கு முன் எங்கள் சபையைச் சார்ந்த ஒரு குடும்பத்தின் குழந்தைக்காய் ஜெபித்தீர்கள். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு ஒரு குழந்தையை கொடுத்திருக்கிறார். இப்பொழுது அவர்களை தங்கள் வீட்டிற்கு

அழைத்துச் செல்வதற்கு நிகழ்ச்சி ஒழுங்கு செய்திருக்கிறார்கள் என்று கூறினார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக!

பாவூர்சத்திரம் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு சகோதரியினுடைய திருமணத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ஜெபித்து விட்டு அந்த சகோதரிக்கு சில வரன்களைக் கூட அவருடைய பெற்றோரிடத்தில் அறிமுகம் செய்தோம். ஆனால் சில காரணங்களால் திருமணம் நடைபெறாமல் இருந்தது. ஓராண்டுக்கு மேல் கடந்து விட்டது. அந்த சகோதரியின் தாயார் நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து ஜெபிக்க வேண்டுமென்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது நானும் எனது மனைவியும் அவர்களுடைய வீட்டிற்கு கடந்து சென்று ஜெபித்தோம். ஒரு வாரத்திற்குள்ளாக தேவனே அற்புதம் செய்தார். அந்த மகளுக்கு ஏற்ற மணமகனை தேவனே கொடுத்தார் என்று மணமகனின் உறவினர் ஒருவர் என்னிடம் கூறினார். இவ்வாறாக தேவன் ஊழியத்தில் பலவித அற்புதங்களை செய்து வந்தார். பல வேளைகளில் ஆண்டவரே! நீரே என்னை அழைத்தீர். நான் உமது ஊழியத்தை பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு பயனுடையதாயிருக்கும்படி செய்ய வேண்டும். அப்படியானால் உம்முடைய குணமாக்கும் வல்லமை அற்புதம் செய்யும் வல்லமை தீர்க்கதரிசன வரம் எல்லாவற்றையும் தாரும் என்று ஜெபித்தேன். இப்போது ஊழியத்தை செய்வதற்கும் தேவனே அப்படிப்பட்ட வரங்களைக் கொடுத்து நடத்தி வருகிறார். பல மக்களுக்கு பிரச்சனைகள் நீங்கும்படி ஜெபிக்கும் போது தேவனே அதை நீங்கச் செய்கிறார். அநேக மக்களுக்கு முன்பாக நின்று ஊழியத்தை செய்யும்போது தேவன் என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையும் தைரியமுமே என்னை அவருடைய ஊழியத்தை வல்லமையாய் செய்ய உற்சாகப்படுத்தி வருகிறது. பலமுறை ஊழியத்தின் தேவைக்காக ஜெபிக்கும்போது தேவனே அவற்றை அப்படியே நிறைவேற்றித் தருகிறார். எங்கள் பங்கு மிகவும் குறைவானதாக இருந்தாலும் தேவன் செயல்படும் பங்கு எங்களுக்கு மிக அதிகமாக உள்ளது.

மற்றவர்களுக்காக ஜெபிக்கும் பொழுதும் சரி எங்களுக்காகவும் ஊழியத்தின் தேவைகளுக்காகவும் ஜெபிக்கும் போதும் தேவனுடைய வல்லமையைப் பெற்று அனுபவித்து வருகிறோம். தேவ பெலனே எங்கள் பெலனாய் இருக்கிறது.

நாங்கள் ஊழியங்களுக்காக வெளியில் கடந்து போகும் பொழுது தேவனே எங்களோடு வந்து ஆங்காங்கே அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார். எங்களின் போக்குவரத்துக்காக நாங்கள் நடத்தி வருகிற Milton Matriculation பள்ளியின் மூலமாக நல்ல வாகன வசதிகளை தந்திருக்கிறார். ஊழியத்திற்காக இந்த வாகனங்கள் மிக மிக உதவியாய் இருக்கின்றன. முதலாவது எங்களுக்கு ஒரு இரண்டு சக்கர வாகனத்தை தந்தர். பின்பு மற்றவர்களோடு சேர்ந்து செல்ல உதவியாக Autoஒன்றை கொடுத்தார். பின்பு குழுவாக சென்று சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக Trecker ஒன்றைத் தந்தார். ஆரம்பத்தில் ஒரு ஊழியர் கூட்டத்தில் Jesus என்ற ஒரு வீடியோ கேசட்டை வாங்க உதவி செய்தார். அதன் மூலம் சில இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்ய தேவனே வழி நடத்தினார். அப்பொழுது என் மனதில் படக் காட்சி ஊழியத்தைக் குறித்த திட்டம் உருவானது. ஆகவே அதற்கென்று ஜெபித்து முயற்சி செய்தோம். சில நாட்கள் கழித்து ஒரு கலர் T.V. வாங்க உதவிசெய்தார். இப்போது எங்களிடத்தில் கேசட் TV, Auto இருக்கிறது. ஆனால் வீடியோடெக் இல்லை. நாங்கள் ஊழியத்திற்கு செல்லும்போது டெக் வாடகைக்கு எடுப்பது வழக்கம். அப்பொழுது நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவரே! எங்களிடத்தில் டெக் மாத்திரமில்லை. அதையும் நீர் கொடுத்து விட்டால் உம்முடைய ஊழியத்தை விரைவாக சென்று செய்ய முடியுமே என்று ஜெபிக்க ஆரம்பித்தேன். சில நாட்கள் கிழத்து அதற்கான பதிலை கொடுத்தார். மேலகரத்தை சேர்ந்த Pastor ஒருவர் மூலமாக இலகுவாக கிரயத்திற்கு வாங்க தேவனே உதவி செய்தார். மேலும் படக் காட்சி ஊழியத்திற்கு தேவையான வீடியோ கேசட்டுகளை அவ்வப்போது வாங்க தேவனே உதவி செய்கிறார். இப்போது

எங்களிடத்தில் படக் காட்சி ஊழியத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் சொந்தமாக இருக்கின்றன. அவை தேவனுக்காகவே பயன்படுகின்றன.

நான் ஏன் இதை சொல்கிறேன் என்றால் அநேகரிடத்தில் இப்படிப்பட்ட உபகரணங்கள் இருக்கலாம். ஆனால் அவை தேவனுக்கென்று பயன்படாது. சிலர் தங்கள் வீடுகளில் உள்ள தொலைக்காட்சி பெட்டியை ஊழியத்திற்கு கொடுப்பது என்றால் மிகவும் யோசிப்பார்கள். நாங்களோ எங்களையும் எங்கள் உடைமைகளையும் நேரத்தையும் எப்போதும் தேவனுக் காகவே செலவிட ஆயத்தமாயிருக்கிறோம். மற்றவர்களும் அப்படியே செய்ய வேண்டுமென்று அன்போடு சொல்ல விரும்புகிறேன்.

பிரச்சனைகளில் அற்புதம்:

ஊழியத்தின் பாதையில் கடந்து வரும்போது சாத்தானுடைய பல உபாய தந்திரங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. எனக்கெதிராக சத்துருவானவன் செயல்படும் போதெல்லாம் நான் தேவனையே நோக்கிப் பார்ப்பேன். அவரே எனக்கெதிராய் வரும் சத்துருவை மேற்கொள்ளுவார். சில வேளைகளில் சத்துருவானவன் ஊழியத்தை அப்படியே நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் வருமளவிற்கு நெருக்கடிகளை கொண்டு வருவான். என்னோடு கூட நெருங்கி ஐக்கியமாய் இருப்பவர்களை பிரித்து விடுவான். சில வேளைகளில் சொந்த குடும்பத்திற்குள்ளாக பிரச்சனைகளை கொண்டு வருவான். ஊழியத்தில் என்னோடு கூட இணைந்து செயல்படுவோரின் மனதைக் குழப்புவான். மிக முக்கியமான வேலை செய்யும் நபர்களை வேலையினின்று விலகி ஓடச் செய்வான். அப்போதெல்லாம் தேவனே எனக்கு அதை எதிர் கொள்ளும் மன திடனை கொடுப்பார். காரியங்கள் நேர்த்தியாய் நடப்பதற்கு அவரே முன்நின்று உதவி செய்வார். எனக்கு வேண்டிய புதிய நபர்களை தேவனே கொண்டு வருவார். அப்போதெல்லாம் அவருடைய, அன்பை, நடத்துதலை, எண்ணி வியப்படைவேன்.

எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் பள்ளியிலும் தேவனே அற்புதங்களை செய்து வருகிறார். கடந்த ஆண்டில் நான் பள்ளியின் வளர்ச்சிக்காய் 3 நாட்கள் உபவாசித்து ஜெபித்தேன். எல்லா வருடங்களிலும் சேர்க்கைக்காக நாங்கள் கடினமாக முயற்சி செய்தோம். ஆனால் இந்த முறை நாங்கள் ஜெபித்தபோது தேவனே எங்களுக்கேற்ற சிறப்பான வளர்ச்சியைக் கொடுத்தார். மற்றவர்கள் வியக்கும் வண்ணம் அவரே நடத்தி வருகிறார். பல்வேறு பள்ளிகள் இருக்கின்ற போதிலும் எங்களுக்கு தேவன் விசேஷமான ஆசீர்வாதத்தை கட்டளையிடுகிறார்.

சில வேளைகளில் டிரைவர்கள் இல்லாமல் நாங்கள் மிகவும் சிரமப் படுவது உண்டு. நல்ல சம்பளம் மற்றும் வசதிகள் செய்தாலும் டிரைவர்கள் ஒழுங்காக இருந்து வேலை செய்வதில்லை. ஏனெனில் நான் ஒரு தீவிரமான ஊழியக்காரனாக இருப்பதில் மற்றவர்களைப்போல நான் ஐஸ் வைத்துப் பேசுவதோ அல்லது முகஸ்துதி செய்வதோ கிடையாது. வீணான வேண்டாத காரியத்தை பேசுவது இல்லை. மேலும் அத்தொழிலில் இருப்பவர்கள் எல்லா குண நலன்களுக்கும் ஏற்றவாறு நான் மாறுவது கிடையாது. தேவன் விரும்பும் ஒரு மனிதனாகவே வாழ விரும்புகிறேன். எல்லோரோடும் இணக்கமாக இருந்தும் கர்த்தருக்குப் பிடிக்காத காரியத்தில் நான் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வது வழக்கம். எனவே நான் நினைக்கிறேன், இந்த காரியங்களை சாத்தானே செய்கிறான் என்று. எங்களை எந்த விதத்தில் எல்லாம் துன்புறுத்த முடியுமோ அப்படியெல்லாம் அவன் செய்கிறான். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தேவன் எங்களது கண்ணீரை அறிந்திருக்கிறார். ஒரு நாள் எல்லாவற்றுக்கும் சேர்த்து எங்கள் துக்கத்தை களிப்பாக மாறப் பண்ணுவார். எனவே சாத்தான் ஒரு போதும் ஜெயம் பெற முடியாது.

ஒரு நாள் நான் ஆட்டோவை School Trip–க்காக ஓட்டிக் கொண்டிருக்கும்போது நடந்த சம்பவத்தை விளக்கிக் கூற விரும்புகிறேன். டிரைவர் இல்லாமல் நாங்கள் மிகவும் சோர்வுற்றிருந்தோம். பல நாட்கள் இப்படி நடந்தது உண்டு. நான் சில வேளைகளில் இப்படி நினைப்பது உண்டு. நான் ஏன் இவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்க வேண்டும் என்று. இவ்வளவு பிரயாசப்பட்டு பலன் என்ன? நமக்கு என்ன லாபம்? இதைச் செய்யாமல் இருந்தாலே

மிகவும் நன்றாக இருக்குமே என நினைப்பேன். ஆனால் ஊழியத்தைச் செய்ய முடியாது. வாகனங்கள் ஊழியத்திற்காக மிக அதிகமாக பயன்படுத்தப் படுகிறது. அது தேவை. அப்படியானால் அதற்காக கஷ்டப் பட்டுதானே ஆக வேண்டும்.

நாங்கள் வசிக்கும் வீடும் பள்ளியும் ஒரே கட்டடத்தில் உள்ளது. எனது மகள் 1 வயது குழந்தை. அவளை கவனித்துக் கொள்ள ஆயா ஒருவர் உண்டு. அவர்கள் ஆட்டோவில் வீடு திரும்புவார்கள். நான் ஆட்டோவை ஓட்டினால் ஆயா வீட்டில் இருந்து குழந்தையை பார்க்கும். நான் வண்டியை எடுத்து School Trip முடித்து ஆட்டோவை மத்தளம் பாறையில் நிறுத்திவிட்டு பேருந்தில் அவர்கள் வீடு செல்ல வேண்டும். எனவே அன்று நான் ஆயாவையும் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வீட்டை பள்ளியை பூட்டிவிட்டு ஆட்டோவில் சென்று விட்டேன். எனது மனைவியோ பள்ளி சென்று வீடு திரும்ப மிகவும் நேரமாகிவிடும். எனவே நாங்கள் அனைவரும் ஆட்டோவில் சென்று விட்டோம். இல்லையென்றால் பேருந்தில் பயணம் அதிகம் செலவாகும். திரும்பும்போது எனது பைக் அங்கே இருந்தது. அதை எடுத்துக்கொண்டு எனது மகன் முதலில் , மத்தியில 1 வயது மகள், பின்பு நான் உட்கார்ந்து ஓட்டினேன். கிக் ஸ்டார்ட்டரை உதைக்கும்போது மகன் டால்பட் காலில் எனது ஷூ உதைத்து விட்டது. நான் உள்ளத்தில் மிகவும் வேதனையோடு அழுதேன். நாங்கள் வரும்போது மழைத் தூறலில் நனைந்தோம். எனது 1 வயது மகளும் நனைந்து கொண்டே வந்தாள். ஏன் எனக்கு இந்த சோதனை ஆண்டவரே என்று கேட்டேன். நான் இதைச் செய்யாமல் இருக்கலாமே என்று கேட்டேன். அப்போது தேவராஜ்யம் கட்டிஎழுப்ப வேண்டுமானால் இத்தனை பாடுகளையும் சகித்துத்தான் ஆக வேண்டும் என்ற பதிலே எனக்குக் கிடைத்தது. ஆண்டவர் என்னோடு பேசினார். உன்னை செழிப்பிலும் நடத்துவேன் கஷ்டத்திலும் நடத்துவேன் என்றார். இதையெல்லாம் தாண்டிச் செல்லும்போதுதான் நான் உனக்குக் கொடுக்கப் போகும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள உன்னை தயார்படுத்த முடியும் என்று பேசினார். பாடுகள் வந்தாலும் கஷ்டங்கள் வந்தாலும் என் தேவன் என்னோடு இருக்கிறார் என்பதை எண்ணும் போது என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. பாடுகள் கஷ்டங்கள் பறந்து போகிறது.

10. தற்போதைய ஊழியம் மற்றும் எதிர்கால திட்டங்கள்

தற்போது PGM மூலமாக கீழ்க்கண்ட பலவிதமான ஊழியங்கள் நடைபெற்று வருகிறது. இவை யாவற்றையும் நடத்துவதற்கு தேவனே உதவி செய்தார். அநேக தேவ பிள்ளைகள் மூலமாக இதன் தேவைகளை சந்தித்து வருகிறார். கீழ்க்கண்ட எல்லா ஊழியங்களுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள். இவை யாவும் தேவராஜ்ய கட்டுமான பணிக்கு அஸ்திபாரமாய் விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. உங்களுடைய ஊக்கமான ஜெபமும் தியாகமான உதவிகளும் எங்களுக்கு தேவை. ஜெபமே ஜெயம்! ஜெபம் இல்லையேல் ஜெயம் இல்லை. ஜெபிப்போம்! ஜெயம் பெறுவோம்!

I.பெத்தேல் உபவாச ஜெபம்:

இந்த பெத்தேல் உபவாச ஜெபம் தேவனால் ஏவப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் உள்ள கிறிஸ்து குல ஆசிரமத்தில் பெத்தேல் உபவாச ஜெபம் நடைபெறுகிறது. அநேக தேவ பிள்ளைகள் கலந்து கொள்கிறார்கள். தேசத்திற்காகவும் திருச்சபை களுக்காகவும் கலந்து கொள்ளுகிறவர்களுக்கு விசேஷித்த விடுதலையின் ஜெபமும் ஏறெடுக்கப்படுகிறது. PGM இன்னிசைக் குழுவின் மூலம் பாடல்கள் பாடப்படும். பல இடங்களிலிருந்தும் மக்கள் இந்த ஜெபத்தில் கலந்து கொள்கிறார்கள். பலருக்கு தேவன் விடுதலையையும் சுகத்தையும் கட்டளையிடுகிறார். இதே பெத்தேல் உபவாச ஜெபம் மற்ற தினங்களில் (முதல் சனிக்கிழமை தவிர) நீங்கள் விரும்பினால் உங்கள் பகுதிகளில் நடத்தலாம்.

II. நற்செய்திக் கூட்டங்கள்

நற்செய்திக் கூட்டங்கள் மாலை வேளைகளில் அநேகமாக வெள்ளி சனி ஞாயிறு தினங்களில் பொது இடங்களில் அல்லது மைதானங்களில் நடைபெறும். நற்செய்தி அறிவிப்பதே PGM ஊழியத்தின் பிரதான நோக்கம். சுவிசேஷம் வெடித்துப் பரவ இக்கூட்டங்களில் வல்லமையான தேவசெய்தி கொடுத்து வருகிறேன். கூட்ட இறுதியில் விசேஷித்த ஜெபம் வியாதியஸ்தர்களுக்காகவும் தேவையுள்ளவர்களுக்காகவும் ஏறெடுக்கப்படும். இக்கூட்டங்கள் மூலம் அநேகர் இரட்சிக்கப்படுவது உறுதி. பெரும் திரள் மக்களை சந்திக்க நற்செய்தி கூட்டங்கள் ஒன்றே வழி. அதை PGM மூலம் செய்வது மிகச் சிறப்பாகும்.

III. கன்வென்ஷன் கூட்டங்கள்:

திருச்சபையின் கீழ் ஒழுங்கு செய்யப்படும் கன்வென்ஷன் கூட்டங்களில் வல்லமையான தேவசெய்தி கொடுத்து சபை மக்களை ஆவியில் வளரவும் அபிஷேகத்தில் நிறையவும் இக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. இழந்து போன இரட்சிப்பின் அனுபவத்தை புதுப்பித்துக் கொள்ளவும் ஆவிக்குரிய உயிர் மீட்சி ஏற்படவும் அநேகருடைய வாழ்க்கை மாற்றம் அடையவும் கன்வென்ஷன் கூட்டங்களில் தொடர்ச்சியான செய்தி கொடுக்கப்படுகிறது. திருச்சபை மக்களை தேவனுக்கு நேராக நடத்துவதில் PGM பெரிய ஊழியத்தை செய்து வருகிறது.

IV. முழு இரவு ஜெபம்:

திருச்சபைகளில் நடத்தப்படும் முழு இரவு ஜெபங்களை பொறுப்பெடுத்து நடத்தி மக்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் புதுப்பிக்க முழு இரவு ஜெபங்களை நடத்தி வருகிறோம். சபை மக்கள் எழுச்சி அடையவும் வாழ்க்கையில் மாற்றம் பெறவும் முழு இரவு ஜெபங்களில் ஏற்ற செய்திகள் கொடுக்கப்படுகிறது.

V. இன்னிசை இரவு நிகழ்ச்சிகள்:

இசையுடன் கூடிய இன்னிசை பாடல்கள் மூலமாக நற்செய்தி பரப்பும் நோக்கத்துடன் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் திருச்சபைகளிலும் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அநேகமாக பாடல்களும் சிறிது நேரம் நற்செய்தியும் இருக்கும். இந்நிகழ்ச்சிகள் வெகு சிறப்போடு அமைவது மட்டுமின்றி அநேகரை கவர்ந்திழுக்கிறது. நற்செய்தி அறிவிப்புப் பணியில் இன்னிசை இரவு நிகழ்ச்சிகள் சிறப்பான பங்காற்றி வருகின்றன. இதுவரையில் பல இடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சிறந்த இசைக் கருவிகளோடு இனிய குரலில் பாடும் தேவபிள்ளைகள் மூலமாக இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது.

VI. வீடியோ படக்காட்சி ஊழியம்:

நற்செய்தி அறிவிக்ககப்படாத இடங்களில் ஆட்டோவில் சென்று TVடெக் மூலமாக கிராமங்களில் உள்ள தெருக்களில் வீடியோ படக்காட்சி காண்பிக்கப் படுகிறது. இதன் மூலம் எல்லா வகை மக்களையும் சுவிசேஷம் சென்றடைகிறது. அதாவது கல்வி அறிவில்லாத மக்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. கிராமங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கண்டுகளிக் கின்றனர். ஜீஸஸ், அன்புள்ள அனிதா, புதிய பார்வை போன்ற நற்செய்தி கேசட்டுகள் மூலமாகவும் சிறந்த ஊழியர்களின் செய்திகள் மூலமாகவும் மக்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துகிறோம். இதுவரை அநேக கிராமங்களில் இவ்வூழியம் நடைபெற்றுள்ளது.

VII. வேதாகமத்தின் ஊடே நடத்தல்:

a) <u>பழைய ஏற்பாடு:</u>

இது ஒருநாள் வேதாகம பயிற்சி. காலை முதல் மாலை வரையில் 6 மணி நேரத்தில் முழு பழைய ஏற்பாட்டையும் ஆதியாகமம் முதல் மல்கியா வரை கற்றுக் கொள்ளும் ஒரு உன்னதப் பயிற்சி. இப் பயிற்சி கற்பவரை நடமாடும் வேதபுத்தகமாக மாற்றும். முழு பழைய ஏற்பாட்டையும் 3 நிமிடத்தில் உங்களால் சொல்ல முடியும். வேத சரித்திர இடத்தை இன்றைய உலக வரைபடத்துடன் ஒப்பிட்டு கற்றுத்தரப்படுகிறது. ஆதியாகமம் முதல் மல்கியா வரையுள்ள சம்பவங்களை கை அசைவு பயிற்சி மூலமாக 77 படிகளில் கற்றுக் கொள்ளலாம்.

b) <u>புதிய ஏற்பாடு</u>

பழைய ஏற்பாடு கற்றுக் கொள்ளும் முறையிலேயே புதிய ஏற்பாடும் கற்றுத் தரப்படும்.

VIII. யாபேஸ் ஜெபம்:

இதுவும் ஒரு நான்கு மணி நேர கருத்தரங்கு. பழையஏற்பாட்டில் யாபேஸ் செய்த ஒருவரி ஜெபத்தைக் குறித்து 4 பகுதிகளாக விரிவாக கற்றுத் தரப்படும். தற்போது யாபேஸ் ஜெபம் உலகளவில் பெரியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதைக் குறித்து ஒரு ஆழ்ந்த பாடமாக நான்கு மணி நேரத்தில் கற்றுத் தரப்படும்.

IX. வேதாகம அடிப்படையில் திருமணம்:

இதுவும் ஒரு நான்கு மணி நேர கருத்தரங்கு. குடும்ப வாழ்க்கையில் தேவ நாமத்தை மகிமைப் படுத்துவது எப்படி? அல்லது தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வது எப்படி என்ற அடிப்படையில் தெளிவான அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளை இந்த கருத்தரங்கு வழங்குகிறது. இந்த கருத்தரங்கின் மூலம் எண்ணற்ற குடும்பங்கள் செழிப்பான வாழ்க்கையை பெற்றுக் கொள்வது உறுதி. இதில் தம்பதியாக கலந்து கொள்ள வேண்டும். திருமணத்திற்காக காத்திருப்பவர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம். இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட பலர் வாழ்க்கை மகிழ்ச்சியும் சந்தோசமும் பெருகி உள்ளது. பிரிந்த தம்பதியர் கூட இணைந்துள்ளனர்.

X. கைப்பிரதி ஊழியம்:

PGM ஊழியங்கள் மூலம் மாதத்தில் ஒரு நாள் கடைசி சனிக்கிழமை சுவிசேஷ ஊழியம் ஜீப் மூலம் செய்யப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட 10 சகோதரர்கள் கிராமங்களுக்கு கடந்து சென்று தெருமுனை பிரசங்கம் மற்றும் கைப்பிரதி கொடுத்து சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றுகின்றனர். ஒரு நாளைக்கு சுமார் 10 கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் நடத்தப்படுகிறது. குறைந்தபட்சம் 1000 குடும்பங்கள் சந்திக்கப்படும். சுவிசேஷத்தில் இரட்சிக்கப்படுகிறவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள சபைகளில் ஞானஸ்நானம் மூலம் இணைக்கப் படுகிறார்கள். இவ்வூழியத்தின் மூலம் திரள் கூட்ட மக்களுக்கு அவர்கள் இடங்களில் சென்று தனி நபர்களோடு பேசி சுவிசேஷத்தை அறிவிக்கிறோம். இதுவே PGM ஊழியத்தின் பிரதான நோக்கமாகும்.

XI. கேசட்டுகள் ஊழியம்:

தேவ அழைப்பிற்கிணங்கி அவருடைய ஊழியத்தை செய்யும்போது மக்கள் தொடர்பு என்பது மிகவும் அவசியமானது. ஆகவே தேவ வார்த்தையை ஒலி நாடாக்கள் மூலம் செய்தி கேசட்டுகளாகவும் பாடல் கேசட்டுகளாக்வும் வழங்குகிறோம். PGM மூலம் தயாரித்து வெளியிடப்பட்ட முதல் படைப்பு தேவ ராஜ்யம் ஆகும். தேவன் வெளிப்படுத்தின அவருடைய ராஜஜியத்திற்கடுத்த காரியங்களை தெளிவாக விளக்குவது இக்கேசட்டின் சிறப்பம்சம் ஆகும். தொடர்ந்து கேசட்டுகள் வெளியிடப்படும்.

XII. தேவ ராஜ்யம் பத்திரிக்கை ஊழியம்:

இன்றைய அவசர உலகில் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மக்கள் சொர்ப்ப நேரமே ஒதுக்குகின்றனர். ஆகவே பத்திரிக்கை என்பது ஊழியத்தின் காரியங்கள் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல்ஆவிக்குரிய வாழ்க்கையில் அவர்களை உற்சாகப்படுத்தி வல்லமையான தேவ வார்த்தைகள் செய்திகளாக வெளியிடப்படுகின்றன. இப் பத்திரிக்கை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப்படும்.

XIII. பாடசாலை ஊழியம்:

ஆங்காங்கே பாடசாலைகளை உருவாக்கி மாணவர்களுக்கு ஆண்டவரின் அன்பை வெளிப்படுத்த போதிய தருணம் கொடுக்கப்படுகிறது. சிறந்த ஆசிரியைகள் மூலமாக சிறந்த கல்வியோடு

கூடிய ஒழுக்கம் கற்றுத் தரபபடுகிறது. பள்ளிகள் வாயிலாக ஆண்ட்வரை குறித்த ஒரு ஞானம் சிறுபிள்ளைகளுக்கு உண்டாகிறது. ஆசிரியைகளும் சிறந்த கல்வியை கொடுக்கின்றனர். தென்காசியில் மில்டன் மெட்ரிக்குலேசன் பள்ளி என்ற ஒரு பள்ளியை நடத்தி வருகிறோம். இதன் மூலம் ஆண்டவரின் அன்பை வெளிப்படுத்துகிறோம். வரும் நாட்களில் பள்ளியோடு இணைந்த மாணவர் விடுதியும் தொடங்கப் பெற உள்ளது. சிறந்த கல்வியும் ஒழுக்கமும் இதன் சிறப்பம்சமாகும்.

XIV. வருடாந்திர முகாம்:

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் குற்றாலத்தில் முகாம் ஒன்று நடத்தப்படுகிறது. இம்முகாமின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் அநேக ஆத்துமாக்கள் ஆண்டவருக்குள் புதுப்பிக்கப் பட்டார்கள். பெலன் அடைந்தார்கள். மூன்று நாட்கள் இம்முகாம் நடைபெறும். ஊழியத்தைக் குறித்த தரிசனத்தை மக்களுக்கு ஏற்படுத்தி மக்களை ஊழியம் செய்ய வைப்பதே இதன் நோக்கமாகும். மூன்று நாட்களிலும் கலந்து கொள்ளுகிறவர்கள் ஆவிக்குரிய புதிய பெலனை பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

XV. கடிதத் தொடர்பு ஜெப ஊழியம்:

வறுமையிலும் கண்ணீரிலும் வியாதியிலும் பிடிக்கப் பட்டோரை தேவ வார்த்தையின் மூலமாக கடிதத்தின் வழியே சந்தித்து ஆறுதல் படுத்துகிறோம். அநேகர் கடிதங்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் தங்கள் காரியங்களுக்காக ஜெப விண்ணப்பங்களை அனுப்புகிறார்கள். இவர்களுக்காக தினந்தோறும் ஜெபிப்பது மட்டுமின்றி முதல் சனிக்கிழமை நடைபெறும் பெத்தேல் உபவாச ஜெபத்தில் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. தேவன் கொடுக்கும் பதிலை கடிதம் மூலம் தெரியப்படுத்தி அவர்கள் பிரச்சனைகளை விடுதலையாக்குகிறோம். அநேகரடைய வாழ்க்கையில் தேவன் அற்புதங்களை செய்திருக்கிறார். அநேகர் சாடசியும் சொல்கிறார்கள். இக்கடிதத் தொடர்பு ஜெப ஊழியம் அநேகருடைய வாழ்க்கையில் மனமடிவை நீக்கி சோர்வை அகற்றி புதிய நம்பிக்கையை துளிர்விடச் செய்கிறது. மேலும் தொலை பேசியிலும் அநேகருக்கு ஜெப உதவி ஊழியம் செய்யப்படுகிறது. தொலைபேசியில் ஜெபிக்கக் கேட்கிறவர்களுக்கு உடனே ஜெபித்து ஆறுதல் தரப்படுகிறது. தொலைபேசி ஜெப உதவி எண் 04633 325436.

XVI. இலக்கிய ஊழியம்:

PGM மூலமாக இலக்கிய ஊழியம் செய்யப்படுகிறது. தேவன் மக்களோடு இடைபட விரும்பும் காரியங்களை புத்தகங்கள் வாயிலாக மக்களோடு பேசுகிறோம். புத்தகங்கள் வாயிலாக மக்களை சந்திக்கும் போது தனிப்பட்ட ஒவ்வொருவரோடும் கூட பேசுவதைப் போல பேச முடியும். புத்தகங்களை வாசிப்பவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை மறுமலர்ச்சி அடையும். ஆகவே இலக்கிய ஊழியங்களைச் செய்ய தீவிரமாக பிரயாசப் படுகிறோம். சகோ. வில்லியம்ஸ் அவர்களை பல புத்தகங்களை எழுதுவதற்கு தேவன் உற்சாகப் படுத்தி வருகிறார்.

XVII. மிஷனெரி ஊழியம்:

வரும் காலத்தில் தேவன் கொடுத்த தரிசனத்தின் படி இந்தியா முழுவதும் சுவிசேஷ ஊழியம் பரவுவதற்காக மிஷனெரி ஊழியத்தை PGM மூலமாக செய்ய இருக்கிறோம். பகுதி நேர மிஷனெரிகளை அறிமுகப்படுத்த இருக்கிறோம். இது மட்டுமல்லாது முழு நேர மிஷனெரிகளையும் தென் மற்றும் வட இந்தியாவில் அனுப்ப இருக்கிறோம். இயேசுவே இரட்சகர் என்பதை இந்தியா அறியும் வரை எங்கள் பணியைத் தொடர இருக்கிறோம். இவை தவிர மேலும் பல ஊழியங்களையும் செய்ய தேவன் பெலன் தருகிறார்.

XVIII. ஏதேன் ஜெப தோட்டம்:

அனைத்து மக்களும் ஜாதி இன மத வேறுபாடின்றி ஆண்டவரின் அன்பை ருசி பார்க்க கூடி வருவதற்காக இந்த ஏதேன் ஜெப தோட்ட ஊழியம் தொடங்கப்படுகிறது. இது தென்காசி அம்பை மெயின் ரோட்டில் உள்ள மத்தளம்பாறையில் இயங்குவதற்கு ஜெபித்து ஏற்ற முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இங்கு ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் குணமளிக்கும் ஆராதனை நடத்தப்படவும் மற்றும் தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும் ஜெப வீரர்களைக் கொண்டு சங்கிலித்தொடர் ஜெபம் ஏறெடுக்கப்படவும் பிரயாசப்பட்டு வருகிறோம். இந்த ஜெபத் தோட்ட ஊழியங்களுக்காக விசேஷமாக ஜெபியுங்கள். இங்கு நடைபெறும் ஜெப முகாம் சங்கிலித் தொடர் ஜெபம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

XIX. தொலைபேசி ஜெப ஊழியம்:

அவசர ஜெப தேவை ஏற்படும்போது தேவ பிள்ளைகள் தொலைபேசியில் தொடர்ப ,கொண்டு ஜெபிக்க இந்த ஊழியத்தை செய்து வருகிறோம். அனேகர் தற்போது தொலைபேசியில் ஜெபிக்கக் கேட்கிறார்கள், மனச் சோர்வு ஏற்படும் வேளை ஆப்பரேஷன் நேரம் தேர்வு நேரம் எதிர்பாராமல் ஏற்படும் விபத்து இப்படிப்பட்ட வேளைகளில் மக்கள் தங்கள் ஜெப உதவிக்கு PGM ஜெப உதவியை நாடினால் அவர்களுக்காக விசேஷித்த விதமாக ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. தேவன் உடனே பதில்கொடுத்து அவர்களை ஆறதல்படுத்துகிறார். அவர்களின் தேவை சந்திக்கப்படுகிறது. இந்த ஜெப தேவைக்காக நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய எண் 04633 325436.

XX. ஆத்மீக விடுதலை யாத்திரை:

இவ்வூழியம் 2001 செப்டம்பர் 1ம் தேதி ஏழு நாள் உபவாசத்தை முடித்தபின் தேவன் என்னோடு பேசிய ஊழியம் ஆகும். நோயிலும் வறுமையிலும் வாடும் மக்களுக்கு ஆறதல் சொல்லவும் சுகமளிக்கவும் அவர்கள் இடங்களிலேயே சென்று ஜெபிக்கவும் ஏற்படுத்ததப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அவர் எப்படி ஊழியம் செய்தாரோ அப்படியே ஊழியம் செய்வதாகும். அவர் கிராமங்கள் தோறும் பட்டணங்கள் தோறும் சுற்றித் திரிந்து வியாதியஸ்தர்களை சுகமாக்கினார். விடுதலையை கொடுத்தார். அதைப்போலவே நாமும் செய்ய அழைக்கப்படுகிறோம். இவ்வூழியங்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆசிரியரின் அடுத்து வெளிவரவிருக்கும் புத்தக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

தலைப்புகள்:

1. தேவ ராஜ்யம்
2. யாருக்கு செழிப்பான வாழ்க்கை
3. சுவிசேஷ சூழல்
4. நிம்மதி இங்கே

நீங்கள் இப்புத்தகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வது உறுதி. எனவே நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களோடு பகிர்ந்துகொள்ள தவறாதிர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



(*Bro.* R.D. வில்லியம்ஸ் குடும்பத்தினருடன்)

"இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்." ஏசாயா 8 : 18.

PAUL'S GOSPEL MISSION OF INDIA

P. Box No.19, Tenkasi - 627 811

Ph : 91 - 04633 - 325436